# கிருபையின் செய்தி

சகோதரன் நெவில், உங்களுக்கு நன்றி. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. காலை வணக்கம், நண்பர்களே. கர்த்தருடைய ஆராதனையில் இந்தக் காலையில் இங்கே மீண்டும் இருப்பது நிச்சயமாகவே ஒரு சிலாக்கியமாயிருக்கிறது. இந்தச் சிறிய சபையில் ஜனங்களை வைக்க எங்களுக்கு இடமில்லாததற்கு மிகவும் வருந்துகிறோம். இது அதிக பேரைக் கொள்வதில்லை. ஆனாலும் நீங்கள் இங்கு வந்து இந்தப் பெரிய தியாகத்தைச் செய்ய முன்வந்து எங்களுக்காகப் பொறுமையோடு காத்திருப்பதை குறித்து நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். எங்களால் முடிந்தளவு கர்த்தருடைய வார்த்தையை எப்படி கொண்டு வர வேண்டும் என்பதை நாங்கள் அறிந்துள்ள மிகச் சிறந்த முறையில் உங்களிடத்தில் கொண்டு வர நாங்கள் எங்களால் இயன்றவரை செய்வோம். இப்பொழுது நான்…

2 இந்தச் சிறிய பெண்மணி நடந்து வந்தாள், அவள் இந்தக் காலையில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய ஒரு குழந்தையை உடையவளாயிருக்கிறாள், அதன்பின்னர் அவர்கள் ஒருவிதமாகக் காலதாமதமாக ஓடிக்கொண்டிருந்ததை அவள் கண்டாள், அதனால் அவள் அப்படியே காத்திருக்கப் போவதாகக் கூறினாள். நான் அந்தப் பெண்ணை இதற்கு முன்பு கண்டதேயில்லை, ஆனால் தேவன் அவளை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் அவள் பொறுமையாகக் காத்திருந்ததினால், அவளுடைய இருதயத்தில் அவருடைய மிகுந்த ஐஸ்வரியமான ஆசீர்வாதங்களை அருள வேண்டும் என்றும் நான் ஜெபிக்கிறேன்.

3 இப்பொழுது, இந்த வருடத்தில் வரப்போகும் காலம் குளிராக இருக்கும், எனவே நாம் சபையில் நெருக்கமாக இருக்கும்போது அவ்வளவு வெப்பமாக இருக்காது. தேவன் உங்கள் எல்லோரையும் அபரிமிதமாக ஆசீர்வதிப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்.

4 இப்பொழுது நான் பேசுவதற்கு முன்பு ஒரு சில காரியங்களைக் கூற விரும்புகிறேன். இன்று காலையில், கர்த்தர் சித்தமாயிருந்தால், *சுழற்காற்றினுள் உள்ள காற்றுகள்* என்ற பொருளில் நான் பேசுவேன் என்று முன்பே அறிவித்திருந்தேன். ஆனால் அவர் அதை எனக்கு மாற்றிவிட்டார். கூட்டத்திற்கு வருவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு வரையில் நான் என்ன கூறப் போகிறேன் என்பதை நான் ஒருபோதும் அறியேன். நான் இப்பொழுது அந்தப் பொருளின் பேரில் இரண்டாம் முறையாக முயற்சித்தேன், ஆனால் தேவனிடத்திலிருந்து பதிலை என்னால் திரும்பப் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டேன். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இங்குள்ள ஊழியக்காரர்களாகிய நீங்கள் எல்லோரும் அறிந்துள்ளபடி, நீங்கள்

என்னக் கூறப்போகிறீர்கள் என்பதற்காகக் கர்த்தர் பேரில் காத்திருக்க வேண்டும் என்பதை நான் எப்பொழுதுமே விரும்புகிறேன்.

5 நேற்று மாலை, தனிப்பட்ட தொலைபேசி வழியாக, ஆர்கன்சாஸ் மாநிலத்தின் எங்கோ கீழ்பகுதியிலிருந்து எனக்கு ஒரு—ஒரு அழைப்பு வந்தது, சில ஜனங்கள் இந்த அடுத்த வாரம் இங்கு வந்து குடியேற விரும்பினர், நாங்கள் *ஏழு முத்திரைகளின்* பேரில் ஒரு கூட்டத்தைத் துவங்கப் போவதாக அவர்கள் கேள்விப்பட்டதாகக் கூறினர். நான் இப்போதுதான் *ஏழு சபைக் காலங்களை* அந்நியர்களுக்குப் பேசி முடித்தேன். அவளுடைய கணவருக்கு லூயிவில்லில் ஒரு வேலை தேடுவதற்காகத் திங்கட்கிழமை வருகிறார், எனவே, அவர் வேலை செய்யும்போது, அவர்கள் அந்த *ஏழு முத்திரைகளைக்* கேட்பதற்கு அருகாமையில் தங்கியிருக்கும்படி இருக்கும். நான், "பெண்மணியே, அதற்கு மூன்று மாதங்கள் ஆகும். கூட்டத்தைப் பற்றி விளம்பரப்படுத்தவும், அது போன்றவற்றிற்கும் எங்களுக்கு எந்த இடமும் இல்லை, இங்கே நகரத்தில் அதைக் கவனிக்கவும், ஜனங்களை அமர வைக்கவும் எதுவும் இல்லை" என்று கூறினேன்.

6 நான் எப்பொழுதாவது, ஒரு வேளை, தேவனுக்கு சித்தமானால், அதை எங்காவது பிரச்சாரத்தில் வெளியிட விரும்புகிறேன், சுமார் மூன்று மாத கூட்டத்தை அமைத்து, பிரச்சாரத்தில் அந்தவிதமான அந்த முத்திரைகளினூடாகத் துவங்கலாம். அப்பொழுது ஜனங்கள் அங்கேயே தங்கி இருக்கலாம்.

7 *இங்கே* வெளிப்படுத்தின விசேஷம் 6-ம் அதிகாரம் முதல் 19-ம் அதிகாரம் முடிய நீடிக்கிறது. எனவே நீங்கள் ஏழு முத்திரைகளையும், ஏழு வாதைகளையும், மூன்று ஐயோக்களையும், சிவப்புநிறமுள்ள மிருகத்தின் மேல் வீற்றிருக்கிற ஸ்திரீயானவள் மற்றும் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் இவைகளை நீங்கள் பார்க்கலாம். ஓ, ஏழாம் முத்திரை கொடுக்கப்படுவதற்கு முன்னர், ஏழாவது வாதை விழுவதற்கு முன்பும், ஏழாவது எக்காளம் முழங்குவதற்கு முன்பும், அவற்றை இணைப்பதற்கு அதில் மிக அதிகமானவைகள் இருக்கின்றன. அந்த எல்லாவற்றையும் ஒன்றாக இணைக்கும் அப்படிப் பல காரியங்கள் இருக்கின்றன, அவற்றில் ஒவ்வொன்றும் தன்னிச்சையாகவே ஒரு சிறந்த நாளின் பாடமாக இருக்கிறது.

8 இப்பொழுது நாம் ஜெபத்திற்காகச் சற்று நேரம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக. நாம் ஜெபிப்பதற்கு முன்பாக, இங்குள்ள யாராகிலும் இந்த ஜெபத்தில் நினைவுகூரப்பட விரும்பினால், நீங்கள் உங்களுடைய கரங்களை உயர்த்துவதன் மூலம் தெரியப்படுத்துங்கள். உங்களுடைய இருதயத்தில், இப்பொழுது உங்களுக்கு என்ன தேவை இருக்கிறதோ அதை அப்படியே தேவனை நோக்கிச் சிந்தியுங்கள். அவர் அதை உங்களுக்கு அளிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

9 சர்வ வல்லமையும், கிருபையுமுள்ள தேவனே, ஜெபத்திற்கு பதிலளிக்கிற தேவனாய், தம்முடைய எல்லா பிள்ளைகளின் தேவைகளையும் அறிந்திருக்கிற ஒரு பிதாவாக இருப்பவரே. நாங்கள் பிறப்பதற்கு முன்பே எங்களை நீர் அறிந்திருக்கிறீர், எங்களுடைய அடிச்சுவடுகளை நீர் எண்ணியிருக்கிறீர், எங்களுடைய தலைமயிரும் எண்ணப்பட்டிருக்கிறது, எங்களுடைய வார்த்தைகள் யாவும் உம்முடைய தராசிலே நிறுக்கப்படுகின்றன. ஆகையால் தேவனாகிய கர்த்தாவே, இந்தக் காலையில் நாங்கள் இந்தக் காரியங்களைக் குறித்தும், உமக்கு முன்பாக உள்ள இந்தப் பயபக்தியான கடமையைக் குறித்தும் கவனமாயிருப்போமாக.

10 இன்று காலை, இந்தச் சிறிய கூட்டத்தில், அவர்களில் பலர் தங்கள் கரங்களை உயர்த்தினர், ஒரு வேளை அவர்களுடைய சுகவீனமான சரீரங்களுக்காகவும், இழந்துபோன அன்பார்ந்த ஒருவருக்காகவும் ஜெபிப்பதற்காக இருக்கலாம். அவர்களுடைய இருதயங்களையும், அவர்களுக்குள்ளிருக்கிற எல்லாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர். ஏனென்றால், நீர் இங்கே பூமியின் மேல், இயேசு என்று அழைக்கப்படும் ஒரு மானிட ரூபத்தில், எங்களுடைய கர்த்தராக, நீர் இருதயத்தின் இரகசியத்தை அறிந்திருந்தீர். ஜனங்கள் தங்களுடைய சிந்தையில் கற்பனை செய்து பார்த்த ஒவ்வொரு காரியத்தையும், அவர்கள் என்ன சிந்திக்கிறார்கள் என்பதை நீர் அவர்களுக்கு நேரடியாகச் கூற முடியும், “உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன?” இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து கொண்டார். நீர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறீர் என்று நாங்கள் வேதத்தில் வாசிக்கிறோம். மேலும், “இரண்டு பேராவது, மூன்று பேராவது எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருப்பேன்” என்றும் கூட எழுதப்பட்டுள்ளது. ஆகையால் நீர் இந்தக் காலையில் இங்கே பரிசுத்த ஆவியின் ரூபத்திலிருந்து, ஜனங்களின் இருதயத்தில் உள்ள ஒவ்வொரு வாஞ்சையும் அறிந்திருக்கிறீர்.

11 பிதாவாகிய தேவனே, நீர் அவர்களிடத்தில், “அது முடிந்துவிட்டது. உன்னுடைய வேண்டுகோளுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது, நான்—நான் இந்த உறுதியை உனக்கு இந்நாளில் அனுப்புகிறேன் நீ கேட்டுக்கொண்ட யாவும் அருளப்பட்டாயிற்று” என்று திரும்பிப் பேசுவீராக என்றே நான் உம்மிடத்தில் ஜெபிக்கிறேன்.

12 தேவனே, இரட்சிக்கப்படாதவர்கள், தங்களுடைய கரத்தை உயர்த்தினவர்களை நாங்கள் விசேஷமாக நினைவு கூருகிறோம். இதுவே அவர்கள் கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் வேளையாயிருப்பதாக.

13 இன்றைக்கு கூட்டம் முடிவடைவதற்கு முன்பு, ஏதாவது நடக்கட்டும், கர்த்தாவே, அது உம்முடைய பிரசன்னத்தை ஜனங்களுக்கு மிக நெருக்கமாகக் கொண்டு வந்து கலிலேயாவில்

நடந்த அதே இயேசு தம்முடைய ஜனத்தின் நடுவே நிற்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்வதற்காக, அவர்கள், அக்காலத்து எம்மாவூரிலிருந்து வந்தவர்கள் கொண்டிருந்த அதே உறுதியோடு இன்றைக்கு இங்கிருந்து செல்வார்களாக. நாள் முழுவதும் அவரோடு நடந்து வந்தபிறகு, தங்களுடைய பாதையில் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அவர்கள் அவருடன் பேசினார்கள், அவரும் அவர்களுடன் பேசினார், இருந்தாலும் அது அவரே என்று அவர்களுக்குச் சிறிதும் அறியவில்லை.

14 ஓ, தேவனே, அநேக சமயங்களில் நாங்கள் அந்தவிதமாக இருக்கிறோம். நீர் சூரிய அஸ்தமனத்தில், பறவைகளின் பாடலில், இலைகளின் சலசலப்பிலும், மலர்கள் பூத்துக் குலுங்கும் சத்தத்திலும், சபையின் பாடல்களில் நீர் எங்களிடம் பேசுகிறீர், அது நீர் என்பதை நாங்கள் மிகக் குறைவாகவே அடையாளங் கண்டு கொள்கிறோம். மருத்துவமனையிலுள்ள சுகவீனமான அறைகளில், இன்னும் அநேக இடங்களில், நீர் எங்களிடத்தில் பேசுகிறீர், அது நீர் என்பதை நாங்கள் அரிதாகவே உணருகிறோம்.

15 இப்பொழுது, கர்த்தாவே, நாங்கள் இந்தக் காலையில் எங்களுடைய வீடுகளுக்குத் திரும்புகையில், அவர்கள் செய்தது போல, அடையாளங் கண்டு, நீர் முன்பு அங்கே செய்ததுபோல இன்றைக்கும் எங்கள் மத்தியில் ஏதோ ஒரு காரியத்தைச் செய்வீராக. அவர்களுக்கு முன்பாக நீர் அங்கே செய்திருந்த காரியத்தை அவர்கள் அறிந்திருந்தனர். உம்முடைய சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் நீர் அதைச் செய்தீர், அது உயிர்த்தெழுந்த கர்த்தர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் தங்களுடைய குழுக்களுக்குத் திரும்பிச் சென்று, களிகூர்ந்துகொண்டும், தேவனைத் துதித்துக்கொண்டும் சென்றனர், ஏனென்றால் அவர் உயிரோடிருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள், “வழியிலே அவர் நம்முடனே பேசினபோது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?” என்று கேட்டனர். கர்த்தாவே, அங்கே உம்முடைய பிரசன்னமாகுதல், உம்முடைய சிலுவையேற்றத்திற்கு முன்பு நீர் செய்தது போன்ற ஒரு காரியத்தைச் செய்து, உம்முடைய உயிர்த்தெழுதலை நிரூபித்தது, நீர் அதே இயேசுவாயிருந்தீர் என்றும், அது அவர்கள் உம்மோடு அவர்களுடைய எல்லா உரையாடல்களையும் நினைவுகூரும்படிச் செய்தது. கர்த்தாவே, நீர் வாரம் முழுவதும் எங்களோடு பேசினீர். இப்பொழுது எங்கள் மத்தியில் தோன்றி, தேவையுள்ள ஒவ்வொரு இருதயத்திற்கும் உம்மை வெளிப்படுத்தும். நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில், அவருடைய நிமித்தமாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

16 [ஒரு சகோதரி அந்நிய பாஷையில் பேசுகிறாள். ஒலிநாடாவில் காலி இடம். ஒரு சகோதரன் வியாக்கியானிக்கிறார்—ஆசி.]

17 இப்பொழுது சபையோர் ஜெபிப்பார்கள்:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.
உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.
எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

18 என்னுடைய எழுதுகோல் ஒரு சிற்பியின் கருவியாகவும், என்னுடைய காகிதம் ஒரு சக்கிமுக்கிக் கல்லாக இருந்தால், இப்பொழுது நான் கூறுகிற இந்த வார்த்தைகள் எல்லா ஜனங்களுக்கும் செல்லத்தக்கதாக இதன் மேல் பொறிக்கப்பட வேண்டும்.

19 தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் தம்முடைய ஜனங்களோடு இடைபடுவதற்கு விநோதமான வழிகளை உடையவராயிருக்கிறார். அநேக சமயங்களில் அற்புதங்களின் மூலமாகவும், வரங்கள் மூலமாகவும், அழைப்புகள் மூலமாகவும், அவைகள் மனந்திரும்புதலின்றி, தேவன் தம்முடைய கிருபையினால் அவர்களைத் தம்முடைய ஜனங்களுக்கு அளிக்கிறார்.

20 நான் இப்பொழுது வீட்டில் இருக்கிறேன், ஒருவிதமான ஒரு சிறு விடுமுறையைப் போன்றுள்ளது. வழக்கமாக நான் இந்தச் சமயத்தை வீட்டில் கழிப்பதுண்டு ஏனெனில் ஆண்டின் இந்தக் காலத்தில் நான் அணில் வேட்டைக்கு சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்புவதுண்டு. நான் இந்த வாரம் கென்டக்கியில் என்னுடைய நண்பர்களோடு அணில் வேட்டைக்குச் சென்றிருந்தேன், அது எனக்கு மிகவும் பிடித்த இடம். எப்படியோ எனக்கு உற்சாகமின்மை ஏற்பட்டது, சரியாக என்னால் எந்த அணில்களையும் காண முடியவில்லை என்பதனால் அல்ல, ஆனால் எனக்கு உற்சாகமின்மை தோன்றினது. நான் வீடு திரும்ப வேண்டும் என்று ஏதோ ஒன்று என்னிடம் கூறிக்கொண்டிருந்தது. நான் திரும்பி வரும்போது காரில் உறங்கினேன்.

21 கடந்த ஆண்டு, உங்களுக்கெல்லாம் தெரிந்தபடி, அது அச்சடிக்கப்பட்டு, சாட்சியாகவும், ஒலிநாடாக்களிலும் உள்ளது. நான் இங்கே இந்தியானாவில் ஒரு இடத்தில் உட்கார்ந்து

கொண்டிருந்தேன், அங்கே தேவனாகிய கர்த்தர் இறங்கி வந்து என்னிடத்தில் பேசினார், அதாவது என்னுடைய இரண்டாம் ஊழியம், அது அருகாமையில் நடைபெற ஆயத்தமாயிருந்தது. அப்பொழுது மூன்று அணில்கள் பேசி சிருஷ்டிக்கப்பட்டன. நீங்கள் யாவரும் அந்தச் சம்பவத்தை அறிவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். எப்படியோ, அந்தச் சாலையில் மேலே செல்லும்போது நான்…மற்ற பையன்களை வேட்டையாட இறக்கிவிட்டபோது, இந்த இடத்திற்கு மீண்டும் செல்ல எனக்கு—எனக்கு ஒரு வினோதமான உணர்வு உண்டானது. அது பகல் வெளிச்சத்திற்கு முன்னரே, மழை பெய்து கொண்டிருந்தது, அவர்கள் வேட்டையாட முடியுமா அல்லது இல்லையா என்று கூட எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் அங்கே அந்தப் புல்வெளியில் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தேன். *வேட்டையாடுதல்* என்றால், “தனியே சென்று ஜெபம் செய்தல்” என்று அர்த்தம். நான் காரை நிறுத்திவிட்டு, இறங்கி சாலையின் குறுக்கே நடந்து புதருக்குள்ளாகச் சென்று, பகல் வெளிச்சம் இருப்பதற்கு சற்று முன்பு, அது ஒருவிதமான சாம்பல் நிறமான விடியற்காலமாக இருந்தது.

22 நான் நின்று, வழக்கம்போல ஒரு சிறு ஜெபத்தை ஏறெடுத்து, பிதாவிடம், அதாவது, “எனக்குத் தேவையானதை எனக்குத் தந்தருளும்” என்று கூறினேன். நான் எந்த ஒரு காரியத்தையும் வீணடிப்பதிலும், அல்லது அழிக்கப்படுவதிலும் நம்பிக்கைக் கொண்டிருக்கவில்லை; என்னுடைய ஜீவியத்தில் ஒரு பறவையையும் ஒரு இலக்கு பயிற்சிக்காகவோ அல்லது வேறு எதற்காகவோ சுட்டதேயில்லை. நான் எதை வேட்டையாடுகிறேனோ, அதை நான் புசிக்கிறேன் அல்லது அதைப் புசிக்கிற யாருக்காவது கொடுக்கிறேன். எந்தக் காரியத்தையும் வீணாக்குவதில் எனக்கு நம்பிக்கையில்லை. அந்தக் காரியங்களைச் செய்வதில் எனக்கு நம்பிக்கையில்லை, ஏனென்றால் அது சரியல்ல.

23 அதன்பின்னர் நான் திரும்பி, ஒரு மேய்ச்சல் நிலத்தின் ஓரத்திலிருந்த ஒரு பழக்கமான சிறு பாதையில் செல்லத் துவங்கினேன் அது ‘L’ வடிவத்தில் காட்டில் கடந்து சென்றபோது, விசித்திரமான ஒன்று சம்பவித்தது. அப்படிப்பட்ட ஒரு அனுபவம் எனக்கு அதற்கு முன்பு இருந்ததில்லை. நான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து என்னுடைய இடது பக்கமாக உள்ள மலையின் உச்சியை நோக்கிப் பார்த்தேன், மலையுச்சியிலிருந்து மூன்று வானவில்கள் தோன்றின. அவைகள் ஏறக்குறைய முப்பது அடி உயரத்திற்கு எழுந்து நின்றன. முதலாவதாக, நான் ஒளியைக் கண்டேன், நான் திரும்பிவிட்டேன், ஏனென்றால் அது சூரியோதயமாக இருக்கலாம் என்று நான் நினைத்தேன். இரண்டாவது சிந்தனையில், அது சூரியனை நோக்கியதல்ல, அது தெற்கு நோக்கியதாய் இருந்தது. மற்றுமொரு காரியம், அது மிருதுவாகவும், மேக மூட்டமாகவும், மழையாகவும், எங்கும்

மழையாகவும் இருந்தது. அது ஆகஸ்டு இருபத்தைந்தாம் தேதி, கடந்த வெள்ளிக் கிழமை காலை, எப்படியாய் மழை பெய்து கொண்டிருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். எல்லா இடங்களிலும் மிருதுவான மேகங்கள் நிறைந்திருந்தன.

24 நான் மீண்டும் பார்த்தேன். அங்கே மூன்று வானவில்கள் உயரமாக வளர்ந்து கொண்டிருந்தன. நான் என்னுடைய தொப்பியைக் கழற்றினேன். நான் என்னுடைய துப்பாக்கியைக் கீழே வைத்தேன். நான் என்னுடைய கரங்களை உயர்த்தியவாறு அதை நோக்கி நடக்கத் துவங்கினேன். ஏதோ ஒன்று என்னிடம், "இந்த அருகாமை போதும்" என்று கூறுவது போன்று தோன்றியது. நான் சற்று அருகில் நடந்து செல்ல முடியுமா என்று பார்க்க, உட்கார்ந்து நான் அணிந்திருந்த காலணிகளைக் கழற்றப் போனேன். ஆனால் நான் அதற்கு ஒரு சில கெஜ தூரத்தில் சென்றபோது, நான் அதன் நிறத்தைக் கண்டேன், அது மூடுபனியை போல் சுற்றிலும் நகர்ந்து கொண்டிருந்தது. நான் ஒரு சில நிமிடங்கள் அப்படியே நின்றேன். அது அந்தச் சிறு மலையின் உச்சியிலிருந்து வந்து கொண்டிருந்தது. மூன்று (வலது புறம் ஒன்றும், ஒன்று இடப்புறம் ஒன்றும், மையத்தில் ஒன்றும்) ஒரே கிண்ணத்திற்குள் ஓடுவதை போல நான் கவனித்தேன். அது என்னவாயிருப்பினும் அது உயிராயிருந்தது, அது அசைவாடிக் கொண்டிருந்தது, அதனுடைய அசைவைகளை உண்டாக்கிக் கொண்டிருந்தது. விடியற்காலைப் பொழுதில் சாம்பல் நிறமாக மாறிக் கொண்டிருந்தபோது நான் அங்கேயே நின்றேன்.

25 நான் திரும்பி மீண்டும் பார்த்தேன், அப்பொழுது நான், "ஓ, தேவனே, உமது அடியேனுக்கு என்ன தெரிய வேண்டும் என்று நீர் விரும்புகிறீர்?" என்று நான் கூச்சலிட்டேன்.

26 அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் உள்ளே வந்து, "புதிய ஏற்பாட்டின் இயேசுவானவர் பழைய ஏற்பாட்டின் யேகோவாவாக இருக்கிறார், அவர் தம்முடைய முகமூடியை ஆவியிலிருந்து மனிதனாக மாறினார்." அது நிச்சயமாகவே அவரைக் குறித்த என்னுடைய செய்தியை உறுதிப்படுத்துவதாக இருந்தது. இந்த முப்பத்தியொரு வருடங்கள் வீண்போகவில்லை என்ற உறுதியை எனக்குத் தெரியப்படுத்தினார்.

27 நான் நெருங்கிச் செல்லத் துவங்கினபோது, அது மறைந்து போகத் தொடங்கி, இந்தக் கிண்ணம் போன்ற காரியத்திற்குள் சென்று, அதன்பின்னர் மறைந்து போனது. நான் அருகில் நடந்து சென்றேன். நான் இன்னும் அருகில் செல்லப் பயந்தேன், ஏனென்றால் நான் அங்குச் செல்வதற்கு முன்பாக அவர் என்னை நிறுத்தினார்.

28 நான் திரும்பி அந்த ஒளியை கவனித்தேன், அது எனக்காகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது, நான் கடந்த ஆண்டு அமர்ந்திருந்த மரத்திற்கு நேர் பின்னால், அணில்கள் தோன்றிய இடத்தில் அது இருந்தது. ஏறக்குறைய முப்பத்தைந்து அல்லது நாற்பது நிமிடங்கள்

கழித்து, நான் காடுகளினூடாகவும், சிற்றோடையின் அடிப்பகுதிகள் போன்றவற்றினூடாகவும் சென்று, நான் நான்கு திசைகளாகப் (கிழக்கு, வடக்கு, மேற்கு, மற்றும் தெற்கு) பிரிக்கப்பட்டுள்ள இந்த மரத்தை வந்தடையும் வரை, மரத்தின் நான்கு முனைகள் வெளியே நீண்டு கொண்டிருக்கின்றன. நான் இந்த முனையில் ஏறி, நான் இருந்த இடத்தில் அமர்ந்திருந்தபோது அந்த வேதவாக்கியத்தைக் குறித்து அவர் என்னிடம் கூறினார், “நீ இந்த மலையைப் பார்த்து, ‘பெயர்ந்து போ’ என்று சொன்னால்.” நான் அங்கே சிறிது நேரம் நின்றபோது, வானவில்லைக் குறித்து இன்னும் சிந்திக்காமல், அது என் சிந்தையை விட்டுப் போய்விட்டிருந்தது. நான் அங்கு நின்றேன். அணில் வேட்டைக்கு இது மிகவும் மோசமான ஆண்டாக இருந்து வருகிறது, எல்லாமே தாமதமாகி வருகிறது, அணில்கள் இல்லை.

29 நான், “இதே இடத்தில் தான் கடந்த ஆண்டு தேவன் அணில்களைப் பேசிச் சிருஷ்டிக்கும்படி செய்து எனக்கு அளித்தார்” என்று எண்ணினேன். நான் மீண்டும் என் தொப்பியைக் கழற்றி, “தேவனாகிய கர்த்தரே, நீர் இன்னமும் மாறாத இயேசுவாகவே இருக்கிறீர். நீர் இன்னமும் தேவனாயிருக்கிறீர்” என்றேன்.

30 அப்பொழுது ஏதோ ஒன்று என்னிடத்தில், “இந்த முறை உனக்கு எத்தனை தேவை?” என்று கேட்டது.

31 நான், “நான் சென்ற முறை நான் செய்தவாறே, அதே அளவு” என்றேன். அதன்பின்னர் நான், “இந்த அளவை இன்று பத்து மணிக்கு முன்பு நான் பெற வேண்டும்” என்றேன். அது விநோதமாகத் தென்பட்டாலும், அப்பொழுது நான் மிகவும் மோசமான கொசுக்கள் அதிகம் உள்ள ஒரு பகுதியில் இருந்தேன், அங்குக் கொசுக்கள் நிறைந்திருந்தன, அது ஒருவிதமான சதுப்பு நிலமாயிருந்தது, ஒரு பெரிய கொசு என் கண்ணுக்கு அருகில் கடிக்க வந்தது, நான், “இந்த நாளில் அவைகளில் ஒன்று கூட என்னைத் தொல்லைப்படுத்தாது” என்று கூறினேன், பூச்சி விரட்டி அல்லது அது போன்ற எதுவும் என்னிடம் இல்லை. மேலும், நான் அதை அறிந்து கொள்வதற்கு முன்னர், நான், “முப்பது நிமிடங்களுக்குள் சூரியன் பிரகாசிக்கும்” என்று கூறிவிட்டேன்.

32 எனக்குப் பின்னே, சென்ற வருடத்தில் இருந்ததைப் போன்ற, ஒரு சிவப்பு நிறத்தில் ஒரு இளம் அணில், ஏறக்குறைய எழுபது கெஜ தூரத்திற்கு அப்பால் உள்ள கிளையின் மேல் குதித்து குரைக்கத் துவங்கினது. நான் திரும்பினேன். அந்த நீண்ட தூரத்தில், சக்திவாய்ந்த தொலைநோக்கி வழியாக அவனது கண்ணை என்னால் சிரமப்பட்டுத்தான் பார்க்க முடிந்தது. சும்மா சுட்டேன், அவ்வளவுதான், நான் எந்தக் குறியும் வைக்கவில்லை, அணிலை சுட்டேன். சென்ற முறை நடந்தது போன்றே தோட்டா சரியாக அதன் கண்ணைத் துளைத்தது.

33 நான் காடுகளினூடாகச் சென்றேன். சரியாகப் பத்து மணிக்கு மூன்று நிமிடங்கள் இருக்கும்போது, நான் என்னுடைய மூன்றாவது

அணிலை சுட்டேன், கடந்த ஆண்டு இருந்தது போலவே, சரியாக அதேவிதமாகவே உள்ளது. பத்து மணிக்கு மூன்று நிமிடங்கள் முன்பு. தேவனே, என்னுடைய பயபக்திக்குரிய நியாயாதிபதி, ஒரு கொசுவும் கூட நாள் முழுவதும் ரீங்காரமிடவில்லை, அவை எடைபோடக்கூடியவை என்றால், டன் கணக்கில் அங்கு இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் ஒன்றைக்கூட காணவும் இல்லை கேட்கவும் இல்லை. சத்தம் எங்காகிலும் கேட்கிறதா என்று உற்று கேட்டேன். அப்பொழுது நான் ஒரு ரீங்காரமிடும் சத்தம்போல் கேட்டேன், “எங்கோ ஒன்று உள்ளது” என்று எண்ணினேன், அதை உற்று கேட்டபோது, அது நெடுஞ்சாலையில் வெகுதூரத்தில் இருந்த ஒரு சரக்கு வண்டி என்பதை உணர்ந்தேன். அந்த நேரத்திலிருந்து சரியாக முப்பது நிமிடங்களில் சூரியன் நன்றாகவும் பிரகாசமாகவும் பிரகாசித்தது.

34 அதன்பின்னர் நான் அந்த இடத்திற்கு திரும்பி வந்தேன். நான் “வரம்பு” என்று கூறியபோது, அது *ஐந்து அணில்களைக்* குறிக்கும் என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன், அது இந்தியானாவில் வரம்பாகும். ஆனால் கடந்த ஆண்டு எனக்கு நினைவிருக்கிறது, என் உணவிற்கு எத்தனை அணில்கள் தேவைப்படும் என்று அவர் என்னிடம் கேட்டபோது, நான் “மூன்று” என்று கூறினேன். நான் இந்த மூன்றையும் பெற்றுள்ளேன். எனவே நேற்று நான் திரும்பிச் சென்று, மீண்டும் அதே இடத்திற்கு சென்று கொண்டிருந்தபோது, ஏதோ ஒன்று, “போகாதே. சாலையைக் கடக்க வேண்டும்” என்றது.

35 சரியாகப் பத்து மணிக்கு, சரியாகப் பத்து மணிக்கு, என்னுடைய கடிகாரத்தின் பத்து மணிக்கு, நான் இந்தியானாவின் வரம்பிற்குள் ஐந்தாவது அணிலை சுட்டேன். அங்கே மூன்று வானவில்கள் இருந்ததை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், அங்கே மூன்று காரியங்கள் கூறப்பட்டிருந்தன, மூன்று அணில்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. மூன்று காரியங்கள் இருந்தன: பத்து மணிக்குள் மூன்று அணில்கள், கொசுக்கள் இல்லை, முப்பது நிமிடங்களில் சூரியன் பிரகாசிக்கும். அதைக் குறித்து சாட்சி கொடுக்க மூன்று பேர் இருந்தனர்: சகோதரன் பாங்க்ஸ் உட், என்னுடைய மகன் பில்லி பால், அவனுடைய மகன் டேவிட் ஆகியோர் அதற்குச் சாட்சியமளிக்க.

36 அந்த மூன்று வானவில்களை நான் கண்டபோது, அவை கர்த்தருடைய தூதன் தோன்றிய ஒளிவட்டத்தின் விட்டத்திற்கு இணையான அகலத்தை கொண்டிருந்தன, ஆனால் அவை மூன்றும் ஒன்றாக ஓடிக்கொண்டிருந்தன. ஓ, அது என் இருதயத்திற்கு எவ்வளவு உதவியாயிருந்தது, தேவன், இயேசு, ஜனங்கள் நினைப்பதுபோல் வெறுமனே ஒரு மனிதன்மாத்திரமல்ல, இந்நாளைய நவீன எண்ணம் கருதுவது போல ஒரு தீர்க்கதரிசி மட்டுமல்ல என்பதைக் அறிந்தபோது, அவரே பழைய ஏற்பாட்டின் யேகோவாவாக மாம்சமாகி நம் மத்தியில் வாசம் பண்ணினார். அது

நிச்சயமாகவே எனக்கு ஆறுதல் அளித்தது. அப்பொழுது, தேவன் அநேக ஜனங்களைத் தேடினார் என்ற அந்தப் பொருளின் பேரில் சிந்தித்துப் பார்த்தேன்.

37 இப்பொழுது, "ஒருத்துவம்" அல்லது "இயேசு மாத்திரம்" என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஒரு கூட்ட ஜனங்கள் உண்டு. அவர்களுடைய கோட்பாட்டின் பேரில் அவர்களோடு எனக்கு உடன்பாடு கிடையாது. மூன்று வித்தியாசமான தேவர்கள் உண்டு என்று கூறும் அந்தத் திருத்துவக்காரரின் குழுவுடன் நான் இணங்குவதில்லை—இணங்குவதில்லை. அது திரித்துவக் கொள்கையின் எல்லைக் கருத்து. ஆனால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்றும், அவைகள் மூன்றும் ஒரே தேவனின் உத்தியோகங்கள் என்றும் நான் விசுவாசிக்கிறேன். அவர் பிதாத்துவத்தில், அக்கினி ஸ்தம்பத்தில் வாசம் செய்தார்; அவர் குமாரத்துவத்தில், இயேசு கிறிஸ்துவில் வாசம் செய்தார்; அவர் இப்பொழுது தம்முடைய சபையில் பரிசுத்த ஆவியில் ஜீவிக்கிறார். அதே கர்த்தராகிய இயேசு மாம்சமாகி நமக்கு மத்தியில் வாசம் செய்து, பரிசுத்த ஆவியின் ரூபத்தில் இன்றைக்கு நம்மோடு இருக்கிறார்.

38 எல்லா அனுபவங்களிலுமே! நான் முதலில் திரும்பி அதைக் கண்டபோது, அது எங்கோ ஒரு—ஒரு மேகத்தின் வழியாக எட்டிப் பார்க்கும் சூரியனாக இருக்கலாம் என்று முதலில் நினைத்தேன், ஆனால் அது சூரிய நேரத்துக்கு முன்னதாயிருந்தது. அதன்பின்னர் நான் மீண்டும் திரும்பிப் பார்த்தபோது, அது ஒரு வெளிச்சம் அல்ல, அது வானவில்களாயிருந்தன. அதன்பின்னர் நான் அதைக் கண்டபோது, நான் முழுவதும் மரத்துப் போய்விட்டேன்.

39 யாரோ ஒருவர் என்னிடத்தில், "உனக்குச் சத்தமிட வேண்டும் என்று தோன்றவில்லையா?" என்று கேட்டார். இல்லை, நான் சத்தமிட வேண்டும் என்று உணரவில்லை. அந்த அனுபவங்கள் உங்களை ஒருபோதும் கூச்சலிடுவது போன்ற உணர்வை உண்டாக்குகிறதில்லை. அவைகள் உங்களை நங்கூரமிடப்படுவதை உணரச் செய்கின்றன, அங்கே உங்களுக்கு ஏதோ ஒரு காரியம் கூறுகிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், ஒரு திருப்தியான உணர்வு.

40 இப்பொழுது, அந்தக் காரியங்கள் உண்மையாயிருக்கின்றன. அநேக சமயங்களில் சில ஜனங்கள், "ஓ, நான் அதைப் போன்ற காரியங்களில் நம்பிக்கைக் கொள்வதில்லை" என்று கூறுகிற காரியங்கள் நம்மிடம் உள்ளன என்பதை நான் அறிவேன். நான் அதற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது, எனக்குத் தெரியாது. உண்மையென்று நான் அறிந்துள்ளவைகளுக்கு மாத்திரமே நான் உத்தரவாதம் அளிக்க முடியும். இந்த வேதாகமத்தை எழுதிய சர்வ வல்லமையுள்ள தேவன், நான் அவருடைய ஊழியக்காரன், அது உண்மை என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

41 அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், கர்த்தருடைய வருகைக்குச் சற்று முன்னர், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த நாளில், இயேசு, “வானத்திலும் பூமியிலும் அடையாளங்கள், பெரிய காட்சிகள், பறக்கும் தட்டுகள், ஏவுகணைகள், காலத்தின் குழப்பமும், ராஜ்யங்களுக்கு இடையே நெருக்கமும், பூமியின் மேல் பயங்கரமான காட்சிகளும் தோன்றும்” என்று கூறினார். நாம் அந்தக் காரியங்களைக் காணும்படியாக அந்த நாளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

42 இப்பொழுது, இந்தக் காலையில் நான் தெரிந்து கொண்ட செய்திக்காக, நீங்கள் என்னோடு வேத வாக்கியங்களைச் சகரியாவின் பக்கமாகத் திருப்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது என்னுடைய…சகரியா, 4-ம் அதிகாரம்.

43 இந்தக் காரியங்களை உங்களுக்குக் கூற வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாக இருந்தது. அநேக முறை நிகழ்கின்ற சம்பவங்களை நான் பேசுவதில்லை—பேசுவதில்லை, அதைக் கூறுவதில்லை. ஆனால் இது மிகவும் சிறப்பானதாக இருந்ததால் இதைச் சபைக்குக் கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை. இது கூறப்பட்டே ஆக வேண்டும்! நான் தேவனுக்கு முன்பாக நிற்கிறேன், அது உண்மை. தேவன் ஒருவர் உண்டு என்பதை நான் அறிவேன், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாகிய இம்மானுவேல் என்பதையும், இன்றைக்கு பரிசுத்த ஆவியின் ரூபத்தில் தம்முடைய ஜனங்கள் மத்தியில் வாசம் செய்கிறார் என்பதை நான் அறிவேன். அடையாளங்களும் அற்புதங்களும் வெளிப்படும்போது, கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது என்பதை நான் அறிவேன்.

44 நாம் இப்பொழுதுதான் ஏழு சபைக் காலங்களினூடாகப் பார்த்தோம், நாம் கடைசி லவோதிக்கேயா சபைக் காலத்தில் இருக்கிறோம் என்பதையும் கற்றுக்கொண்டு, சபையானது அலட்சியமாயும், குளிர்ந்துபோய், ஸ்தாபனமாக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்படும்போது; ஸ்தாபனங்கள் அதைக் கைப்பற்றி, அதைப் புசித்துவிடும் என்பதை அறிந்து கொண்டோம். ஆனால் ஒரு சிறு மீதியானவர்கள் விடப்பட்டிருப்பார்கள் என்ற ஒரு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டுள்ளது. எங்கும் எல்லாவிடங்களிலும் சிதறியுள்ள ஒரு சபை இருக்கும், ஆனால் தேவன் அதை ஒன்று சேர்த்து, அதை மகிமைக்குள் எடுத்துக் கொள்ளுவார்; பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு சிறு குழு எங்கோ கர்த்தர் பேரில் காத்திருக்கிறது.

45 அதன்பின்னர் அன்றொரு நாள் நான் *தானியேலின் எழுபது வாரங்கள்ப்* பிரசங்க பீடத்தில் நின்று பிரசங்கித்து கொண்டிருந்தபோது, ஏதோ ஒன்று என்னைத் தொட்டது, என்னால் அதிலிருந்து ஒருபோதும் விலகிச் செல்ல முடியவில்லை. நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிற வேளையைக் காணும்படியாகவே! நான்

எங்காவது சென்று வேறு ஏதோ காரியத்தைச் செய்ய விரும்புகிறேன், அதை என்னுடைய சிந்தையிலிருந்து விலக்கி வைக்க வேண்டும். எனக்கு அநேக அன்பானவர்கள் இரட்சிக்கப்படாமல் இருக்கின்றனர். அவர்கள் இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்கிறேன்? நான் என்ன செய்ய முடியும்? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருக்கிறேன். கர்த்தராகிய இயேசுவின் நாட்கள் முதற்கொண்டே தேவன் உலகத்தில் ஒருபோதும் செய்யாத மகத்தான அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்திருக்கிறார், காலத்தின் எல்லா சரித்திரத்திலும் அவர் அதை ஒருபோதும் செய்யவில்லை. அது உலகம் முழுவதும் சென்றுவிட்டது. இன்னமும் உலகம் தொடர்ந்து மோசமாகிக் கொண்டே வருகிறது. ஆனால் நாம் லவோதிக்கேயா சபையின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் நினைவில் கொள்ள வேண்டும், அங்கே அவர்கள் மோசமடைவார்கள், அவர்கள் மோசமடைவார்கள் என்று அது கூறியுள்ளது.

46 அதன்பின்னர் நான் இந்தக் காலைத் தெரிந்துகொண்டேன், அதாவது அந்தச் செய்தியானது மிகவும் தாக்கப்பட்டு இருந்ததால், மற்றொரு காரியம் என்னை மிகவும் பின்தொடர்ந்தது, அது கிருபையைப் பற்றிப் பிரசங்கிப்பதே. நான் இன்று காலைச் சகரியா 4-ம் அதிகாரத்தில் ஒரு பாகத்தை வாசிக்கையில் அதன் பேரில் பேச விரும்புகிறேன்.

> *என்னோடே பேசின தூதன் திரும்பி வந்து நித்திரைபண்ணுகிற ஒருவனை எழுப்புவதுபோல் என்னை எழுப்பி:*
>
> *நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; அதற்கு நான்: இதோ, முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும், அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப்போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது.*
>
> *அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது என்றேன்.*
>
> *நான் என்னோடே பேசின தூதனை நோக்கி: ஆண்டவனே, இவைகள் என்னவென்று கேட்டேன்.*
>
> *என்னோடே பேசின தூதன் மறுமொழியாக: இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார்; ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன்.*
>
> *அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற* ***கர்த்தருடைய*** *வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய*

*ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின்* ***கர்த்தர்*** *சொல்லுகிறார்.*

47 உங்களுக்குப் புரிகிறதா? செய்தியானது சில பலங்களினாலோ அல்லது பராக்கிரமங்களினாலோ வராது, ஆனால் தேவனுடைய ஆவியினால் வரும்! கடைசி வசனம், 7-வது வசனம்.

*பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார்.*

48 வேதாகமத்தைப் படிப்பவர்களாகிய நாம் அனைவரும் இந்த வேதவசனத்தை நன்கு அறிந்திருக்கிறோம். ஆலயத்தைப் புதுப்பிக்க ஆயத்தமான நேரத்தின்போது இது நடந்தது என்பதை நாம் அறிவோம். செருபாபேல் ஜனங்களின் மத்தியில் ஒரு மகத்தான பிரபுவாக இருந்தான், அவன் ஆலயத்திற்கு அஸ்திவாரம் போட்டான். இப்பொழுது, நீங்கள், நாம் நினைப்பதுபோல, நீங்கள் உங்களுடைய ஆவிக்குரிய சிந்தனையை, அபிஷேக மேலுறையை இந்தக் காலையில் தரித்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த மகத்தான இளவரசன் கர்த்தருடைய ஆலயத்தைத் திரும்பக் கட்ட தீர்மானித்திருந்தான். அதன்பின்னர், அவன் அதைச் செய்தபோது, அவன் அஸ்திபாரக் கல்லை நாட்டியிருந்தான்.

49 நாம் தொடர்ந்து வாசிக்கையில், தேவன், "செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டது அவனே தலைக்கல்லை கொண்டு வருவான்" என்றார். அவர் "மூலைக்கல்லை" கொண்டு வருவான் என்று ஒருபோதும் கூறவில்லை என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவன் "தலைக்கல்லை" கொண்டு வருவான்.

50 இயேசு பிரதான மூலைக்கல் என்றும், அவரே தலைக்கல் என்றும் வேதம் கூறுகிறது என்பதை நாம் அறிவோம். இப்பொழுது நாம் ஒரு சில நிமிடங்கள் சிந்தித்துப் பார்ப்போமானால், ஏழாம் சபையின் செய்தியாளன் "பிள்ளைகளுடைய விசுவாசத்தை பிதாக்களிடத்திற்கு திரும்ப அளிப்பான்" என்பதாகும். வேறு வார்த்தைகளில் கூறினால், ஆவியின் வல்லமையின் கீழ் சபையை மீண்டும் கட்டுவார். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்" என்று கர்த்தர் உரைக்கிறார். ஸ்தாபன அமைப்பினாலோ அல்ல, ஸ்தாபனத்தினாலோ அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியினால் தேவன் கடைசி நாளில் சபையைக் கொண்டு வருவார்.

51 செருபாபேல், யோசுவாவோடு இருந்த இளவரசன், இந்தத் தலைக்கல்லைக் கொண்டு வர வேண்டியவனாயிருந்தான். அவன்

அஸ்திபாரத்தைப் போட்டிருந்தான், அவன் ஜனங்களை மீண்டும் அஸ்திபாரத்திற்கு முன்னடையாளமாகக் கொண்டு சென்றிருந்தான்.

52 இந்தக் குத்துவிளக்குகள் போன்றவை யூதர்களையும், சபைகளையும் சுட்டிக்காட்டுகின்றன என்பதை நாம் யாவரும் அறிவோம். அவர்கள் "ஒலிவக் கிளைகள்" என்று வேதம் இங்கே கூறியுள்ளது. ஒலிவக் கிளை, நாம் அடக்கப்பட்ட ஒலிவ மரத்தின் வேரில் ஒட்டப்பட்ட காட்டுக்கிளையாய் இருக்கிறோம்; புறஜாதிகளே! இந்த இரண்டு கிளைகளிலிருந்தும் தூபவர்க்கக் குழாய்கள் புறப்பட்டு ஏழு பொன் குத்துவிளக்குகளுக்குள்ளாகச் சென்று, ஏழு சபைக் காலங்களுக்கு வெளிச்சம் உண்டாக்குகிறது.

53 இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், நாம் கடந்து வந்த பாடங்களின் பேரில் நம்முடைய போதனையில், நாம் அந்தப் பெரிய கூர்நுனி கோபுரத்தை எடுத்து, அதைச் சிறிது நேரம் ஆராய்ந்தோம், அதாவது ஏனோக்கு அதைக் கட்டியிருக்க வேண்டும். கூர்நுனிக்கோபுரத்தில் தலைக்கல் ஒருபோதும் வைக்கப்படவில்லை. நான் அங்குச் சென்றிருக்கிறேன். அதன் கட்டிடக் கலையை இந்நாள் வரைக்கும் மாற்ற முடியாது. ஒரு கூர்நுனிக்கோபுரத்தை கட்டக்கூடிய எந்த இயந்திரங்களும் நம்மிடம் இல்லை, அணுசக்தியைத் தவிர, ஒரு கூர்நுனிக்கோபுரத்தை கட்டக்கூடிய வேறு எந்தச் சக்திகளும் இல்லை, ஏனென்றால் அது மிகவும் பிரமாண்டமாயுள்ளது. டன்கள் கணக்கில் எடையுள்ள கற்கள் ஆகாயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன, ஒரு மெல்லிய சவரக்கத்தியும் கூட உள்ளே நுழைய முடியாதபடிக்கு அவை ஒன்றாகப் பொருத்தப்பட்டுள்ளன…அவைகள் சிமென்ட் பூசப்பட்டதல்ல, அவைகள் ஒன்றோடொன்று இணையும்படியாக வெட்டப்பட்டிருக்கின்றன.

54 அந்தவிதமாகத்தான் இயேசு கிறிஸ்துவின் சரீரம் இருக்க வேண்டும், பரிசுத்த ஆவியினாலே, தேவனுடைய மகத்தான கருவியினாலும் ஆயுதத்தினாலும் வெட்டப்பட்டு, நாம் ஒரே நபராக இணைக்கப்படுவோம். நாம் பிரிந்திருக்கவில்லை. நாம் ஒரே நபராய் இருக்க வேண்டும்! அந்தவிதமாக எந்த இயந்திரமும் அதைச் செய்ய முடியாது என்பதையே அது காண்பிக்கிறது. அதைச் செய்யத் தேவன் தேவை. எந்த ஸ்தாபன அமைப்பு முறைமையினாலும், எந்த விடுதிகளினாலும், இந்தக் காரியங்கள் எதுவுமே அவர்களுடைய நோக்கங்கள் எவ்வளவு நல்லதாயிருந்தாலும், அதை ஒருபோதும் செய்ய முடியாது. அவர்களால் அதை ஒருபோதும் செய்ய முடியாது, ஏனென்றால் இதைச் செய்யத் தேவனான, பரிசுத்த ஆவி தேவைப்படுகிறது.

55 என்னுடைய சட்டைப் பையில் ஒரு டாலர் நோட்டு இல்லை என்று நான் நினைக்கிறேன். ஆனால் அங்கே…ஆம், இருக்கிறது, என்னிடம் ஒரு டாலர் நோட்டு உள்ளது. மன்னிக்கவும். இந்த டாலர் நோட்டின் பின்புறத்தில் இடது பக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முத்திரை உங்களை நோக்கிப் பார்ப்பதை

நீங்கள் காண்பீர்கள். என்னிடத்திலிருந்து, அது இடது பக்கமாக இருக்கும்; உங்களுக்கு வலது பக்கம். அது கழுகு. மேலும் அதில் ராணுவ உடைகள் போன்றவை உள்ளன. ஆனால் எனக்கு *இங்கே* இந்தப் பக்கத்தில், வலது பக்கத்தில், நீங்கள் கூர்நுனி கோபுரத்தைக் காண்கிறீர்கள். நீங்கள் கவனியுங்கள், கூர்நுனிக்கோபுரத்திற்கு மேலே தலைக்கல் உள்ளது, அங்கே கீழே, “மகத்தான முத்திரை” என்று எழுதப்பட்டுள்ளது. நாம் அடையாளங்கண்டு கொள்ள வேண்டிய நம்முடைய நாணயத்தின் மூலமும் கூட, எந்த நாத்திகனாலும் கிறிஸ்தவ மார்க்கத்தை அடியோடு ஒழிக்க முடியாது. ஒவ்வொரு கடிதத்திலும் நீங்கள் குறிப்பிடும் தேதி நமது கர்த்தர் பிறந்த ஆண்டை அறிவிக்கிறது. ஒவ்வொரு நாள் காட்டியும் அவரைக் குறித்து பேசுகிறது. நமது நாணயத்திலும், தலைக்கல்லுக்கும் கூடக் கிறிஸ்துவாயிருக்கிறது! ஏன் அவர்கள் கூர்நுனி கோபுரத்தின் மேல் தலைக்கல்லை வைக்கவில்லை? ஏனென்றால் தலைக்கல் வந்தபோது அது புறக்கணிக்கப்பட்டது.

56 ஆனால் இப்பொழுது, தீர்க்கதரிசனத்தின்படி, தலைக்கல் வரும். தலைக்கல் வரும்போது, அதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், செய்தியைக் கூறப்போகும் ராஜகுமாரன், “கிருபையுண்டாவதாக! கிருபையுண்டாவதாக!” என்று ஆர்ப்பரிப்பான். ஒருவனும் பெருமைபாராட்டாதபடிக்கு, நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கிருபையின் செய்தியானது ஒரு அவமானமாகுமளவிற்கு மனுஷருடைய பாதத்தின் கீழ் மிதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் சிலர் நித்திய பாதுகாப்பிற்குள்ளாக ஓடுகிறார்கள், சிலர் ஒவ்வொரு காரியத்திற்கும் வெளியே ஓடுகிறார்கள். ஆனால் உண்மையான கிருபையின் செய்தி மாறாமல் உள்ளது, அங்கேதான் சாத்தான் அதைச் சபையிலிருந்து அகற்ற முயற்சிக்கிறான். ஆனால் நாம் யாவரும் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

57 எனவே இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையில், தேவனாகிய கர்த்தர் அங்கு வந்து, அது உண்மை என்பதை உறுதிப்படுத்த முடிந்தால், அது மாத்திரமல்ல, ஆனால் அவர் தம்முடைய வார்த்தையினால் அது சத்தியம் என்பதை உறுதிப்படுத்துகிறார், மேலும் அவர் அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் அது சத்தியம் என்பதை உறுதிப்படுத்துகிறார், கிருபையே சத்தியமாயும் கூட இருக்கிறது. அப்படியானால் கிருபை தவறானது என்றும், “கிரியைகளினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்” என்றும் ஏன் யாராவது குறைகூற முடியும்? நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம், கிரியைகளினால் அல்ல. நாம் இரட்சிக்கப்பட்டோம் என்பதை கிரியைகள் காண்பிக்கின்றன. ஆனால் தேவனுடைய கிருபையே உங்களை இரட்சிக்கிறது. கிருபை உங்களை இரட்சிக்கிறது. கிருபை என்பது தேவன் உங்களுக்குச்

செய்வதாகும். கிரியைகள் என்பது தேவன் உங்களுக்குச் செய்ததை எண்ணி அதற்குப் பாராட்டுதலை தெரிவிக்க நீங்கள் தேவனுக்கு செய்யும் ஒன்றாகும். ஆனால் நீங்கள் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்!

58 சில ஜனங்கள், “நான் சபையில் சேர்ந்து, என்னுடைய பெயரைப் புத்தகத்தில் பதிவு செய்யப்போகிறேன், அது மட்டும்தான் நான் செய்ய வேண்டியது” என்று நினைக்கிறார்கள். சில ஜனங்கள், “நான் சத்தமிடுகிறபடியால், நான் செய்ய வேண்டியதெல்லாம் அவ்வளவுதான்” என்று நினைக்கிறார்கள். மற்றவர்கள், “நான் அந்நிய பாஷையில் பேசுகிறபடியால், நான் செய்ய வேண்டியதெல்லாம் அவ்வளவுதான்” என்று நினைக்கிறார்கள். சிலர், “வியாதிகளைச் சுகப்படுத்த எனக்கு வல்லமை இருப்பதால், நான் செய்ய வேண்டியதெல்லாம் அவ்வளவுதான்” என்று நினைக்கிறார்கள். அது அல்ல! தேவனுடைய கிருபையே உங்களை இரட்சிக்கிறது, தேவனுடைய அற்புதமான கிருபை. என்னால் எந்தத் தகுதியிலும் நம்பிக்கை வைக்க முடியாது. சிலர், “பாருங்கள், ஒரு பெரிய மனிதன் இருக்கிறார். அந்த மனிதன், அவர் எழும்பி நின்று *இதைச்* செய்வதை நான் கேட்டிருக்கிறேன், அவர் எழும்பி நின்று *அதைச்* செய்வதை நான் கேட்டிருக்கிறேன்” என்கின்றனர்.

59 பவுல் முதலாம் கொரிந்தியர் 13-ல், “நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், எனக்குப் பகுத்தறிதல் இருந்தாலும், போஷிக்க எனக்கு வரங்கள் இருந்தாலும், நான் என்னுடைய எல்லா பொருட்களையும் ஏழைகளுக்குப் போஷிப்பதற்காகவே எடுத்துக் கொண்டாலும், என்னால் விசுவாசத்தோடு மலைகளைப் பெயர்க்க முடிந்தாலும், எல்லாவற்றையும் புரிந்துகொள்ளும்படியான அறிவை உடையவனாயிருந்தாலும், கிருபையாகிய அன்பானது உள்ளே வரும் வரைக்கும் நான் ஒன்றுமில்லை” என்றான். தேவன் அதைச் செய்ய வேண்டும். நீங்கள் இந்த எல்லாக் காரியங்களையும் செய்தபிறகும் இழக்கப்படலாம். கிருபையே உங்களை இரட்சிக்கிறது, மானிட வர்க்கத்திற்கான தேவனுடைய கிருபையே.

60 அவரைக் குறித்து சிந்திப்பதே! வெள்ளிக் கிழமை காலைப் பிரசன்னமான பிறகு, உடனடியாக அந்தக் கிருபையைக் குறித்து நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன், விடியற்காலையில், பின்னர் அங்கே அந்த வயல்வெளியில் நான் ஒரு மரக்கட்டையின் மேல் அமர்ந்திருந்தபோது, என் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. “ஓ தேவனே, உம்முடைய கிருபை என்னை இரட்சிக்கத் தாழ்த்தினது. என்னைப் போன்ற ஒரு ஏழ்மையான, படிப்பறியாத நிர்பாக்கியமுள்ளவன்மேல் நீர் ஏன் இப்படிப்பட்ட இரக்கம் கொண்டுள்ளீர்? எங்களுடைய தாழ்மையான சிறிய கூடாரத்திற்கு நீர் எப்படி இறங்கி வந்தீர், அங்கே சமாதானமும், தாழ்வான வாழ்க்கை முறையும், ஏழ்மையும், இவ்வுலகில் ஒன்றுமே இல்லாதவர்களாய்,

இன்னமும் உம்முடைய கிருபை பரிசுத்த ஆவியினாலே எங்கள் இருதயங்களில் பரவி, நீர் எங்களுடைய சுகவீனங்களை சுகப்படுத்தி, எங்களுடைய பாவங்களிலிருந்து எங்களை இரட்சித்து, சரியாகக் கூறினால், எங்களை உம்முடைய ஜனங்களாக ஆக்கி, எங்களோடு இடைபடுகிறீரா?”

61 அப்பொழுது நான் தாவீதைக் குறித்து சிந்தித்துப் பார்த்தேன், அவன் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று எண்ணி, “கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது, தேவனுடைய பெட்டி, ஆட்டுத் தோள்களில் செய்யப்பட்ட கூடாரத்தில் வாசமாய் இருப்பது நல்லதல்ல” என்றான்.

62 தேவன் தீர்க்கதரிசியிடம், “என் தாசனாகிய தாவீதை நோக்கி, நான் அவனை ஆட்டுத் தொழுவத்திலிருந்து கொண்டு வந்தேன், தன்னுடைய தகப்பனாருடைய ஆடுகளிலிருந்து சில ஆடுகளை மேய்த்து, ‘பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்’ என்று சொல்” என்றார்.

63 நான் தேவனுடைய கிருபையைக் குறித்து சிந்தித்துப் பார்த்தேன், எப்படி அவரால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்! அப்பொழுது என்னைப் போன்ற ஒரு பரிதாபமான பாவப்பட்டவனை அழைத்து, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், மற்றவர்கள் இரட்சிக்கப்படுவதைக் காணவும், அவர்கள் சுகமடைவதைக் காணவும் எனக்குத் தருணம் அளித்து; பிரிந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேர்வதையும்; பாலான வாழ்க்கை மீண்டும் சரியான நிலையில் வருவதையும் காண எனக்குக் கிருபை அளித்தார். எனக்குக் கிருபை அளிக்கும்படியாக! நான், “ஓ, அது ஒரு அற்புதமான கிருபை!” என்று எண்ணினேன். பின்னர், காட்டிற்குள் வரும் ஒரு தரம் தாழ்ந்த, இழிந்த அணில் வேட்டைக்காரனிடம் வந்து, *வானவில்* ரூபத்தில் தம்மை உருவாக்கி, அது “உடன்படிக்கை” என்று பொருள்படும், அவர் எனக்குப் பிரசங்கிக்கக் கொடுத்த ஒரு செய்தியோடு, அங்கே அதை ஒரு உடன்படிக்கையாக உருவாக்கி, அதற்குப் பின்னால் அவர் இருக்கிறாரே! அவர் அதற்குப் பின்னால் இருப்பார், ஏனென்றால் செய்தி இயேசு கிறிஸ்துவினுடையதாயும், அவருடைய மகிமையாயும் உள்ளது.

64 எப்படியோ அவர் என்னை உலகம் முழுவதும், உலகத்தைச் சுற்றி, தேசங்களிடத்திலும் கோடிக்கணக்கான ஜனங்களிடத்திலும், இலட்சக்கணக்கானோர் கர்த்தரிடம் வந்து அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதைக் கண்டேன், அவர்கள் அவருடைய நன்மையினால் நிரப்பப்பட்டு, அவருடைய வல்லமையினால் பரிசுத்தமாக்கப்பட்டதைக் கண்டேன், அவர்கள் அவருடைய மகத்தான சர்வ வல்லமையினால் சுகமாக்கப்படுவதைக் கண்டேன். அப்பொழுது நான் தீர்க்கதரிசியைப் போலக் கதறி, “அது வல்லமையினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல,

ஆனால் அது தேவனுடைய ஆவியினால் உண்டானது” என்று கூற முடியும். கல்வியினால் அல்ல, வேத சாஸ்திரத்தினால் அல்ல, ஆனால் தேவனுடைய ஆவியினால் அவர் ஜனங்களை இரட்சிக்கிறார். தேவனுடைய ஆவியினால் அவர் ஜனங்களைச் சுகப்படுத்துகிறார். தேவனுடைய ஆவியானவரே ஜனங்களுக்குச் செய்தியை அளிக்கிறார். தேவனுடைய ஆவியே வார்த்தையை உறுதிப்படுத்துகிறது.

65 நாம் இன்றைக்கு வேத சாஸ்திரிகளை உடையவர்களாயிருக்கிறோம், நாம் தெய்வீக வேதசாஸ்திரிகளை உடையவர்களாயிருக்கிறோம், உலகம் முழுவதிலும் மகத்தான மனிதர்களை நாம் பெற்றுள்ளோம், அவர்கள் புத்திசாலி, அறிவாற்றல் மற்றும் படித்தவர்கள். ஆனால் அவருடைய வார்த்தையை எடுத்துரைக்க, தேவனை விசுவாசிக்கும் எளிமையே தேவைப்படுகிறது, இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை காண்பிக்கும்படியாகவே இது உள்ளது. இயேசு கிறிஸ்துவை நிகழ்காலத்திற்கு கொண்டு வர, தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு தாழ்மையான இதயமே தேவைப்படுகிறது. ஆமென்! அதற்கு வேத சாஸ்திரம் அவசியமா இருக்குமானால், பிரஸ்பிடேரியன், மெத்தோடிஸ்டு, பாப்டிஸ்டு, கத்தோலிக்கர், போன்றவர்கள்; படிப்பறியாத ஏழ்மையான ஜனங்களாகிய நமக்கு, ஒரு தருணம் இருந்திருக்காது. ஆனால் அதற்கு அறிவு தேவையில்லை. தேவன், “பெலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என் ஆவியினாலே,” “நான் இந்த இரகசியத்தை வெளிப்படுத்துவேன். அதற்கு அவன், ‘கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக’ என்று ஆர்ப்பரிப்பான்” என்கிறார். அதுதான் இன்றைக்கும், தேவனுடைய ஜனங்களுக்கு அவருடைய அற்புதமான கிருபை. அவர் எப்படி படிப்பறியாதவர்களையும், கற்காதவர்களையும் எடுத்து, இயேசு மாறாதவராயிருக்கிறார் என்பதை காண்பிக்கிறார்.

66 அவர் வந்தபோது, அவர் மகத்தான வேத சாஸ்திரிகளிடம் ஒருபோதும் வரவில்லை. அவர் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடமும் செல்லவில்லை; அவனால் ஆக்கினைக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு மட்டுமே சென்றார்.

67 ஆனால் அவர் மீனவர்களை, ஏழ்மையாயிருந்து, சாதாரண ஜீவியத்தில் நடந்த மனிதர்களை அழைத்துச் சென்றார். அங்கே அவர் தம்மை வெளிப்படுத்தி, “என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரை பிடிப்பவர்களாக்குவேன்” என்றார், அவருடைய கிருபையானது யூதர்கள் தொடங்கி புறஜாதிகள் வரைக்கும் சென்றடைந்தது என்று காட்டுகிறது, நாம் இப்போது பார்த்த விதமாக இந்தக் கடைசி நாட்களில் அவருடைய நாமத்திற்கென்று ஒரு கூட்ட ஜனங்களை அழைத்துக் கொண்டிருக்கிறார். அற்புதமான கிருபை,

எவ்வளவு இனிமையான சத்தம்!

68 கிருபை பழமையானது. கிருபை உலகத்தைப் போலப் பழமையானது. நாம் மானிடவர்க்கம் தொடங்கின முதற்கே கிருபையானது மானிட வர்க்கத்திற்கு காண்பிக்கப்பட்டு வருகின்றது. மானிட வர்க்கம் முதலில் ஏதேன் தோட்டத்தில் சிருஷ்டிக்கப்பட்டபோது, அந்த இருண்ட காலையில் அந்தச் சிறிய ஸ்திரீ பிரிவினைக் கோட்டைக் கடந்தபோது, தேவனுடைய கட்டளைகளுக்கு எதிராகச் சென்று, தன்னுடைய கணவனையும் அதே காரியத்தைச் செய்யும்படி வசீகரித்தபோது, அப்பொழுது நியாயப்பிரமாணம் மீறப்பட்டது. நியாயப்பிரமாணம் ஒரு தண்டனையை உடையதாயிருக்க வேண்டும், இல்லையென்றால் அது பிரமாணமல்ல. “அதைப் புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய்” என்பது என்பது நியாயப்பிரமாணமாக இருந்தது.

69 முதலாவது நியாயாசனம் பூமியின் மேல் இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள், அது ஏதேன் தோட்டத்தில் இருந்தது. கடைசி நியாயாசனம் பூமியின் மேல், காலத்தின் முடிவில், வெள்ளை சிங்காசனமாக இருக்கும்.

70 ஆனால் யேகோவா இறங்கி வந்தபோது, அங்கே பிரகாசிக்க ஒரு நட்சத்திரம் கூட இல்லை என்பதை என்னால் யூகித்துப் பார்க்க முடிகிறது, முன்னொரு இருந்த அந்த ஒளிமயமான சிறிய தோட்டத்தில் மிகவும் இருட்டாக இருந்தது, ஏனென்றால் பாவம் அவர்கள் மத்தியிலிருந்து வெளிச்சத்தை எடுத்துப்போட்டது.

71 இன்றைக்கு சபைகளோடுள்ள காரியமும் அதுதான். இன்றைக்கு ஜனங்களோடுள்ள காரியமும் அதுதான். கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை காண்பிக்கும், ஜீவனுள்ள தேவனுடைய வெளிச்சத்தை பாவம் மறைத்துவிட்டது, அவர் முற்றிலுமாக இரட்சிக்கப்படவும், மிகவும் மோசமான, சுகவீனமான நபர்வரை சுகப்படுத்தவும் ஜீவிக்கிறார்.

72 ஓ, அந்தக் காலையில் தோட்டத்தில் இருள் தொங்கிக் கொண்டிருந்தது எவ்வளவு பயங்கரமாயிருந்தது! நான் கறுப்பு இரட்டுடுத்தி மூடுபனியைக் கற்பனை செய்வேன். ஒவ்வொரு இலையும் ஒருபோதும் அசையவில்லை என்று நான் யூகிக்கிறேன். அங்கே காற்று அசைவதாக இல்லை. அது இருளாகவும் பயங்கரமாகவும் இருந்தது, ஏனென்றால் பாவம் துடைத்தழித்துவிட்டிருந்தது.

73 ஒரு இடி முழக்கம்போல, யெகோவா இறங்கி வந்து, தோட்டத்தினூடாக நடந்து வந்து, “ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?” என்று சத்தமிட்டார். அப்பொழுது தான் ஆதாம் நிர்வாணமாயிருந்ததையும், தேவனுக்கு முன்பாகப் பாவம் செய்திருந்ததையும் உணர்ந்தான். அவன் தன்னை மறைத்துக் கொண்டு, தன்னை ஒரு மார்க்கமாக்கிக் கொள்ள முயன்றான்,

ஆனால் அது கிரியை செய்யவில்லை. பாவத்தை மறைக்க ஏதோ ஒன்று மரிக்க வேண்டியதாயிருக்கிறது என்பதைக் காண்பிக்க, தேவன் ஆட்டைக் கொன்று, அதன் தோல்களை எடுத்தார்.

74 சபையில் சேர்ந்துகொள்வது ஒருபோதும் பாவத்தை மறைக்காது. வறண்ட கண்களையுடைய எந்த அறிக்கையும் ஒருபோதும் பாவத்தை மறைக்காது. பாவத்தை மறைக்கத் துக்கமும், மனந்திரும்புதலும், தேவனுடைய கிருபையுமே தேவைப்படுகிறது; பாவத்தைப் மறைக்க, தேவன் கல்வாரியில் கொன்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தமே ஆகும்.

75 பாவம் மிகவும் கருமையாயிருந்தபோது, அந்தக் காலையில் அங்கே தோட்டத்தில், யெகோவா உள்ளே வந்தார். அங்கே அவருடைய தம்பதிகள் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு நின்றுகொண்டிருந்தனர். அங்கே மானிட வர்க்கமே இருக்காது, அவர்கள் மரிக்க வேண்டியதாயிருந்தது; மானிட வர்க்கத்தின் பேரிலான மரணம், உலகம் மீண்டும் காட்டு மிருகங்களிடம் ஒப்படைக்கப்பட்டால், மானிட வர்க்கமே இருந்திருக்காது. ஆனால் அந்த இருண்ட வேளையில், எல்லா நம்பிக்கையும் போய்விட்டிருந்த அந்த நேரத்தில், கிருபை பொழிந்து வந்தது, “நான் உனக்கு ஒரு இரட்சகரை, ஒரு மேசியாவைத் தருவேன்” என்றார். ஓ, எப்படி தேவனால் அதைச் செய்ய முடிந்தது என்பது ஒரு அதிசயமாயுள்ளது! ஏதேன் தோட்டத்தில் இருந்த தேவனுடைய ஆச்சரியமான கிருபையானது, ஸ்திரீயினூடாக வரக்கூடிய நீதியான ஒருவரைப் பற்றிய வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு அளித்தது. “ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார்,” குற்றவாளி, “அவனுடைய தலை அவளுடைய குதிங்காலை நசுக்கும்,” சபைக்கு ஒரு உபத்திரவம் இருக்கும் என்று அது காண்பிக்கின்றது. ஆனால் அவர் ஒரு வெற்றியை வாக்களித்துள்ளார்! எது ஒரு இரட்சகரை அளித்தது? கிருபை!

76 கிருபைக்கு தகுதியாக அவர்கள் எதைக் காண்பிக்க முடியும்? அதைச் செய்ய அவர்கள் என்ன காண்பிக்க முடியும்? இராணுவத்தில் இவ்வாறு கூறுவது வழக்கம், அதை மன்னிக்கவும், நான் இங்கே என்னுடைய பிரசங்க பீடத்திலிருந்து அதைக் கூற விரும்புகிறேன், “பொறுப்பைத் தட்டிக்கழித்தல்.” ஆதாம், “நீர் எனக்கு அளித்த ஸ்திரீ அதைச் செய்தாள்” என்றான். அந்த ஸ்திரீ, “சர்ப்பம் என்னை வஞ்சித்தது” என்றாள். ஒருவர் அதை மற்றொருவர்மீது சுமத்திக்கொண்டார்கள். அவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை.

77 ஆனால் தேவன் கிருபையை அருளினார், அது பிரவாகித்துக் கொண்டு வந்தது! அவர், “ஆனால் நான் எப்படியாவது ஒரு வழியை உண்டாக்குவேன். எப்படி ஆயினும் நான் உங்களை இரட்சிப்பேன். நீங்கள் தவறு செய்திருக்கிறீர்கள், நீங்கள் என்னுடைய பிரமாணங்களை மீறினீர்கள். என்னுடைய பிரமாணங்கள் இருக்க வேண்டும்…ஆனால் என்னுடைய நியாயப்பிரமாணங்களிலிருந்து

நியாயத்தீர்ப்பு நிறைவேற்றப்பட வேண்டும். ஆகையால் மரணம் இருக்க வேண்டியதாயிருக்கும், ஏனென்றால் நான் 'மரணம்' என்று கூறியிருக்கிறேன்" என்றார்.

78 இப்பொழுது, என்னுடைய கிறிஸ்தவ நண்பர்களே. இங்கு ஒலிப்பதிவாகும் இந்த ஒலிநாடாக்கள் உலகம் முழுவதும் பரவும். தேவனை மூன்று தேவர்களாக்க முயற்சிக்கிற உங்களை நான் ஒன்று கேட்கட்டும், அல்லது உங்களுடைய விரலைப் போல, அவரை ஒருவராக ஆக்க முயற்சிக்கிற உங்களுக்கு. அவர் ஒரே நபராக இருக்கிறார்!

79 தேவன் ஒரு தூதனை மரிக்கச் செய்வது சரியாயிருக்காது. அவரால் சரியான விதமான ஒரு நியாயாதிபதியாக இருந்து, ஒரு மனிதனுக்காக ஒரு தூதனை மரிக்கச் செய்ய முடியாது. அது இன்னமும் அதைக் சரி செய்யாது, ஏனென்றால் அவருடைய மகத்தான பிரமாணம் மரணத்தைக் கோருகிறது, ஏதோ ஒன்று மரிக்க வேண்டும், ஒரு தூதனால் மரிக்க முடியாது. "ஏவாள், ஆதாம் இதைச் செய்ய நீ காரணமாயிருந்தாய், நான் உன்னை மரிக்கும்படிச் செய்வேன், ஆதாமும் பிழைக்கட்டும்" என்று அவரால் கூற முடியவில்லை, ஏனெனில் ஆதாமும் அதில் பங்கு கொண்டவனாயிருந்தான்.

80 யாரோ ஒருவர், "பிலாத்து நீதிமானாக்கப்பட்டான், அவன் தன் கைகளைக் கழுவினான்" என்று கூறினது போல. உங்களுடைய கரங்களிலிருந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை நீங்கள் கழுவ முடியாது. நீங்கள் உங்களுடைய பாவங்களில் மரித்தால், நீங்கள் இந்தக் காலையில் இந்தக் கட்டிடத்தை விட்டு ஒருபோதும் பரலோகத்திற்கு செல்லமாட்டீர்கள். அது உங்களுடைய கரங்களில் உள்ளது. எனவே, அது சரியல்ல.

81 ஒரே ஒரு வழி மாத்திரமே இருந்தது. தேவனுடைய மகத்தான பிரமாணத்தின்படி, கோரிக்கைகள் சந்திக்கப்படுவதற்கு ஒரே ஒரு வழி மாத்திரமே இருந்தது. அவர் தாமே அதைச் சந்திக்க வேண்டியதாயிருந்தது. அவர் அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது. தேவன் ஒரு ஆவியாயிருக்கிறார், அவர் மரிக்க முடியாது. எனவே தேவன் மனிதனாக்கப்பட வேண்டியதாயிருந்தது, அவர் மானிட சரீரத்தில், "இயேசு கிறிஸ்து" என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதனின் ரூபத்தில் மரித்தார், அதுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாகக் கிருபையைக் கொண்டு வந்தது. அங்கே தேவனும் கிறிஸ்துவும் ஒரே நபராயிருக்கிறார் என்பதை நீங்கள் காண்கிறீர்கள், தேவன் கிறிஸ்துவுக்குள் வாசம் செய்கிறார். "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம், என் பிதா எனக்குள்ளே வாசமாயிருக்கிறார்; இதை நான் என் சுயமாய் பேசவில்லை எனக்குள் வாசமாயிருக்கிற பிதாவே இவைகளை சொன்னார்" என்றார். கிறிஸ்துவுக்குள் தேவன்! நிச்சயமாக.

82 ஏதேன் தோட்டத்தில் கிருபை வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது, கிருபை வந்தது, கிருபையானது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வந்தது. அவர்களுக்குப் போக இடம் இல்லை, எந்தப் பக்கமும் திரும்ப வழியில்லை, ஆயினும் கிருபை ஒரு வழியை உண்டு பண்ணினது!

83 என்னுடைய பாவியான நண்பனே, நான் இதைக் கூறட்டும். நீங்கள் இந்தக் காலையில் இங்கே ஒரு விபச்சாரியாக இருக்கலாம், நீங்கள் இன்று காலைப் பெண்களின் பின்னால் செல்லும் ஒருவனாக இங்கு இருக்கலாம், நீங்கள் இங்கே ஒரு குடிகாரனாகவோ அல்லது ஒரு சூதாட்டக்காரனாகவோ அல்லது ஒரு கொலைகாரனாகவோ இருக்கலாம். நீங்கள் இங்கே ஒரு தூய்மையற்ற கணவனாக, ஒரு தூய்மையற்ற மனைவியாக இருக்கலாம். நீங்கள் பாவிகளில் மிகவும் இழிவானவராக இருக்கலாம். நீங்களோ, “நான் அந்த மீட்பின் கட்டத்தைக் கடந்து விட்டேன்” என்று கூறலாம். இல்லை, நீங்கள் அப்படி இல்லை, இல்லையென்றால் நீங்கள் இந்தக் காலையில் சபையில் இருக்கமாட்டீர்கள். நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களானால், இந்த இருண்ட நேரத்தில் கிருபை உங்களுக்காக ஒரு வழியை உருவாக்கும். ஆதாம் அதை ஏற்றுக்கொள்ள மனப்பூர்வமாய் இருக்க வேண்டியதாயிருந்தது, நீங்களும் அவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

84 தேவனுடைய கிருபை நோவாவின் காலத்தில் நீட்டப்பட்டது. நோவா ஒரு சாதாரண மனிதன், அவனும் அவனுடைய குடும்பத்தினரும். ஆனால் நோவா தேவனுக்கு பயந்திருந்த காரணத்தால், அவன் தேவனை விசுவாசித்தான்! நீங்கள் விசுவாசிக்காமல் தேவனுக்கு பயப்பட முடியாது. நீங்கள் விசுவாசிக்காத ஒன்றைக் குறித்து எப்படி நீங்கள் பயப்பட முடியும்? நீங்கள் தேவனுக்கு பயந்திருக்க வேண்டும். சாலமோன், “கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்” என்றான். இப்பொழுது, தேவனுக்குப் பயப்படும்போது, நீங்கள் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளத் துவங்குகிறீர்கள். தேவபயத்தினால், நோவா கர்த்தருக்கு பயந்தான், அவன் கர்த்தரை விசுவாசித்தான். அதைத்தான் தேவன் கனப்படுத்துகிறார், அவரில் உள்ள உங்களுடைய விசுவாசமே. அது உண்மை. தேவபயம் நோவாவின் மேல் தோன்றினபோது, தேவன் கிருபையினால் அவனை அழைத்து, அவனையும், அவனுடைய வீட்டாரையும் இரட்சித்தார், ஏனென்றால் கிருபை அதைச் செய்தது. மற்ற எல்லோரைக் காட்டிலும் நோவா ஒரு மகத்தான பெரிய அழகான மனிதனாயிருந்த காரணத்தினால் அல்ல, நோவா தேசத்தில் இருந்த மிகச் சிறந்த சபைக்குச் சென்ற காரணத்தினால் அல்ல, மிகச்சிறந்த ஸ்தாபனத்தை அவன் சேர்ந்திருந்தான் என்பதனால் அல்ல, அவனால் நன்றாக உடை உடுத்த முடியும் என்ற காரணத்தினால் அல்ல, அவனிடம் அதிக பணம் இருந்த காரணத்தினால் அல்ல, அவன் ஏதோ விசேஷித்த நபராய் இருந்த காரணத்தினால் அல்ல. ஆனால் தேவனுடைய

கிருபையின் காரணமாகத் தேவன் நோவாவை இரட்சித்தார். கிருபை நோவாவை இரட்சித்தது (அவனுடைய கிரியைகள் அல்ல; ஆனால் அவருடைய கிருபை) அவனுடைய குடும்பத்தையும் கூட இரட்சித்தது.

85 நாம் தேவனுடைய கிருபை நீட்டிக்கப்பட்டிருந்த வேறொரு நபரைக் குறித்து நாம் பார்ப்போம், அவர்களில் பலர் உள்ளனர், நாம் ஒரு சிலரைக் குறித்து பேசுவோம். ஆபிரகாம். ஆபிரகாம், விசேஷித்த மனிதன் அல்ல, பாபேல் கோபுரத்திலிருந்து இறங்கி வந்தான், ஒருக்கால் விக்கிரகாராதனைக் கூட்டத்திலிருந்து (அவனுடைய தந்தை) வெளியே வந்தவன், சிநெயார் தேசத்தில் உள்ள ஊர் என்ற பட்டணத்தில் குடியிருக்க வந்தான். அவன் அங்கிருந்தபோது, தேவன் அவனிடத்தில் கிருபையினால் பேசினார். அவன் வித்தியாசமானவன் என்ற காரணத்தினால் அல்ல, அவன் ஒரு சிறந்த மனிதனாயிருந்த காரணத்தினால் அல்ல; ஆனால் கிருபையினால் தேவன் அவனை அழைத்தார். வேதம் அதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஓ, ஆபிரகாமே, எப்படியாய் ஆபிரகாம் தேவனுடைய பொறுமையை சோதித்தான்! “ஆபிரகாமே, இந்தத் தேசத்தில் தங்கியிரு, நீ இந்தத் தேசத்தை விட்டுப் போகாதே” என்று கூறினார். ஆனால் பஞ்சம் உண்டானவுடனே, ஆபிரகாம் ஓடிவிட்டான்.

86 ஆபிரகாம் நம்மைக் குறித்துப் பேசினான். தேவன் ஆபிரகாமை கிருபையினால் எடுத்துக் கொண்டு—தேவன் அவனை இரட்சித்தார். அந்தவிதமாகவே அவர் உங்களைக் கிருபையினால் எடுத்துக்கொள்கிறார். நாம் எப்படி அவருடைய பொறுமையை சோதிக்கிறோம்? இன்றைக்கு நாம் மேலே இருக்கிறோம், நாளை நாம் கீழே இருக்கிறோம். ஒரு நாள் நாம் விசுவாசிக்கிறோம், அடுத்த நாள் நாம் சந்தேகப்படுகிறோம். இன்றைக்கு நாம் ஒரு மெத்தோடிஸ்டு, நாளை நாம் ஒரு பாப்டிஸ்டு. இன்றைக்கு நாம் தெய்வீக சுகமளித்தலை விசுவாசிக்கிறோம், நாளை வயிற்றுவலி வருகிறது, நாம் அதை விசுவாசிக்கிறோமா அல்லது இல்லையா என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் அதே சமயத்தில் இவை எல்லாவற்றின் மத்தியிலும் நாம் நிலைத்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் அவர் எப்படியும் நம்மை இரட்சிக்கிறார். அது தேவனுடைய கிருபையாயிருக்கவில்லையென்றால், நாம் யாவரும் போய்விட்டிருப்போம். நிச்சயமாக. தேவன் தம்முடைய கிருபையினால் நம்மை இரட்சிக்கிறார்.

87 ஆபிரகாம் அந்தத் தேசத்தில் தங்கியிருக்க வேண்டியவனாயிருந்தான். ஆனால் அவன் கல்தேயரிடம், இல்லை, கல்தேயரிடம் அல்ல, ஆனால் பெலிஸ்தியரிடம் சென்றான். பஞ்சத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவன் அங்குச் சென்று சஞ்சரித்தான். அவனுடைய தேசத்தில் காரியங்கள் சற்று கடினமாக இருந்தபடியால், அவன் அவர்களோடு அங்கே பிரயாணம் செய்து

அவர்களுடன் தங்கினான். தேவன் அவனிடம் என்ன செய்யக் கூடாது என்று கூறினாரோ, அதையே அவன் செய்தான். ஆனால் அதே சமயத்தில் தேவனுடைய கிருபை அவனுக்குத் தோன்றி, பார்வோனை தடுத்து நிறுத்தினார்...அல்லது ராஜா அவனுடைய மனைவியை எடுத்துக் கொள்ளாதபடிக்கு தடுத்து நிறுத்தினார். தேவனுடைய கிருபை. ஆபிரகாம், "அது என்னுடைய சகோதரி" என்று கூறினபோது, அதைக் குறித்து பொய்யுரைத்தான், ஆனால் அதே சமயத்தில் அவன் மனந்திரும்பின காரணத்தால் தேவனுடைய கிருபை அவனைப் பிடித்து வைத்திருந்தது. அவன் மனந்திரும்ப மனதாயிருந்தான்.

88 மனந்திரும்ப விரும்பும் எவருக்கும், தேவனுடைய கிருபை இன்னும் உங்களுக்காகச் செல்கிறது. தேவனுடைய கிருபை உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது. ஆகையால், இந்தக் காலையில் பின்வாங்கிப்போன உங்களை, தேவனுடைய கிருபை இன்னமும் உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் மனந்திரும்பினால், தேவனுடைய கிருபை போதுமானதாயுள்ளது.

89 எப்படியாய் அவர் நல்ல வயோதிக ஆபிரகாமை எடுத்து, அவனைத் திரும்பக் கொண்டு வந்தார்! ஆபிரகாம் தன்னுடைய கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள், அவன் கிருபையினால் இரட்சிக்கப்பட்டான். ஆபிரகாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டான், அது கிருபையாயுள்ளது. தேவன் ஆபிரகாமை அவருடைய கிருபையின் நிமித்தமாக இரட்சித்தார், அவனுடைய நடத்தையின் காரணமாக அல்ல. அவருடைய கிருபையின் காரணமாகவே அவர் அவனை இரட்சித்தார். ஓ, எவ்வளவு நல்லது! அவன் கிருபையினால் இரட்சிக்கப்பட்டான்.

90 நாம் இஸ்ரவேலரை எடுத்துக்கொள்வோம். நான் இங்கே ஒரு வேதவாக்கியத்தை எழுதி வைத்துள்ளேன். அதை எழுதி வைத்திருப்பதால், அதை என் மனதில் நினைவில் கொள்ள முடியும். நீங்கள் அதைக் குறித்துக்கொள்ள விரும்பினால், நீங்கள் இதை நினைவில் வைத்துக் கொள்ள விரும்பினால், உபாகமம் 7:7-ஐ நினைவில் வைத்துக் கொள்ள இது ஒரு நல்ல ஒன்றாக இருக்கும். தேவன் ஆபிரகாமுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை அளித்தார், இல்லை ஆபிரகாமுக்கு அளிக்கவில்லை, என்னை மன்னிக்கவும், இஸ்ரவேலருக்கு கொடுத்தார். மேலும் அவர் அவர்களிடம், "விக்கிரகாராதனையோடு நீங்கள் தொடர்பு கொள்ளாவிடில்! நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்யாவிட்டால்! இந்த எல்லா அஞ்ஞான சடங்குகளிலிருந்தும் நீங்கள் விலகியிருந்தால்! இந்த எல்லாக் காரியங்களையும் நீங்கள் செய்வீர்களேயானால், அப்பொழுது நான் உங்களை ஒரு நன்மையான தேசத்திற்குக் கொண்டு வருவேன், நான் உங்களைக் கவனித்துக்கொள்வேன், நான் உங்களைக் போஷிப்பேன், நான் உங்களை வழி நடத்துவேன்.

நீங்கள் இன்னின்ன காரியங்களைச் செய்தால், நீங்கள் என்னில் அன்பாயிருந்தால், நீங்கள் என்னுடைய கற்பனைகளையும், என்னுடைய பிரமாணங்களையும், என்னுடைய நியமங்களையும் கைக்கொண்டால், நான் இந்தக் காரியங்களைச் செய்வேன். நீங்கள் ஏதோ ஒரு காரியத்தைச் செய்து, என்னுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, என்னில் அன்பாயிருப்பீர்களேயானால், நான் இந்தக் காரியங்களையெல்லாம் செய்வேன்” என்றார்.

91 ஒரு கணவன் ஒரு மனைவியை விவாகம் செய்து, “நீ ஒரு நல்ல ஸ்திரீயாயிருந்தால், நீ வீட்டைக் கவனித்துக்கொள்வாயானால், நீ எனக்கு உண்மையாயிருந்தால், நீ என்னுடைய ஆடைகளைச் சுத்தமாக வைத்திருந்தால்; நமக்குப் பிள்ளைகள் இருந்தால், நீ அவர்களுக்கு ஒரு தாயாயிருந்தால்; நீ அதைச் செய்தால், அப்பொழுது நான் என்னுடைய கரங்களிலிருந்து இரத்தம் கசியும் வரை உழைப்பேன், உனக்கு ஜீவியம் செய்வேன்” என்று கூறுவது போல. ஆனால் அப்படியானால், சிந்தித்துப் பாருங்கள், அந்த ஸ்திரீ தவறாக மாறி, சோம்பேறித்தனமாக வாழ்ந்து, வேலை செய்யாமல், ஒன்றுமே செய்யாமலிருந்தால் என்னவாகும்? அப்படியானால் அந்தக் குடும்பத்தை ஒன்றாக வைத்துக் கொள்ள கிருபை தேவைப்படுகிறது.

92 ஓ தேவனே! யெகோவாவின் குடும்பத்தை ஒன்று சேர்த்து காத்துக்கொள்ள, அதற்கு அவருடைய கிருபை தேவைப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் கிருபையின் காரணமாகவே இன்றைக்கு நாம் யெகோவாவின் குடும்பமாயிருக்கிறோம்; இல்லையென்றால் நாம் யாவரும் அழிந்து போயிருப்போம். ஆனால் அது கிருபை, ஓ, கிருபை!

93 இப்பொழுது, ஆனால் அவர்கள் அதைக் காத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள், ஒருபோதும் முழு வாக்குத்தத்தத்திற்கு வரவில்லை; அந்தச் சந்ததிக்கல்ல. இல்லை, யாருக்கு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டதோ அந்தச் சந்ததி வனாந்தரத்தில் அழிந்து போனது. ஆனால் தேவன் அவர்களைப் போஷித்தார், தேவன் அவர்களைக் கவனித்துக்கொண்டார், தேவன் அவர்களை நேசித்தார், அவர் சுற்றிலும் சென்றார். ஏன்? அவருடைய கிருபை அதைச் செய்தது, அவருடைய வாக்குத்தத்தத்தின் நிமித்தமாக அவருடைய கிருபை செய்தது, அப்பொழுது அவருடைய வாக்குத்தத்தம், அவருடைய வாக்குத்தத்தத்தோடு சென்ற கிருபை. ஆனால் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் முழுமைக்குள் ஒருபோதும் வரவில்லை.

94 இந்தச் சபையும் அதனுடைய முழுமைக்குள் வர முடியாது. தேவனுடைய கிருபை நம்மை வைத்திருக்கிறது. ஆனால் அவருக்குக் கீழ்ப்படியும் ஒரு சபையை, உங்களுடைய ஸ்தாபனத்தைப் பொருட்படுத்தாமல், அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, “அது சத்தியம்” என்று கூறும் ஜனங்களைப் பெற்றுக்கொள்ள

அவர் விரும்புகிறார். அவர், “நல்லது, நான் உங்களைப் போன்றே நல்லவன். நான் பிரஸ்பிடேரியன், நான் மெத்தோடிஸ்டு, நான் கத்தோலிக்கன், நான் உங்களைப் போன்றே நல்லவன்” என்று கூறாத ஜனங்களையே அவர் விரும்புகிறார். அது கிருபையல்ல; அது ஏதோ தவறு உள்ளது என்பதைக் காண்பிக்கிறது.

95 ஆனால் ஒரு நபர், அதைப் பொருட்படுத்தாமல், தேவனுடைய வார்த்தையை வாசித்து, நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்வார், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அவர்கள் அதை விசுவாசிப்பார்கள், அவர்கள் அதை வார்த்தையினால் ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் வார்த்தையைச் சரியாக அது கூறுகிறதையே ஏற்றுக்கொள்வார்கள்.

96 ஞானஸ்நானம் மற்றும் தெளித்தல் ஆகியவற்றில் போல; ஞானஸ்நானம் சரியானது. வேதத்தில் எவருமே ஒருபோதும் தெளிக்கப்படவில்லை, வேதத்தில் அப்படிப்பட்ட ஒரு காரியமேக் கிடையாது. வேதத்தில் எவருமே “பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால்” ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர். எனவே அதற்கு ஒரு துளி கூட வரலாற்றில் இல்லை…வரலாற்றில் எங்காவது, எங்கும் யாராவது காட்ட முடிந்தால், கடைசி அப்போஸ்தலனின் மரணத்திற்குப் பிறகு முந்நூறு ஆண்டுகள் கழித்து, கத்தோலிக்க சபை நிறுவப்படும் வரையில், எவராவது தெளித்தல் மூலமாகவோ அல்லது கத்தோலிக்க சபை நிறுவப்படும் வரையிலான காலத்தில், “பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்” நாமத்தினாலோ ஞானஸ்தானம் பெற்றதாக வரலாற்றில் யாராவது எனக்குக் காண்பிக்க கூடுமானால் நீங்கள் என்னிடம் அதைக் கூற ஆத்துமா கடன் பட்டிருக்கிறீர்கள். அது அங்கே இல்லை. ஆனால் நாம் என்ன செய்கிறோம்?

97 நாம் *சபைக் காலங்களினூடாகச்* சென்று, அவர்கள் எங்கே அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது என்பதைப் பார்த்தோம். எனவே, நீங்கள் பாருங்கள், தேவன் அவருக்குக் கீழ்படியும் ஒருவரையே விரும்புகிறார். அது வேத வாக்கியங்களில் இல்லையென்றால், அப்பொழுது அது ஒரு மனிதன் அல்ல…அது ஒரு மனிதனால் உண்டாக்கப்பட்ட உபதேசமேயன்றி ஒரு வேதாகம உபதேசம் அல்ல. பார்த்தீர்களா? எனவே எந்தச் சபையாயிருந்தாலும் பொருட்படுத்தாமல், நீங்கள் எவ்வளவு தவறாக இருந்து வந்தாலும், அது என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது? இப்பொழுது நீங்கள் எவ்வளவு சரியாயிருக்கிறீர்கள் என்பதே முக்கியம் வாய்ந்தது! தேவனுடைய கிருபை அதை உங்களுக்குக் காண்பித்திருக்கிறது, அதில் நடவுங்கள். தேவனுடைய கிருபையே!

98 அந்த மகத்தான தலைவர் மோசேயையும் கூட நினைவு கூருங்கள். அவன் அந்தக் கன்மலையை அடித்ததன் மூலம் தன்னை மகிமைப்படுத்த அங்கே சென்றபோது, தேவன் அவனைக்

கொன்றிருக்க வேண்டும், “என்னால் என்ன செய்ய முடியும் என்று நீங்கள் பார்த்தீர்களா?” என்று கேட்டான், வேறு வார்த்தைகளில் கூறினால். “கலக்கக்காரரே இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ?” அவன் அதை அடித்தான், தண்ணீர் வரவில்லை; அவன் அதை மீண்டும் அடித்தான். அவன் என்ன செய்தான்? அவன் கிறிஸ்துவின் பெலவீனத்தைக் குறித்து சாட்சி பகர்ந்தான், ஏனென்றால் கிறிஸ்து அந்தக் கன்மலையாயிருந்தார். அதுதான் தலைக்கல். அதைக் அடிப்பதற்கு பதிலாக, இல்லை அதனோடு பேசுவதற்குப்…

99 அது ஒருமுறை அடிக்கப்பட்டது. யாத்திராகமத்தில் தேவன் மோசேயிடம், “நீ வெளியே போ, நான் உனக்கு முன்பாகக்—முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன், நீ அந்தக் கன்மலையை அடி” என்றார். அவன் கன்மலையை அடித்தான் அப்பொழுது தண்ணீர் அதிலிருந்து புறப்பட்டு வந்தது. தேவன், “அடுத்த முறை, கன்மலையை பார்த்துப் பேசு அப்பொழுது அது அதனுடைய தண்ணீரை கொண்டு வரும்” என்றார்.

100 ஆனால் மோசே தனக்கு ஒரு சிறு அதிகாரம், ஒரு சிறிய வல்லமை இருந்தது என்று காண்பிக்க விரும்பினான், எனவே அவன், “நான் உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவேன்” என்றான். அதற்காகத் தேவன் அவனைக் கொன்றிருக்க வேண்டும். தேவன் அவனைப் பிரித்திருக்க வேண்டும், அதாவது அவன் அங்கே தேவனுடைய பிரமாணத்தை மீறிவிட்டான், ஏனென்றால் அவன் கிறிஸ்துவின் பலவீனத்தைக் குறித்துப் பேசினான், அதாவது அவர் இரண்டாம் முறை அடிக்கப்பட வேண்டும் என்றே. கிறிஸ்து ஒருமுறை மாத்திரமே அடிக்கப்பட்டார். இப்பொழுது நாம் கன்மலையண்டைப் பேசுகிறோம், அது தன்னுடைய தண்ணீரை கொண்டு வருகிறது.

101 ஆனால் அது என்னவாயிருந்தது? நாம் அந்த வயோதிக மனிதனை நோக்கிப் பார்ப்போமாக, அவனுக்கு வயது நூற்றிருபது.

102 அண்மையில் யாரோ ஒருவர் என்னிடம், “தேவன் அநீதியுள்ள தேவன்” என்றார், “ஏனென்றால் அவர் மோசேயை கைவிட்டுவிட்டார். அவன் எபிரெயர்களோடு சேர்ந்து வனாந்திரத்தில் நாற்பது வருடங்கள் உழைத்தபிறகு, அவர் அவனைக் கைவிட்டுவிட்டார், அதன்பின்னர் அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குப் போகக் கூட அனுமதிக்கவில்லை” என்றார்.

103 அதற்கு நான், “ஓ, அர்த்தமற்றது!” என்றேன். இல்லை, அவர் மோசேயை கைவிடவில்லை. அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் சென்றான். ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்குப் பிறகு, அவன் மறுரூப மலையின் உச்சியில் காணப்பட்டான், அவன் எப்போதும்போல உயிரோடிருந்தவனாக, இயேசுவானவர்

கல்வாரிக்குச் செல்வதற்கு முன்பு நின்றுகொண்டு அவரிடத்தில் பேசிக்கொண்டிருந்தான், அவனும் எலியாவும் ஒன்று சேர்ந்து நின்று, பேசிக்கொண்டிருந்தனர். மோசேயும் எலியாவும் மறுரூப மலையில் இயேசுவுக்கும், பேதுரு, யாக்கோபு, யோவானுக்கும் தோன்றினர். அவன் மரிக்கவில்லை. அவன் உயிரோடிருந்தான். தேவன் அவனைக் கைவிடவில்லை. அவன் பாலஸ்தீனாவில் இருந்தான்.

104 இப்பொழுது பாருங்கள், அவன் மரிப்பதற்கு முன்பு அவன் மரிக்கப் போகிறான் என்று அறிந்தவனாய் அன்று காலை நேபோ பர்வதத்தின்மேல் ஏறினான். அவன் ஆரோனின் வஸ்திரத்தை கழற்றி வேறொருவனுக்கு அந்த வஸ்திரத்தை அணிவித்தான். அவன் தன் அங்கியை கழற்றி யோசுவாவை உடுத்தி அவன் கட்டளைகளின் தரித்திருக்கும்படி அவனுக்குக் கட்டளையிட்டான்! அவன் நேபோ மலையின் உச்சிக்கு ஏறி, சமவெளிப் பள்ளத்தாக்கினூடாகச் சென்று, அவன் அங்கே மரிக்கப் போவதை அறிந்தவனாய், நேபோ மலையின் மேல் ஏறி, பிஸ்காவுக்கு ஏறிச் சென்றான். அவன் அங்கு நின்று கொண்டிருக்கையில், தேவன், “தேசத்தை நோக்கிப் பார். நீ அதைக் காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மோசே, நீ அங்குச் சென்றிருக்கலாம். ஆனால் அன்று அங்கே கன்மலையில் நீ என்ன செய்தாய் என்று உனக்குத் தெரியுமா? நீ உன்னையே மகிமைப்படுத்திக் கொண்டாய்” என்றார். இன்றைக்கு நம்மில் அநேகருக்கு அதுதான் பெரிய தொல்லையாயிருக்கப் போகிறது என்று நான் நினைக்கிறேன். “நீ அங்கே கன்மலையண்டை சென்று, உன்னையே மகிமைப்படுத்திக் கொண்டாய்.” ஆனால் கவனியுங்கள், அவன் மரிக்க ஆயத்தமானபோது, அங்கே கன்மலை நின்றது. அவன் அங்கே பிஸ்காவில் உள்ள பாறையின் மேல் ஏறிச் சென்றிருக்க வேண்டும், தேவன் அவனை அடக்கம் செய்தார். ஆனால் அவன் உயிரோடிருந்த காரணத்தால், அவன் எங்கோ மீண்டும் உயிர்த்தெழுந்திருக்க வேண்டும். அவன் கிறிஸ்துவுக்கு ஒரு மாதிரியாயிருந்தான். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, பாலஸ்தீனாவில் உள்ள மறுரூப மலையின் மேல் அவன் நின்றுகொண்டிருந்தான். பாருங்கள், தேவனுடைய கிருபை கன்மலையை அளித்தது. ஓ, என்னே!

105 நான் ஆபிரகாமைக் குறித்தும் நினைக்கும்போது, அவன் செய்த எல்லா தவறுகளையும், மோசேயையும், அவனுடைய தவறையும், ஆனால் ஆபிரகாமின் விளக்கவுரை எழுதப்பட்டபோது, தெய்வீக விளக்கவுரை எழுதப்பட்டபோது, பவுல் ஆபிரகாமின் விளக்கவுரையை எழுதும்போது, அவன் ஆபிரகாமின் அவிசுவாசத்தைக் குறித்து ஒரு காரியத்தையும் குறிப்பிடவேயில்லை. இல்லை, இல்லை, அது ஒருபோதும் அவனுக்குக் கணக்கிடப்படாமலிருந்தது. அவன், “ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச்

சந்தேகப்படாமல், முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" என்றான்.

106 இந்தக் காலையில் இங்கிருக்கிற தேவனுடைய கிருபைக்கு முன்பாக என்னுடைய தாழ்மையான ஜெபம் என்னவென்றால், என்னுடையதும் அப்படித்தான் எழுதப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன், அதனால் அவர் என் தவறுகளைக் காண மாட்டார். அதாவது என்னுடைய விளக்கவுரை எழுதப்படும்போது, என்னுடைய இரங்கல் செய்தி, நான் தவறுகள் செய்திருக்கிறேன் என்றும், தவறாக நடந்துகொண்டேன் என்றும் அது வாசிக்கப்படாது, ஆனால் நான் அவருக்காகச் செய்ய முயற்சித்த காரியங்களை மாத்திரமே அவர் காண்பராக. அவர்கள் அப்படியே ஆகட்டும்... அது என்ன செய்கிறது? நான் விசுவாசிக்கின்ற தேவனுடைய கிருபையை அவர் கணக்கில் எடுத்துக் கொள்வார். அங்குதான் நான் முழு நம்பிக்கை கொண்டுள்ளேன். என் சொந்த தகுதிகளின் அடிப்படையில் நானும் பிரவேசிக்க முடியாது, மற்றவர் யாருமே பிரவேசிக்க முடியாதது போலவே, ஆனால் நான் தேவனுடைய கிருபையின் மேல் சார்ந்திருக்கிறேன். ஆம், நான் கிருபையையே சார்ந்திருக்கிறேன்.

107 மோசே மரிக்க ஆயத்தமானபோது, அங்கே ஒரு கன்மலை இருந்தது.

108 தாவீதைக் குறித்து நாம் என்ன கூற முடியும்? தேவனுடைய கிருபையே! அந்த மகத்தான போர்வீரனுக்கு தேவன் தாமே...அவர், "அவன் என் இருதயத்திற்கு ஏற்றவன்" என்றார். அந்த மகத்தான போர்வீரன், தாவீது, அவன் செய்தது போன்ற ஒரு காரியத்தை எப்படி அவனால் செய்ய முடிந்தது, அவன் ஒரு கைப்பிடி அளவிற்கு புறஜாதிகளை போர்வீரர்களாக வைத்திருந்தபோது, அவனுடைய இராணுவ வீரனாகிய உரியாவைக் குறித்து என்ன? இந்தச் சிறு கதையைச் சற்று கூர்ந்து கவனியுங்கள். அவர்கள் தங்களுடைய போர்வீரர்களை அங்கே வைத்திருந்தபோது, உரியாதான் தாவீதின் பக்கமாக நின்றான். உரியா ஒரு மதம் மாறியவனாயிருந்தான், அவன் ஒரு ஏத்தியனாயிருந்தான், யூத மார்க்கத்திற்கு மதம் மாறியவன். அந்த மனிதர் தாவீதை மிகவும் நேசித்தார்கள்! அவன்—அவன் ஒரு தப்பி ஓடியவனாக இருந்தபோதிலும், அபிஷேகம் அவன்மேல் இருந்ததை அவர்கள் கண்டனர். அவன் தன்னுடைய சொந்த தேசத்திலிருந்து துரத்தப்பட்டு, பெலிஸ்தியரோடு வாழ வேண்டியதாயிருந்தது. சவுல் அவனைத் தேடிக்கொண்டிருந்தான். ஆனால் அதே சமயத்தில் அந்த மனிதர்களோ, அவர்கள் அவன்மேல் அபிஷேகத்தைக் கண்டனர்! அவன் அதிகாரத்திற்கு வரப்போவதை அவர்கள் அறிந்திருந்தனர். தேவனுக்கு மகிமை!

109 இன்றைக்கு ஒரு தப்பி ஓடியவனாக இருப்பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஏனென்றால் கிறிஸ்து இராஜாவாக வரப்போகிறார் என்பதை நான் காண்கிறேன். நீங்கள் எல்லா

கென்னடியினரையும், இன்னும் என்ன வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் கிறிஸ்து இராஜாவாயிருப்பார்! அபிஷேகம் அவர்மீதும், அவர் வருகைகுறித்த அவருடைய செய்திமீதும் உள்ளது. அவர் இராஜாவாயிருப்பார்!

110 அவர்கள் என்ன செய்தனர்? ஒரு நாள் அவன் அங்கே பெத்லகேமில் வாசலருகே தண்ணீர் தாகத்தோடு நின்றுகொண்டிருந்தான். அங்கே அவன் வழக்கமாக ஆடு மேய்க்கச் செல்வான். என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அந்த மனிதர்களில் இருவர் பதினைந்து மைல் தூரம் மாமிச சதையை வெட்டி, அவனுக்கு ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு வந்தனர். காரணம், ஏன், ஏனெனில் அவனுடைய சிறு விருப்பமும் கூட அவர்களுக்கு ஒரு கட்டளையாக அமைந்திருந்தது. அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்! அவன் நின்றுகொண்டிருந்தான் என்று அவர்கள் கூறின அந்த மலையின் உச்சி வரையிலும், அவர்கள் வழியிலே மனிதரை வெட்டி வீழ்த்திக் கொண்டே சென்றனர், அது சுமார் பதினைந்து மைல்கள் தூரம் இருக்கும். அவர்கள் அங்குச் சென்றனர். எழும்பின ஒவ்வொரு மனிதனையும், அவனைக் கொல்லுமளவிற்கு அவர்கள் சண்டையிட்டனர். தொடர்ந்து சென்றனர்! இந்த வாளியை எடுத்து, ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு வந்து, எதிரியின் வரிசையினூடாக இரண்டு பேர், தங்களுடைய ராஜா, தங்களுடைய சகோதரனுக்கு, தண்ணீர் குடிக்கக் கொடுப்பதற்காகவே. அவனுக்கு அங்கே குடிக்க தண்ணீர் இருந்தது. ஆனால் அவன் *அந்தத்* தண்ணீரை விரும்பினான்.

111 ஓ தேவனே, நான் வார்த்தை என்னும் பட்டயத்தை எடுத்து ஒவ்வொரு ஸ்தாபனத்தினூடாகவும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானத்தையும், உயிர்த்தெழுதலின் வல்லமையையும், பரிசுத்த ஆவியையும் கொண்டுவர, எதைப் பற்றியும் பொருட்படுத்தாமல் ஜனங்களுக்குக் கொண்டு வர…ஏனெனில் அவர் அதிகாரத்திற்கு வருகிறார். அவர் அதிகாரத்திற்கு வருகிறார், அவர் தனித்து நிற்பார். ஆனால் அது ஒவ்வொரு ஸ்தாபனத்தினூடாகவும், ஒவ்வொரு கோட்பாட்டினூடாகவும், ஒவ்வொரு மனிதனால் உண்டாக்கப்பட்ட கோட்பாடுகளினூடாகவும் வெட்டிக்கொண்டு கடந்து செல்லும், நீங்கள் வழி தவறிப்போன ஆட்டை, யாரோ ஒருவரை, இரட்சகருக்கு திரும்பக் கொண்டுவரும் வரை, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்ற வேத உபதேசங்களை மீண்டும் கொண்டு வரட்டும். தேவனுடைய கிருபையே!

112 தாவீதைப் பாருங்கள். அவன் எப்படி செய்திருக்க முடியும்… ஒருவன் ஒரு குழியில் குதித்து ஒரு சிங்கத்தைக் கொன்றான். தாவீதுக்கு ஐநூறு மனைவிகள் இருந்தபோது, எப்படி தாவீது உரியாவின் மனைவியாகிய அழகான பத்சேபாளை எடுத்துக் கொள்ள முடிந்தது? ஆனால் அவள் குளிப்பதைக் கண்டான்.

அங்குதான் அலட்சியம் உள்ளது. இப்போது, அவள் குளிக்கும்போது திரையைக் கீழே இழுத்து மூட மறந்துவிட்டாள்; ராஜா ஒவ்வொரு நாளும் அந்தச் சுவரின் வழியாக, அங்கேயும் இங்கேயுமாகச் செல்கிறான் என்பதை அறிந்திருந்தாள்.

113 அதுதான் காரியம். இன்றைக்கு பெண்கள் அவ்வளவு அலட்சியமாக இல்லை என்று நான் நினைக்கிறேன், பாருங்கள், அவர்கள் வெறுமனே நிர்வாணமாக, அவ்வளவுதான், சிறிய பழைய ஆடைகளை அணிந்து, தெருக்களில் செல்கின்றனர். அது ஒரு அவமானம்! பிறகு ஆண்கள் ஏன் ஊதுகிறார்கள், சீட்டி அடிக்கிறார்கள் என்று யோசிக்கிறார்கள். ஏன் என்றால், அவர்கள் சீட்டி அடிக்கத் தூண்டுவதற்காகவே பெண்கள் அவ்வாறு செய்கிறார்கள். அவர்கள் அதை அறிந்திருக்கிறார்கள், அவர்கள் அதை அறிந்துகொள்ள போதுமான புத்தியைப் பெற்றுள்ளனர். அவர்கள் விரும்புகிற காரணத்தினால்தான் அவர்கள் அதைச் செய்கிறார்கள். அது அவர்களுடைய இருதயத்தில் உள்ளது. அவர்கள் ஒழுக்கக் கேடானவர்கள் என்று நீங்கள் அவர்களிடம் கூறினால், அவர்கள் அதை மறுக்கக்கூடும். ஆனால் அவர்கள் ஒழுக்கங்கெட்டவர்களாய் இல்லாமலிருக்கலாம், பாலுணர்வு வரும்போது, அவர்கள் ஒரு லீலி புஷ்பத்தைப் போலத் தூய்மையானவர்களாயிருக்கலாம். ஆனால், நினைவிருக்கட்டும், அவர்கள்மேல் ஒரு ஆவி இருக்கிறது, அந்தப் பிசாசின் அபிஷேகம், ஏதாவது மனிதனின் ஆத்துமாவை நரகத்திற்கு அனுப்புகிறது. நினைவிருக்கட்டும், வேதம், “ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன்னுடைய இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று” என்று கூறியுள்ளது. நினைவிருக்கட்டும், சகோதரியே, விபச்சாரத்திற்காக நீங்கள் பதிலளிப்பீர்கள், உங்களுடைய வாழ்நாள் முழுவதும் நீங்கள் அதை உண்மையாகவே ஒருபோதும் செய்யவில்லையென்றாலும், ஆனால் நீங்கள் உடை உடுத்தியிருந்த விதத்தில் உங்களை நோக்கிப் பார்த்த அந்தப் பாவி, விபச்சாரத்தில் குற்றவாளியாயிருக்க வேண்டும். விபச்சாரம் செய்ததற்காக நீங்கள் நியாயத்தீர்ப்பின் நாளிலே பதில் கூறுவீர்கள். அவர் கூறும்போது…

114 அவர் இங்கே கூறுகிறார், அவர் தம்முடைய புத்தகத்தில், “விபச்சாரம் செய்தல்” என்று எழுதியிருக்கிறார்.

“யாருடன்?” என்று கேட்பான்.

“திருமதி ஜான் டோ அவளுடன்” என்று கூறுவார்.

“அப்படியானால், திருமதி ஜான் டோ, அதைக் குறித்து என்ன?” என்று கேட்பார்.

115 “நான் சத்தியம் செய்கிறேன்…என்னுடைய சாட்சியை நீங்கள் அறிவீர்கள், நான் என்னுடைய சொந்த கணவனைத் தவிர வேறொரு மனிதனுடன் ஒருபோதும் வாழவில்லை” என்று கூறுவாள்.

116 “ஆனால் இந்த மனிதனை விபச்சாரஞ் செய்ய நீ காரணமாயிருக்கும் அளவிற்கு நீ உடை உடுத்திருக்கிறாய். எனவே அவனுடன் நீ விபச்சாரம் செய்த குற்றத்திற்கு ஆளாகின்றாய். அப்பொழுதுதான் அவன் அதைச் செய்தான். நீ தான் குற்றவாளியாயிருக்க வேண்டும், நீ அந்த விதமாக உன்னைக் காண்பித்துக் கொண்டாய்” என்பார்.

117 ஏவாள் தவறு செய்தது போலப் பத்சேபாளும் தவறு செய்தாள், ஆனால் ஆதாமும் அதில் சேர்க்கப்பட்டான். நாம் எப்பொழுதும் பெண்களைக் குறித்து கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். மனிதர்களே, நீங்கள் தேவனுடைய புத்திரர். நீங்கள் மிகவும் பலமான கூட்டமாயிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன், அது உண்மை, பலமானவர்கள். நீங்கள் ஸ்திரீகளை விட மேலானவர்களாயிருக்கிறீர்கள், அது உண்மை, எனவே அதைப் போலவே நடந்து கொள்ளுங்கள். அவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்தி, ஒரு சிறு பெண்ணை எடுத்து, அவளுடைய வாழ்க்கையை பாழாக்க முயற்சிக்காதீர்கள். ஆனால் ஒரு தேவனுடைய குமாரனாயிருக்க, அவள் தவறாயிருக்கிறாள் என்று அவளிடம் சொல்லி, ஒரு தேவனுடைய குமாரனைப் போல நில்லுங்கள். அவள் உன்னுடைய சகோதரி. ஆம், ஐயா. நாம் என்ன செய்ய முயற்சிக்கிறோம், இன்றைக்கு தேவ புத்திரர்கள் என்று அழைக்கப்படுபவர்கள், சபைகளைச் சேர்ந்தவர்கள், அவர்களால் முடிந்த ஒவ்வொரு சிறு பெண்ணையும் வெளியே அழைத்துச் செல்ல முயற்சிக்கிறார்கள். நினைவில் கொள்ளுங்கள், ஒரு ஒழுக்கமற்ற ஸ்திரீ இருப்பதற்குக் காரணம், ஒரு திருமணமான ஆண் அவளைச் சீரழித்திருப்பதால்தான். எனவே, பானை கெட்டியை கறுப்பு என்று அழைக்க முடியாது, எனவே நினைவில் கொள்ளுங்கள். பாவம் தான் அவை எல்லாவற்றையும் செய்கிறது. நாம் யாவரும் மரணத்திற்கு உட்பட்டிருக்கிறோம், அதற்காக மரிக்க வேண்டும்.

118 தாவீது அந்தப் பொல்லாத காரியத்தைச் செய்தபோது, அவனுடைய சொந்த நியாயத்தீர்ப்பு அவனைக் கொன்றிருக்க வேண்டும். அந்தத் தீர்க்கதரிசி அங்கு வந்தபோது, அது மறைக்கப்பட்டிருந்ததாக அவன் எண்ணினான். அந்தத் தீர்க்கதரிசி அங்கு வந்து அவனுக்கு முன்பாக நின்றபோது, அவன், “தாவீது, எல்லாம் சரியாக நடக்கிறதா?” என்று கேட்டான்.

“எல்லாம் அருமையாயிருக்கிறது” என்றான்.

119 தாவீது தன்னுடைய உயரிய அங்கிகளையும், தன்னுடைய பெரிய கிரீடத்தையும் அணிந்து, அவன் யோவாபையும், அவனுடைய மகத்தான தளபதியையும், எல்லாவிதமான யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தான். அவன் எல்லா சத்துருக்களையும் எல்லைக்கோடுகளிலிருந்து விலக்கி, மற்ற காரியங்களையும் வைத்திருந்தான், எல்லாமே சரியாக நடந்து கொண்டிருந்தது. அவன் இந்தப் பத்சேபாவின் மூலம் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தான்.

பரிதாபமான ஊரியாவை அங்கே போகச் செய்து, யோவாபை அவன் பக்கத்தில் நிறுத்திப் பின்பு அவனிடமிருந்து விலகும் படி செய்தான். மேலும்—மேலும்—மேலும் அந்தப் பையன் சூரியன் அஸ்தமித்தபோது மரித்துப் போனான், அவனுடைய கையில் யுத்தக் கத்தியோடும், அவனுடைய கேடயத்தில் இரத்தத்தோடும், அவன் இஸ்ரவேலருக்காக நின்றான், அதே சமயத்தில் அவன் அவர்களுடைய மார்க்கத்திற்கு ஒரு மதம் மாறியவனாயிருந்தான். அப்பொழுது யோவாப் திரும்பி வந்து அவனிடம், தாவீது மரித்துப்…அதாவது—அதாவது, உரியா மரித்து விட்டான் என்று கூறியபோது, தாவீது, “இப்பொழுது எல்லாம் சரியாகிவிட்டது. எனக்கு அவனுடைய மனைவி என்னிடம் இருக்கிறாள், எல்லாமே சரியாகிவிடும். ஒரு குழந்தை பிறந்துவிட்டது” என்று நினைத்தான். ஆனால் குழந்தை சுகவீனமடைந்தது. குழந்தை மரிக்கத் துவங்கியது. அவன் அந்தக் குழந்தையின் உயிரைக் காக்க தன்னால் முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் செய்தான், ஒருக்கால் ஒவ்வொரு மருத்துவர்களும் வந்திருக்கலாம். பயனில்லை. முடிவில் அந்தக் குழந்தை மரித்துப் போய்விட்டது. குழந்தை மரித்துவிட்டதை தாவீதிடம் கூற அவர்கள் பயந்தனர். அவன் மரித்தான். அப்பொழுது அவன் எல்லாமே மறைக்கப்பட்டிருப்பதாக எண்ணினான். எனவே அவன் பத்சேபாளுக்கு ஆறுதல் கூறினான். அந்த மற்ற எல்லா மனைவிகளுக்கும் பிறகு, அவன் ஏற்கனவே அவளைத் தன்னுடைய மனைவியாக ஏற்றுக்கொண்டிருந்தான்.

120 இந்த வயோதிக தீர்க்கதரிசியோ, வயோதிக வழுக்கைத் தலையுடைய நபர் வனாந்திரத்திலிருந்து புறப்பட்டு வந்து, அமர்ந்து, “தாவீதே, எல்லாமே எப்படி நடந்து கொண்டிருக்கிறது?” என்று கேட்டான்.

121 “அருமை! அருமை! தேவனுடைய வயோதிக தீர்க்கதரிசியே, நீடூழி வாழ்க! அல்லேலூயா!” ஓ, அவன் அப்படியே…எல்லாமே அருமையாயிருந்தது என்று அவன் எண்ணினான், அவன் அதை மறைத்து விட முடியும் என்று நினைத்தான்.

122 ஆனால் உங்களால் தேவனிடத்திலிருந்து மறைக்க முடியாது! நீங்கள் இப்பொழுது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர் உங்கள் சிந்தனைகளை அறிந்திருக்கிறார், ஏனென்றால் அவர் தேவனாயிருக்கிறார். இந்தக் காலையில் கட்டிடத்தில் இருக்கிற அந்தப் பரிசுத்த ஆவியானவர், உங்களுடைய சிந்தனைகளையும், நீங்கள் யாராயிருக்கிறீர்கள் என்பதையும், நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள் என்பதையும், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதையும் அறிந்திருக்கிறார், ஏனென்றால் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

123 தேவன் அதை அந்தத் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தியிருந்தார். அவன், “தாவீது, சாலையின் *இந்தப்* பக்கத்தில் ஒரு

ஐசுவரியவான் வசித்து வாழ்ந்து வந்தான், அவன் ஏராளமான ஆடுகளை உடையவனாயிருந்தான், ஓ, அவன் மிகவும் ஐசுவரியமுள்ளவனாயிருந்தான். சாலையின் *இந்தப்* பக்கமாக வசித்து வந்த ஒரு மனிதன் ஏழையாயிருந்தான், அவனுக்கு ஒரு ஆட்டுக்குட்டி இருந்தது. அவன் அதை ஒரு மகள்போல நடத்தினான். அவன் உண்ணும் அதே கரண்டியில் அதற்கு உணவளித்தான். அவன் ஆட்டுக்குட்டியோடு உறங்கினான். எல்லாமே…அது அவனுக்கு ஒரு குமாரத்தியை போல் இருந்தது. ஒரு நாள் ஒரு விருந்தாளி வந்தான், எனவே செல்வந்தன் தன்னுடைய சொந்த ஆடுகளில் ஒன்றைக் கொண்டு சென்று, அவனுக்கு விருந்து படைப்பதற்கு பதிலாக, அதற்குப் பதிலாக அவன் அந்த ஏழையின் ஆட்டுக்குட்டியைக் கொண்டு சென்று, பலவந்தமாய், ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்து, அதைக் கொன்று, விருந்து படைத்தான்" என்றான்.

124 இப்பொழுது, அதுவே தாவீதின் இச்சைகளாயிருந்தன. அவனுக்கு ஐந்நூறு மனைவிகள் இருந்தனர், ஆனால் அவன் உரியாவின் மனைவியைக் கண்டபோது, தன்னுடைய ஐநூறு மனைவிகளில் ஒருவளிடம் பிரவேசிக்காமல், அவனுடைய இச்சைகளை சாந்தப்படுத்தவோ அல்லது திருப்திபடுத்தவோ, அவன் சென்று, இந்த வேறொரு மனிதனுடைய மனைவியிடம் பிரவேசித்து, அதன்பின்னர் அவள் ஒரு தாயானபோது, உரியாவை கொன்றான். தாவீது என்ன செய்துகொண்டிருந்தான் என்பதை அறியாதிருந்தான், ஏன், தாவீது நியாயத்தீர்ப்பை அறிவிக்க ஆயத்தமாயிருந்தான். அந்தவிதமாகத்தான் நாம் இருக்கிறோம். நாம் எப்பொழுதுமே மற்ற நபரை நியாயந்தீர்க்க முடியும், ஆனால் அது நமக்கு வரும்போது, ஓ, அது வித்தியாசமாகிவிடுகிறது.

125 தாவீது, "இதைச் செய்தவன் மரணத்திற்குப் பாத்திரன்" என்றான்.

126 அந்த வயோதிக தீர்க்கதரிசி, கண்கள் குறுகின. அவன், "தாவீதே, நீ நிச்சயமாகச் சாக மாட்டாய்!" என்றான். கிருபை துரிதமாகக் கிரியை செய்வதைக் கவனியுங்கள். ஆவியானவர் தீர்க்கதரிசியின் மேல் விழுந்து, தாவீதின் ஜீவனை காப்பாற்றினார். கிருபையோ, "நிச்சயமாகவே நீ சாகவே மாட்டாய், உன் இருதயத்தை முழுவதுமாகச் சுத்திகரிக்குமட்டும் பட்டயம் உன் வீட்டை விட்டு நீங்குவதில்லை. ஏனெனில் நீயே அந்த ஐசுவரியவான்" என்றான். ஓ, அப்பொழுது அது வித்தியாசமாயிருந்தது, இல்லையா?

127 தாவீதின் தன்னுடைய சொந்த நியாயத்தீர்ப்பாக, "இந்த மனிதன் சாக வேண்டும்! அவன் முற்றிலுமான கிரயத்தை செலுத்துவான், அவன் அதற்கான கிரயத்தை தன்னுடைய ஜீவனோடு செலுத்துவான்," என்று கூறினபோது தாவீதை காத்தது எது?

128 தீர்க்கதரிசியோ, "நிச்சயமாக (கிருபை) நீ சாகமாட்டாய். தாவீதே நீ சாகவே மாட்டாய். கிருபை உன்னைக் காத்தது" என்றான். தாவீதுக்கு உண்டான கிருபையே அவனைக் காத்தது. ஓ, என்னே!

129 கிருபையில்லாதிருந்தால், நாம் யாவரும் எங்கேயிருப்போம்? அது சரியா? நிச்சயமாக.

130 இராஜாதிபத்திய கிருபை ஒரு இராஜாதிபத்தியத்திலிருந்து வருகிறது. இராஜாதிபத்திய ஒருவரிடத்திலிருந்து வரும் இராஜாதிபத்திய கிருபை. இராஜாதிபத்தியம், அது என்ன செய்ய முடியும்? இராஜாதிபத்தியம் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். இப்பொழுது இதைக் கேளுங்கள். இராஜாதிபத்திய கிருபையானது இராஜாதிபத்தியமுள்ள ஒருவரால் மாத்திரமே அளிக்கப்பட முடியும். தேவன் இராஜாதிபத்தியமுள்ளவர், எனவே அவரால் இராஜாதிபத்திய கிருபையை அளிக்க முடியும். ஆகையால் இராஜாதிபதியாயிருக்கிறபடியால், கிருபை யாரிடமும் கேட்க வேண்டியதில்லை, அது கேட்க வேண்டியதில்லை. அது விரும்புகிறதையே செய்கிறது. அது அற்புதமாயிருக்கவில்லையா? அது, "நான் *இதைச்* செய்யலாமா? அல்லது நான் *இதைச்* செய்யலாமா? என்னால் முடியுமா? நான் செய்ய வேண்டுமா? நான் செய்வேனா?" என்று கேட்க வேண்டியதில்லை. அதற்கு ஒன்றுமில்லை. அது தானே அதைச் செய்கிறது. கிருபையானது இராஜாதிபத்தியமானது, ஆகையால் அவரால் மிகவும் கேடு கெட்டவனையும் இரட்சிக்க முடியும், அவரால் மிக மோசமானவனையும் இரட்சிக்க முடியும், அவரால் மிகத் தூய்மையற்றவனையும் இரட்சிக்க முடியும், அவரால் மிக ஒழுக்கங்கெட்டவர்களை இரட்சிக்க முடியும், அவரால் மிகவும் வியாதிபட்டவனை சுகப்படுத்த முடியும். அல்லேலூயா!

131 அவர் என்னைப் போன்ற ஒரு இழிவானவனை இரட்சிக்க முடியும். அவர் அதைச் செய்தார். அது என்ன? கிருபை! வில்லியம் பிரான்ஹாம், ஒரு குடிகாரனின் மகன். அது எந்த வித்தியாசத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை, தேவனுடைய கிருபை என்னை இரட்சித்தது!

132 "நான், ஒரு கெட்ட ஸ்திரீயின் மகள்" என்று கூறலாம். அது எந்த வித்தியாசத்தையும் உண்டு பண்ணாது, தேவனுடைய கிருபை உங்களை இரட்சித்தது. அது இராஜாதிபத்தியமாயுள்ளது, யாரிடமும் ஒன்றும் கேட்க வேண்டியதில்லை. ஆமென்! நான் அதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அல்லேலூயா!

133 இழிவான பாவியை எடுத்து அவனை உறைந்த மழையைப் போல் வெண்மையாக்க முடியும், அதைக் குறித்து யாரிடமும் கேட்க வேண்டியதில்லை. ஓ, அது இராஜாதிபத்தியமாயிருக்கிறபடியால் அதைச் செய்ய முடிகிறது. இப்பொழுது, துரிதமாகக் கவனியுங்கள்.

134 அது சிலுவையில் நிரூபிக்கப்பட்டது, மிகவும் இழிவானக் கள்ளனாய் இருந்தபோது, அவன் மரிக்கத் தகுதியானவனாக இருந்தான். தேவன் அவனுடைய சிந்தையில் ஒருபோதும் தோன்றவில்லை. அவன் அதைக் குறித்து ஒன்றுமே

நினைக்கவில்லை. அங்கே சிலுவையில், அந்த இரத்தம் தோய்ந்த உதடுகளினூடாக, முனகலின் இடையே, "கர்த்தாவே, என்னிடத்தில் இரக்கமாயிரும்!" என்று ஒரு சத்தம் எழுந்தது.

135 வேறொருவர் இரத்தத்தினூடாகத் திரும்பி வந்து, கண்ணீர், வேதனை, கிருபையைப் பற்றிப்பிடித்து, "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்" என்றார். கிருபை அதைச் செய்தது. அந்தக் கள்ளன் எப்படி தனக்குத்தானே உதவி செய்து கொண்டிருக்க முடியும்? ஆதாம் தனக்குத்தானே உதவி செய்து கொள்ள முடியாததை போல, ஏவாள் தனக்குத்தானே உதவி செய்து கொள்ள முடிந்ததை போல, நீங்களும் உங்களுக்குத்தானே உதவ முடியாது போல, எப்படி நான் எனக்கு உதவிசெய்து கொள்ள முடியாத நிலையில் உள்ளேனோ நமது காலணி பட்டைகளால் எப்படி நாம் பால்வெளிப் பாதையில் நம்மை நாமே இழுத்துச் செல்ல முடியாதது போல. நம்மால் அதைச் செய்ய முடியாது. ஆனால் தேவனுடைய கிருபை அதைக் குறித்து ஏதோ ஒன்றைச் செய்ய முடியும், அது அதைச் செய்கிறது! தேவனுடைய கிருபை, தேவனுடைய கிருபையின் இராஜாதிபத்தியம், அந்த மரித்துக்கொண்டிருக்கிற திருடனிடத்தில் வந்து, "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்" என்றார். ஓ, அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்! அது அற்புதமானது.

136 அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்: அன்பும் கிருபையும் சகோதரிகள், இரட்டை சகோதரிகள். அன்பில்லாமல் நீங்கள் கிருபையைப் பெற்றிருக்க முடியாது. அவர்கள் இரட்டை சகோதரிகள். முற்றிலும் சரி. நீங்கள் கிருபையைப் பெறுவதற்கு முன்பு, நீங்கள் அன்பைப் பெற்றிருக்க வேண்டும். நீங்கள் உண்மையாகவே ஒருவருக்கு ஒரு தயவு காண்பிப்பதற்கு முன்பு, நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள்; சரியோ அல்லது தவறோ, எப்படியிருந்தாலும், நீங்கள் அவர்களை நேசிக்க வேண்டும், இல்லையென்றால் உங்களால் முடியாது. பார்த்தீர்களா? எனவே அன்பும் கிருபையும் ஒன்றே. அவர்கள் இரட்டை சகோதரிகள், அவ்வளவுதான், அன்பும் கிருபையும். அவர்கள், நாம்…நாம் ஒன்றையில்லாமல் மற்றொன்றைக் காண முடியாது. "தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்து, தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார்," அவர் தம்முடைய கிருபையை ஊற்றி, அதைப் பரிசுத்த ஆவியினூடாக நம்முடைய இருதயங்களில் கொண்டு வந்தார். பார்த்தீர்களா? ஒன்றோடொன்று சேர்ந்து கிரியை செய்யாமல் உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது. கிருபை, தேவனுடைய கிருபையே நம்மை இரட்சிக்கிறது.

137 இப்பொழுது, அந்தக் கிருபை, அந்த மரிக்கும் கள்ளனைப் போல, அவர்கள் அதைக் கண்டபோது, அது புலவர்களால் ஏவப்பட்டிருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஒரு புலவர் கூறினார்:

மரித்துக் கொண்டிருந்த கள்ளன் தன் நாளில்

அந்த ஊற்றைக் காண மகிழ்ச்சி கொண்டான்;
நான் அவனைப் போல் இழிவானவனாயிருப்பினும்,
அங்கு என் பாவங்களைக் கழுவிக் கொள்கிறேன்.

காயங்களிலிருந்து பெருக்கெடுத்து வந்த
அந்த நதியை நான் விசுவாசத்தில் கண்டமுதற்கு
மீட்கும் அன்பே என் கருப்பொருளாக இருந்து வருகிறது,
நான் மரிக்கும் வரைக்கும் அது அவ்வாறிருக்கும்.

பின்பு கண்ணியமான, இனிமையான பாடலினால்,
இரட்சிக்கும் உமது வல்லமையைப் பாடுவேன்,
அப்பொழுது இந்த எளிய, மழலைச் சொல் பேசும் திக்குவாய் நாவு
அமைதியாகக் கல்லறையில் கிடக்கும்போதே.

கிருபை, ஆச்சரியமான கிருபை! அல்லேலூயா! ஒருவர் அதை எழுதினார்:

ஓ, தேவனுடைய அன்பு, எவ்வளவு ஐசுவரியமும், தூய்மையுமுள்ளது!
எவ்வளவு ஆழமும் பெலமும் கொண்டதாய் இருக்கிறது!
அது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்,
பரிசுத்தவான்களும் தூதர்களும் பாடும் பாடல்.

நாம் சமுத்திரத்தை மையினால் நிறைத்து,
மேலும் வானங்கள் தோல் காகிதமாகச் செய்யப்பட்டிருந்தாலும்;
பூமியிலுள்ள ஒவ்வொரு தண்டையும் ஒரு எழுதும் இறகாக்கினாலும்,
ஒவ்வொரு மனிதனையும் எழுதும் தொழிலில் அமர்த்தினால்;
தேவனுடைய அன்பை எழுதுவதென்பது
அது சமுத்திரத்தை வற்றச் செய்யும்;
வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை படர்ந்துள்ள தோல் சுருள்,
தேவனுடைய அன்பு அனைத்தையும் கொள்ளுமா.

138 அதுதான் அது, கிருபை, தேவனுடைய கிருபை. தேவனுடைய கிருபை ஒரு நிழலைக் கொண்டு வந்துள்ளது…தேவன் நம்மில் உள்ள தம்முடைய அன்பினால் கிருபையை நமது ஜீவியங்களுக்குள் கொண்டு வந்திருக்கிறார். கிருபையால் செய்ய முடியாத வேறொரு காரியமும் இங்கே உள்ளது; கிருபையை வாங்க முடியாது,

கிருபையை விற்க முடியாது. அது கிருபையாயுள்ளது! அது இராஜாதிபத்தியம் படைத்த ஒருவரால் உண்டானது. ஆம், ஐயா. நீங்கள் அதற்காகப் பேரம் பேச முடியாது. நீங்கள், “தேவனே, நீர் *இன்ன-இன்னதைச்* செய்தால், நான் *இன்ன-இன்னதைச்* செய்வேன்” என்று கூறலாம். உங்களால் அதைச் செய்ய முடியாது. தேவன் அதைச் செய்யமாட்டார். நீங்கள் தேவனிடத்திலிருந்து ஒன்றையும் வெளியே இழுக்க முடியாது. தேவன் தம்முடைய கிருபையினால் அதை உங்களுக்கு அளிக்கிறார். ஓ, ஓ, ஓ, என்னே!

139 “ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்.” அது உண்மை.

140 ஜனங்கள் முகங்குப்புற விழுந்து கிடந்தனர். சில மனிதர் என்னிடத்தில் வந்து...இன்றைக்கு கட்டிடத்தில் பின்னால் பையன்களில் ஒருவனை நான் கண்டேன் என்று நான் நினைக்கிறேன். ஒரு மெத்தோடிஸ்டு பையன் உள்ளே வந்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு...அந்தப் பையன்கள் என்னிடம் வந்து, “இப்பொழுது, சகோதரன் பிரான்ஹாம், இப்பொழுது நாங்கள் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோம், எனவே நாங்கள் வரங்களைத் தேடிச் செல்லலாமா?” என்று கேட்டனர்.

நான், “அதைச் செய்யாதீர்கள். அதைச் செய்யாதீர்கள்” என்றேன்.

141 தேவன் இராஜாதிபத்தியத்தின்படி தமது வரங்களை அளிக்கிறார். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. முதலாவது காரியம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் ஏதோ ஒரு காரியத்தை நாடிச் செல்கிறீர்கள், “தேவனே, நீர் என்னை ஒரு பிரசங்கியாராக்கிவிடும், நீர் *இதை* எனக்குச் செய்யும்” என்றும், நீங்கள் என்னவாக இருக்கப் போகிறீர்கள்? ஒரு தலைக்கனம் பிடித்தவன், அவ்வளவுதான். நீங்கள் ஏதோ ஒரு மனிதனுடைய வேத சாஸ்திரத்திற்குச் சென்று, ஏதோ ஒரு ஸ்தாபனத்திற்குச் செல்வீர்கள், அப்பொழுது நீங்கள் அங்கே தூணாகி, புழுகிப் போய்விடுவீர்கள். தேவன் அழைப்பை விடட்டும். தேவன் உங்களை அழைப்பார், தேவன் உங்களைப் பரிசுத்தமாக்குவார், தேவன் உங்களுக்கு என்ன தேவையோ அதை உங்களுக்கு அளிப்பார். ஆம், ஐயா.

142 நீங்கள் கிருபைக்காகப் பேரம் பேச முடியாது. இல்லை ஐயா. நீங்கள், அதை விற்க முடியாது, அது பேரம் பேசப்பட முடியாது, அல்லது அது வாங்கப்பட முடியாது, பரிமாற்றம் செய்யப்பட முடியாது. நீங்கள், “சரி, இப்பொழுது, கர்த்தாவே, நான் இந்தப் பெரிய பாப்டிஸ்டு சபையில் அல்லது இந்தப் பெரிய மெத்தோடிஸ்ட் சபையில் சேர்ந்து கொள்வேன், அல்லது இந்தப் பெரிய பெந்தேகோஸ்தே சபை அல்லது இந்தப் பெரிய நாசரேய சபை. நீர் *இதை* எனக்குச் செய்தால், நான் *இதைச்* செய்வேன்” என்று கூற முடியாது. அதைப் பேரம் பேச முடியாது. இல்லை ஐயா.

143 “பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும். என் பிதா ஒருவனை முதலில் அழைத்தாலொழிய, அவன் என்னிடத்தில் வரமாட்டான்” என்றார்.

144 நீங்கள் அந்தப் பெரிய சபையின் ஒரு அங்கத்தினராகிவிட்டீர்கள், அவ்வளவுதான், நீங்கள் இரட்சிக்கப்படமாட்டீர்கள். கிருபை உங்களை இரட்சிக்க வேண்டும். நம்முடைய தாலந்துகள் ஒய்வதில்லை, நம்முடைய தாலந்துகள் நம்முடைய—நம்முடைய... நாம் பெற்றுள்ள தாலந்துகளின் மூலம் கிருபையை சம்பாதிக்க முடியாது.

145 தேவன் என்னை ஒரு பிரசங்கியாக ஆக்கியிருந்தால், அவருடைய கிருபை என்னோடிருந்தது என்பதை அது காண்பிக்காது. இல்லை, இல்லை. அவருடைய கிருபை மாத்திரமே என்னை இரட்சித்தது. நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதால் நான் இரட்சிக்கப்படவில்லை. நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசுகிறீர்கள் என்ற காரணத்தினால் அல்ல, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். ஓ, இல்லை. நீங்கள் பிரசங்கிக்கிறீர்கள் என்ற காரணத்தினால் அல்ல. நீங்கள் பிரசங்கிப்பதனால் கூட நீங்கள் இரட்சிக்கப்படவில்லை. நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசுவதால் நீங்கள்—நீங்கள் இரட்சிக்கப்படவில்லை. நீங்கள் இந்தக் காரியங்களில் எதையாகிலும் செய்கிற காரணத்தால் நீங்கள் இரட்சிக்கப்படவில்லை. முதலாம் கொரிந்தியர் 13 அதை நிரூபிக்கிறது, நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், சகல இரகசியங்களையும் அறிந்தாலும் (ஒரு பிரசங்கியார்), *இவைகளையெல்லாம்* நான் செய்கிறவனாயிருந்து, மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் அன்பாகிய அன்பு உள்ளே வரும் வரைக்கும் நான் ஒன்றுமில்லை.” அன்பு என்பது கிருபை. தேவனுடைய கிருபையே எல்லாவற்றையும் செய்கிறது.

146 சில ஜனங்கள், இந்த ராக் அண்ட் ரோல் ராஜாக்கள் சிலரைப் போன்றே நீங்களும் திறமைகளை உடையவர்களாயிருக்கிறீர்கள். அது எனக்குக் குமட்டல் உண்டாக்குகிறது, எனக்குத் தெரியாது, என்னுடைய ஆவிக்குரிய குமட்டல். நான் உங்களுக்குக் கூறுவேன், இந்த ராக் அண்டு ரோல் நடனக்காரர்கள் சனிக்கிழமை இரவு எழுந்து நின்று, ராக் அண்டு ரோல் பாடுவதையும், இரவு முழுவதும் நடனமாடுவதையும் நான் கேட்கும்போது, அதன்பின்னர் அடுத்த நாள் காலையில் கூட்டத்தினரை சந்திக்க வந்தபோது, அதைப் போன்ற காரியங்கள் ஒரு நீண்ட பரிசுத்தமான முகத்தை வைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள், அங்கே ஜனங்களுக்கு முன்பாக எழுந்து நின்று, ஏதோ ஒரு பாடலைப் பாடி, அவர்கள் பரலோகத்திற்குச் செல்லப் போகிறார்கள் என்று நினைக்கிறார்கள். என்னால் அநேக பெயர்களை அழைக்க முடியும், ஆனால் நான் அதைச் செய்ய வேண்டியதில்லை. இந்த ஒலிநாடா

எங்கும் செல்கிறது. ஆனால் நீங்கள் யாவரும் அறிவீர்கள். அண்மையில் இங்கே ஹாலிவுட்டில் ஒரு பையன் ஒரு பெண்ணை முத்தமிடமாட்டான், ஏனென்றால் அது அவனுடைய "மதத்திற்கு" விரோதமாயிருந்தது. தன்னுடைய "மதத்திற்கு" எதிராக ராக் அண்ட் ரோல் படங்களைத் தயாரித்து, அவமானகரமான காரியங்களையும், அதைப் போன்ற—போன்ற காரியங்களையும் செய்கிறான். யூதாஸே, நீங்கள் உங்களுடைய முப்பது வெள்ளிக்காசுகளை எடுத்துக்கொண்டு, தேவனுடைய கிருபையில் ஏதோ ஒரு காரியத்திற்கு தகுதியுடையவராக இருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அது நரகத்தில் உனக்கு ஒரு இடத்தை வாங்கித் தருமேயன்றி வேறொன்றும் செய்யாது!

147 தேவனுடைய கிருபையானது பேரம் பேசப்பட முடியாது, அல்லது...தாலந்துகளைக் கொண்டும் வாங்க முடியாது. அது இராஜாதிபத்திய கிருபையாயிற்றே! "நான் என் கரங்களில் ஒன்றும் கொண்டு வரவில்லை, வெறுமனே உம்முடைய சிலுவையை நான்பற்றிக் கொள்கிறேன்." நிர்வாணமாக, காயப்பட்டவனாக, நான் இருக்கிறவண்ணமாகவே வருகிறேன்.

> நான் அப்படியே எந்த ஒரு முறையீடுமின்றி உள்ளேன்,
> ஆனால் உமது இரத்தம் எனக்காகச் சிந்தப்பட்டது,
> நான் உம்மண்டை வரும்படி நீர் என்னைக் கட்டளையிடுகிறீர்,
> ஓ தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன்!

148 அவ்வளவுதான், கிருபையே என்னைக் கொண்டு வந்தது. கிருபை அதைச் செய்தது. கிருபையைப் போன்றது, நான் கூற விரும்பும் மற்றொரு காரியம், சில நேரங்களில் கிருபை...

149 இந்தப் பெரிய சபைகள், நீங்கள் அங்குச் செல்லலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள், அவர்கள், "நாங்கள் நகரத்திலேயே மிகப்பெரிய சபையைக் கட்டினோம். நாங்கள் இங்கே ஒரு பெண் உதவி சங்கத்தை வைத்துள்ளோம்...ஏழைகளுக்கான ஆடைகளை வழங்குகிறோம், அதை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறது. நாங்கள் ஏழைகளுக்கு உணவளிக்கிறோம். நாங்கள் *இதையெல்லாம்* செய்கிறோம்" என்று நினைக்கிறார்கள்.

பவுல், "நானும் கூட அவைகளைச் செய்யலாம், ஆனால் அவை ஒன்றுமில்லை" என்றான்.

150 அவர்கள், "சரி, நாங்கள், நாங்கள் ஒரு பண்டைய ஸ்தாபனம். நாங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக இங்கே இருந்து வருகிறோம். எங்கள் ஸ்தாபனம் ஐந்நூறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஜான் வெஸ்லி, அலெக்சாண்டர் காம்ப்பெல், மற்றும் அங்கிருந்த இந்த மகத்தான ஸ்தாபகர்கள், அவர்கள் நம்முடைய சபையை ஸ்தாபித்தனர். அல்லேலூயா!"

151 பாருங்கள், இயேசு கிறிஸ்து இந்தச் சபையை நிறுவினார், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், பெந்தெகொஸ்தே வரைக்கும் சென்று அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை பெற்றுக்கொள்ளும் வரை காத்திருக்கும்படி அவர்களிடம் கூறினார்.

152 அப்படியிருந்தும் நீங்கள் பெந்தேகோஸ்தே சபையைச் சேர்ந்தவராக இருந்து, இழக்கப்பட முடியும். பெந்தேகோஸ்தே சபையானது மற்றெந்த சபையையும் விட மேலானதல்ல. அது உண்மை.

153 அதைக் குறித்த காரியம் என்னவென்றால், ஒரே ஒரு சபை மாத்திரமே உண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நீங்கள் பிறந்துள்ள சபை அதுவே, "ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறீர்கள்," I கொரிந்தியர் 12:13, அது உண்மை, முதலாம்—முதலாம் கொரிந்தியர் 12. இப்பொழுது, நாம் அந்தச் சபைக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம்.

154 ஆனால் ஜனங்கள் அதற்குத் தகுதியுடையவர்களாய் இருக்க முடியும் என்று நினைக்கிறார்கள். "ஏன், நாங்கள், நான்—நான் பள்ளிக்குச் சென்றேன், நான் *இதைச்* செய்யக் கற்றுக்கொண்டேன், நான் வேதாகம கருத்தரங்குகளுக்குச் சென்றேன், நான்…" அது ஒரு காரியத்தையும் பொருட்படுத்துகிறதில்லை. நீங்கள் தேவனுடைய கிருபையை வாங்க முடியாது.

155 தேவனுடைய கிருபை அந்த விதமாகவே உள்ளது. முடிவாக, நான் உங்களுக்கு ஒரு கதையைக் கூறட்டும். தேவனுடைய கிருபை இந்த விதமாக உள்ளது. ஒரு காலத்தில் ஒரு வல்லமையுள்ள இராஜா இருந்தான், இந்த வல்லமையுள்ள இராஜாவுக்கு ஒரு குமாரன் இருந்தான், அது அவனுடைய ஒரே மகன். ஒரு நாள் ஒரு கொலைகாரன் அந்தப் பையனைக் கொன்றான். அந்த இராஜ்ஜியத்தினூடாக அந்தக் கொலைகாரனைத் தேடுவதற்காகப் பிரதிநிதிகள் சென்றனர். அவர்கள் முடிவாக அந்தக் கொலைகாரனை கண்டுபிடித்தனர். அவர்கள் அவனைக் கண்டுபிடித்தபோது, அவர்கள் அவனைத் திரும்பக் கொண்டு வந்து சிறையில் அடைத்தனர். அவர்கள் அதைச் செய்தபோது, ஒரு வழக்கு வைக்கப்பட்டு, ஒரு தண்டனை விதிக்கப்பட்டது. ஓ, அது ஒரு பயங்கரமான காரியமாயிருந்தது. அவன் இராஜாவின் குமாரனை கொலை செய்திருந்தான், அவனுக்கு என்ன வரப்போகிறது என்பதை அவன் அறிந்திருந்தான்.

156 அவர்கள் அவனை உட்புற அறைகளுக்குள் வைத்து, கதவுகளைப் பூட்டி, யாரும் உள்ளே வர முடியாதபடி தாள்களைப் போட்டனர்…சுற்றி காவலர்கள் இருந்தனர், ஏனென்றால் இந்தப் பையன் என்னவிதமான ஒரு பயங்கரமான தண்டனையைப் பெற்றுக்கொள்ளப் போகிறான் என்பதை நாங்கள் அறிவோம்,

ஏனென்றால் அவன் ராஜாவினுடைய குமாரனை, ராஜரீக ராஜாவின் குமாரனைக் கொன்றான். கதவுகளைச் சுற்றிலும் காவலர்கள் போடப்பட்டிருந்தனர். அவன் உட்புற அறைகளில் வைக்கப்பட்டான். ஆடைகள் அவிழ்க்கப்பட்டு, ஒரு—ஒரு அரைக் கச்சையைத் தவிர வேறு எதுவும் அவன்மீது இல்லை. அவன் அங்கே அந்த நிலையில் இருந்தான். பட்டினி கிடந்த அவனுக்குப் புசிக்க ஒன்றுமே கொடுக்கவில்லை. அவன் அந்த நிலையில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

157 அதன்பின்னர் அவர்கள் அவனை ஒரு வழக்கு விசாரணைக்குக் கொண்டு வந்தனர். அவன் குற்றவாளி என்று கண்டறியப்பட்டு, குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டது. பயங்கரமான மரண தண்டனையின் கீழ் அவன் தூக்கிலிடப்பட வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அவனுடைய அழிவுக்கேதுவான ஜீவன் போய்விடும் வரைக்கும் அவன் அங்குலமாகக் கொல்லப்பட வேண்டியவனாயிருந்தான். நீதிபதியினால் மரணதண்டனை விதிக்கப்பட்டு, அவன் மரிக்க வேண்டியவனாயிருந்தான். அவன் கெஞ்சி, அவன் கதறி, அவன், “நான் குற்றவாளியாயிருந்தாலும், நான் குற்றவாளியாயிருந்தாலும், நான் அதைச் செய்ததற்காக வருந்துகிறேன். நான் அதை ஒருபோதும் செய்திருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். நான் அதைச் செய்ததற்காக வருந்துகிறேன். ஒரு நொடிப்பொழுதில், கோபத்தின் வெறியில் அதைச் செய்தேன். நான் அந்தவிதமாக அதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை” என்றான்.

158 ஒரு நாள் ராஜா அந்தப் பையனைப் பார்க்க, அவனிடம் சொல்ல, அவனிடம் பேசவும், அவருடைய சொந்த மகனை, அவருடைய ஒரே மகனை அவன் கொன்றதைக் குறித்து அவனிடம் பேசவும் அந்த இடத்திற்கு சென்றார். அவன் அந்தப் பையனைக் கொன்று போட்டிருந்தான். அவர், “நான் அவனிடம் பேசப் போகிறேன்” என்றார்.

159 அவன் அங்கே சென்றபோது, அது கூண்டில் அடைக்கப்பட்ட மிருகத்தைப் போன்று அந்தக் கூண்டிற்குள் திரும்பிப் பார்த்தான். அவனுடைய சிறிய ஒல்லியான சரீரம் அங்கே ஒரு மூலையில் கிடந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டார். அவனுடைய முகம் முழுவதும் குழிக்குள் விழுந்து, அவனுடைய தாடைகள் பின்வாங்கின, அவனுடைய கண்கள் பின்னோக்கிச் சென்று, அவனுடைய கண்களில் எல்லாம் கழிவு நிறைந்திருந்தது, அவனுடைய வாய் முழுவதும் வெண்மையாக்கப்பட்டிருந்தது. தண்ணீர் இல்லாமல், தாகமாய் இருந்தான். அங்கே தன்னுடைய முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதான். ராஜா, “எழுந்து நில்” என்றார். அவன் அவரண்டை வந்து, அவன் அவரை நோக்கிப் பார்த்தான். அவர், “நீ ஏன் என் மகனைக் கொன்றாய்? என் மகன் உனக்கு என்ன செய்தான்? அவனை நீ ஈட்டியால் குத்திக்

கொன்றாயே, அப்படிப்பட்ட மரணம் எய்வதற்கு தகுதியாயிருக்க அவன் என்னசெய்தான்?” என்று கேட்டார்.

160 அவன், “ஒன்றுமில்லை, என் ஆண்டவனே, ஒரு காரியமும் இல்லை. என்னுடைய சொந்த திமிரான அவமதிக்கும் பண்பு, என்னுடைய சொந்த வழிகள் மட்டுமே. நான் அவனைக் குறித்து பொறாமை கொண்டிருந்த காரணத்தால் நான் அவனைக் கொன்றேன், எனக்குக் கோபம் மூண்டுவிட்டது, நான் அவனைக் கொன்றேன்” என்றான். “ஐயா, உம்முடைய நீதியின் கீழ் நான் மரிக்க வேண்டும். அதை நான் உணர்கிறேன், அதற்கும் நான் தகுதியானவன். நான் அழுவதற்கு ஒரே காரணம், எந்தக் காரணமும் இல்லாமல் அந்த ராஜரீக மனிதனை அப்படிக் கொன்றதற்காக நான் வருந்துகிறேன்” என்றான்.

161 ராஜா தன் குதிகால்களைத் திருப்பி வெளியே நடந்து, மேசையின்பக்கம் சென்றான், “எல்லா பதிவுகளையும் அழித்துப் போடுங்கள்!” என்றார். நீங்கள் அறிவீர்கள், அவைகளை மறதியின் கடலில் போட்டு விடுதல். “எல்லா பதிவுகளையும் அழித்துப் போடுங்கள்! அவனைக் கழுவி, சுத்தப்படுத்துங்கள். நான் அவனுக்காக ஒரு மேலங்கியை அனுப்புவேன்” என்றார்.

162 சிறிது நேரம் கழித்து, ஒரு பெரிய மோட்டார் வாகனம் வாசலண்டை வந்தது. அது வந்தபோது, சிறை அறைக்கு ஒரு கம்பளம் விரிக்கப்பட்டது. ராஜா மோட்டார் வாகனத்தின் முனையருகில் நின்று, “என் மகனே, என்னோடு அரண்மனைக்குச் சவாரி செய்து வா” என்று கூறினார். அவர் ராஜாவின் அங்கியைத் அவன் தோளில் அணிவித்தார். அவர், “இன்று முதல் நீ என் மகன்” என்றார்.

163 ஏனென்றால் அவர் இரக்கமாயிருந்தார், அது கிருபையாயிருந்தது. அதுதான் நான், அது தான் நீங்கள். நாம் நம்முடைய பாவங்களால் தேவனுடைய குமாரனைக் கொன்றோம். நாம் அந்நியர்களாகவும், அழுக்கானவர்களாகவும், அசுத்தமானவர்களாகவும், உலகத்தின் இருண்ட சிறையில் கிடந்தவர்களாகவும் இருந்தோம். தேவன் நம்மைத் தம்முடைய சொந்த குமாரனின் இரத்தத்தினால் கழுவினார், அவர் நம்மைச் சுத்திகரித்து, பரிசுத்த ஆவியின் வஸ்திரத்தை அணிவித்தார். இப்பொழுது தேவனுடைய மகத்தான இரதம் என்றோ ஒரு நாள் வாசலண்டை திரும்பி வரும், நாம் அவரோடு ஜீவிக்க வீட்டிற்குச் செல்வோம். எல்லா பதிவுகளும் அழிக்கப்பட்டுவிட்டன, நாம் இனி ஒருபோதும் நியாயந்தீர்க்கப்பட முடியாது; அவைகளை சுட்டெரித்து, அவர் அவைகளை மன்னிப்பின் கடலில் போட்டு, அதைக் குறித்து இனி ஒருபோதும் நினையாமலிருப்பார். ஆகையால்தான் நாம் பாடுகிறோம்:

> அற்புதமான கிருபை! அந்தச் சத்தம் எவ்வளவு
> இனிமையானது,

அது என்னைப் போன்ற ஒரு இழிவானவனை இரட்சித்தது!
நான் ஒரு காலத்தில் காணாமற்போனேன், ஆனால் இப்பொழுது நான் கண்டுபிடிக்கப்பட்டேன்,
குருடாயிருந்தான், ஆனால் இப்பொழுதோ நான் காண்கிறேன்.

கிருபையே என் இருதயத்திற்கு பயப்படக் கற்றுக் கொடுத்தது,
கிருபை என் பயத்தை போக்கியது;
அந்தக் கிருபை தோன்றினது எவ்வளவு விலையேறப்பெற்றதாயிருந்தது
நான் விசுவாசித்த முதல் வேளையில்!

164 நாம் நம்முடைய தலைகளைச் சற்று நேரம் ஜெப வார்த்தைக்காக வணங்கியிருக்கையில், பாவியான நண்பனே, இது உன் நேரமாயிருக்க நீ அனுமதிக்க மாட்டாயா? நீங்கள் முதலில் விசுவாசித்த வேளையானது இப்பொழுதே இருக்கட்டும். உங்களுடைய சிந்தையில் தீர்மானித்து, "தேவனாகிய கர்த்தரே, நான் குற்றவாளி. என்னை இரட்சிக்க கிருபை தேவை என்பதை நான் உணருகிறேன். என்னால் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது. நான் இழக்கப்பட்டிருக்கிறேன். நான் முடிந்துவிட்டேன். என்னால் ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. நான்—நான்—நான் முற்றிலும் உதவியற்றவனாய், நம்பிக்கையற்றவனாய், தேவனில்லாமல், இரக்கமில்லாமல், கிறிஸ்துவில்லாமல், உலகத்தில் அந்நியனாக்கப்பட்டவன். ஓ, கர்த்தாவே, இன்றைக்கு நான் இருக்கிற இந்தப் பாவச் சிறையிலிருந்து என்னை வெளியே எடுக்கும்படிக்கு நீர் இரக்கமாயிருக்கமாட்டீரா? ஒரு பாவியாகிய, என்னிடத்தில் இரக்கமாயிரும்" என்று கூறுங்கள். நீங்கள் உங்களுடைய கரத்தை உயர்த்தி, "தேவனாகிய கர்த்தரே, உம்முடைய கிருபை தேவைப்படும் அந்த நபர் நான் தான்" என்று கூறுவீர்களா? நீங்கள் உங்களுடைய கரத்தை உயர்த்தி, "சகோதரன் பிரான்ஹாம், எனக்காக ஜெபியுங்கள், நான் இப்பொழுது விசுவாசிப்பேன்" என்று கூறுவீர்களா? என் சகோதரனே, அங்கே பின்னால் உள்ள உங்களைத் தேவன் ஆசீர்வதிப்பாராக.

165 வேறு யாரோ ஒருவர், "சகோதரன் பிரான்ஹாம், இப்பொழுது என்னை நினைவு கூருங்கள், ஓ, சகோதரனே, தயவுசெய்து ஜெபத்தில் செய்யுங்கள்" என்று கூறுங்கள். பெண்மணியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. "ஜெபியுங்கள்..." சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்கே ஜன்னலருகே உள்ள சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னால் உள்ள சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே,

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, இங்குள்ள மற்றவரை, “சகோதரன் பிரான்ஹாம், என்னை நினைவு கூருங்கள்.” அங்குள்ள என் சகோதரனைத் தேவன் ஆசீர்வதிப்பாராக. ஆம், இங்குள்ள மற்றொன்று. சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உங்களை இங்கு ஆசீர்வதிப்பாராக. அவர் இப்பொழுது உங்களைக் காண்கிறார். உண்மையாகவே அதைப் பொருட்படுத்துங்கள். வாலிபனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. அவர் காண்கிறார். அதை அறிந்திருக்கிறார். சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சுவரோரத்தில் உள்ள சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்குள்ள சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சுவற்றில் சாய்ந்து கொண்டிருக்கும் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நான் இருக்கிறவண்ணமாக, இல்லாமல்...

வேறு யாராவது இருப்பார்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னால் உள்ள உங்களுடைய கரத்தை நான் காண்கிறேன்.

ஆனால் உமது இரத்தம் எனக்காகச் சிந்தப்பட்டது,

ஆம், கர்த்தாவே. சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அது...(சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.)...நான் வருவதற்குக் கட்டளையிட்டுள்ளீர்...(தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அங்கே...?...)...உம்மை,

கிறிஸ்தவர்களே, ஜெபியுங்கள், ஜெபியுங்கள்.

நான்...(வாலிபப் பெண்மணியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.)...நான் வருகிறேன்!

அப்படியே நான் இருக்கிறவண்ணமாகவே இருந்து, காத்திருக்க வேண்டாம்
என் ஆத்துமாவின் இருண்ட கறையை போக்க,
ஒவ்வொரு இடத்திலும் இரத்தத்தை சுத்திகரிக்க முடிந்த உமக்கு,
ஓ, ஆட்டுக்குட்டியானவரே...(கிருபை, ஓ, கிருபை!) நான் வருகிறேன்! நான் வருகிறேன்!

166 இப்பொழுது, ஏறக்குறைய பதினைந்து அல்லது இருபது கரங்கள் மேலே உயர்த்தப்பட்டன. இப்பொழுது உங்களுடைய தலைகள் வணங்கியிருப்பதோடு, உங்களுடைய கரங்களை உயர்த்தின நீங்கள், நான் உங்களுக்காக ஜெபிக்கையில், அமைதியாக இப்பொழுது எழுந்து நில்லுங்கள். நமக்கு இங்கே பீடத்தினருகில் இடமில்லை. அது அப்படியே, என்னால் முடியாது. தங்களுடைய

கரத்தை உயர்த்திய ஒவ்வொருவரும் இப்பொழுது ஜெபிக்கப்பட விரும்புகிறவர்கள், அனைவரும் எழும்பி நில்லுங்கள். நான் ஜெபிக்கையில் இப்பொழுதே உங்களுடைய காலூன்றி எழும்பி நில்லுங்கள். எல்லா இடங்களிலும் உங்கள் காலூன்றி எழும்பி நில்லுங்கள்.

...எனக்காக ஊற்றப்பட்டு,
அந்த...(அது அருமையாயுள்ளது, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக...?...)

...உம்மண்டைக்கு வருமாறு என்னை அழைக்கிறீர்,
ஓ தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன்!

167 நினைவிருக்கட்டும், கிருபை இனி நிலைத்திராத ஒரு நாள் வரக்கூடும், அது இனிமேல் உங்களுக்குப் பெருகாது, அது மிகவும் காலதாமதமாகிவிடும். இப்பொழுது அது மிகவும் தாமதமாகவில்லை.

168 ஓ தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, மரித்தோரிலிருந்து எங்கள் இரட்சகரை திரும்பக் கொண்டு வந்தவரே, இப்பொழுது ஜீவிக்கிறார், அவர் உன்னத மகிமையில், கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியை எங்கள்மீது அனுப்பி, பாவிக்குப் பாவ உணர்வைக் கொண்டு வருகிறார். தேவனே, தங்களுடைய காலூன்றி நிற்கும் இந்த ஜனங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். கர்த்தாவே, அது உண்மையாயுள்ளது. நீர், "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பிதாவுக்கு முன்பாகவும் தேவதூதர் முன்பாகவும் அறிக்கை பண்ணுவேன்" என்று கூறினீர். நாங்கள் அந்த மகத்தான நியாயத்தீர்ப்பின் காலையில் நிற்கும்போது, அது என்ன ஒரு நேரமாய் இருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். கர்த்தாவே, அவர்கள் இப்பொழுது நின்று கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய பாவங்கள் அவர்களுக்கு முன்பாகச் செல்லும்; சில மனிதருடைய பாவங்கள்பின் தொடருகின்றன. இந்த ஜனங்கள் இந்தக் காலையில் இங்கே நின்று கொண்டிருக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் உம்மைத் தங்களுடைய இரட்சகராக விரும்புகின்றனர் என்பதையும் அறிந்திருக்கிறார்கள். நீர் இருதயங்களின் உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து பார்க்கிறீர். அவைகள் யாவையும் நீர் அறிந்திருக்கிறீர்.

169 பிதாவே, நீர் அவர்களுடைய விண்ணப்பங்களை அருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவர்களை இரட்சியும். அவர்கள் இந்தக் காலையில் தேவனுடைய கிருபையின் சிறு செய்தியின் வெற்றிச் சின்னங்கள்; நாங்கள் என்ன செய்திருந்தாலும்

கவலைப்பட வேண்டியதில்லை, அது இன்னமும் குனிந்து நம்மை இழுக்கிறது. கர்த்தாவே, அதை அருளும். இந்த இருதயங்களுக்கு கிருபையை அருளும். அவர்கள் எப்பொழுதுமே இயேசுவை தங்களுடைய இரட்சகராகக் காண்பார்களாக. அவர்கள் செயலைப் புரிந்துள்ளார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களை எழும்பி நிற்கும்படி கூறினார். அவர்கள் அதைச் செய்தனர். பரிசுத்த ஆவியானவர் அவர்களை நிற்கும்படி கூறினார். அவர்கள் ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து நின்றனர்.

170 இப்பொழுது, கர்த்தாவே, நீர் உம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்கிறீர். நீர், "என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" என்றீர். ஆகையால், கர்த்தாவே, இந்த வேத வாக்கியங்களின் அடிப்படையில், இவைகள் உம்முடைய சொந்த வார்த்தைகளாகும், கர்த்தாவே, நாங்கள் பரிசுத்த யோவான் 5:24-ல் வாசிக்கிறோம், "என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு," (ஏன்? ஏனெனில், அவன் விசுவாசித்திருக்கிறபடியால், கிருபை அவனைச் சந்தித்தது.) "நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல்," நியாயத் தீர்ப்புக்கு முன்பு அவன் சென்று விடுவான், "அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்." ஓ தேவனே, இதற்காக நாங்கள் உமக்கு எவ்வளவாய் நன்றி செலுத்துகிறோம்!

171 ஜீவியத்தினூடாக நீர் அவர்களைக் காக்க வேண்டும் என்று இப்பொழுது நாங்கள் ஜெபிக்கிறோம். அவர்கள் ஒவ்வொருவரும், ஞானஸ்நானம் பெற்று, கர்த்தருடைய நாமத்தைத் கூப்பிட்டு, தங்களுடைய பாவங்களைக் கழுவுவார்களாக. கர்த்தாவே. அதை அருளும்.

172 இப்பொழுது நான் அவர்களை உம்மிடத்தில் அளிக்கிறேன், உம்முடைய ஊழியக்காரன் என்ற முறையில், மகத்தான தேவனுடைய தூதன் அங்கே தோன்றினார் என்று விசுவாசிக்கிறேன். பிதாவே, அந்த முழு கதையையும் நீர் அறிந்திருக்கிறீர், அந்த மகத்தான தூதன் அங்கே வெள்ளிக் கிழமை காலையில், சாம்பலான விடியலில் தோன்றி, மலையின் உச்சியிலிருந்து மூன்று வானவில்களின் ரூபத்தில் இந்த வார்த்தைகளை உரைத்தீர். தேவனாகிய கர்த்தாவே, அங்கே எனக்கு வானவில்லில் தோன்றிய தேவன், அவருடைய கிருபையினால் இப்பொழுதே இந்த ஜனங்களை இரட்சிக்கட்டும். நீர் உம்முடைய வார்த்தையைக்

காத்துக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளோடு நான் அவர்களை உம்மிடம் அளிக்கிறேன். நான் அவர்களை அந்த மகத்தான நாளிலே, அவர்களுடைய ஆத்துமாவில் கறைதிரை இல்லாதவர்களாய் சந்திப்பேன். அதை அருளும். இயேசுவின் நாமத்தில் நான் அவைகளை உம்மிடத்தில் அளிக்கிறேன். ஆமென்.

173 தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்பொழுது நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கையில், அருகில் உள்ள கிறிஸ்தவ ஜனங்களில் யாரிடமாவது கரங்களைக் குலுக்குங்கள். அவர்களிடம் சொல்லுங்கள், அவர்களைச் சபைக்கு அழைக்கவும், இன்னும் அதிகமாக, அவர்களால் இருக்க முடியும் என்றும்…ஓ, அவர் அற்புதமானவர் அல்லவா?

அற்புதமான கிருபை! எவ்வளவு இனிமையான சத்தம்,
அது என்னைப் போன்ற ஒரு இழிவானவனை இரட்சித்தது!
நான் ஒரு காலத்தில் காணாமற்போனேன், ஆனால் இப்பொழுது நான் கண்டுபிடிக்கப்பட்டேன்,
குருடாயிருந்தேன். ஆனால் இப்பொழுது நான் காண்கிறேன்.

கிருபையே என் இருதயத்தை பயப்படக் கற்றுக் கொடுத்தது,
கிருபை என் பயத்தை போக்கியது;
அந்தக் கிருபை தோன்றினது எவ்வளவு விலையேறப்பெற்றதாயிருந்தது
நான் விசுவாசித்த முதல் வேளையில்!

நீங்கள் விசுவாசித்திருக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால், உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள்.

ஓ, நான் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறேன்,
ஓ, நான் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறேன்,
ஓ, நான் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறேன்,
ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்.

நாம் பத்தாயிரம் ஆண்டுகளாக அங்கே இருந்தபோது,
சூரியனைப் போல பிரகாசித்துக் கொண்டு;
தேவனுடையத் துதியைப் பாட நமக்குக் குறைந்த நாட்களே இல்லை (தேவனுக்கு நன்றி!)
நாம் முதலில் துவங்கினதைக் காட்டிலும்.

174 நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? இப்பொழுது, அவர் அற்புதமானவரல்லவா? இப்பொழுது:

எப்பொழுது…

நாம் அதை மீண்டும் பாடுகையில், நீங்கள் அருகில் உள்ள யாரிடமாவது கரங்குலுக்கி, மிகவும் அமைதியாக, “யாத்திரீகனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக.” இப்பொழுது மிகவும் இனிமையாகவும், பரிசுத்தமாகவும் இருங்கள்.

நாம் எப்போது…(…?…)
…தேவனுடைய துதி
நாம் முதலில் துவங்கினதைக் காட்டிலும்.

சிலுவையில், நான் முதன்முதலில் ஒளியைக் கண்ட சிலுவையில்,
என் இருதயத்தின் பாரம் உருண்டுவிட்டது,
அங்கே விசுவாசத்தினாலே நான் என்னுடைய பார்வையைப் பெற்றேன்,
இப்பொழுது நான் நாள் முழுவதும் மகிழ்ச்சியாயிருக்கிறேன்!

ஓ, சிலுவையில், நான் முதலில் ஒளியைக் கண்ட சிலுவையில்,
என் இருதயத்தின் பாரம் உருண்டுவிட்டது,
அங்கே விசுவாசத்தினாலே நான் என்னுடைய பார்வையைப் பெற்றேன்,
இப்பொழுது நான் நாள் முழுவதும் மகிழ்ச்சியாயிருக்கிறேன்!

நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கவில்லையா?

இயேசு என்னை விடுவித்ததால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,
இயேசு என்னை விடுவித்ததால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,
ஓ, இயேசு என்னை விடுவித்ததால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,
பாடுகையில், மகிமை, அல்லேலூயா, இயேசு என்னை விடுதலையாக்கினார்.

ஓ, இயேசு என்னை விடுவித்ததால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,
ஓ, இயேசு என்னை விடுவித்ததால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,
ஓ, இயேசு என்னை விடுவித்ததால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,
பாடுகையில், மகிமை, அல்லேலூயா, இயேசு என்னை விடுதலையாக்கினார்.

175 நீங்கள் அவரை நேசிக்கவில்லையா? அவர் அற்புதமானவரல்லவா? ஓ, அவர் அற்புதமானவர் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது சற்று சிந்தித்துப் பாருங்கள்,

இந்த வேதாகமம் அவருடைய சத்தியமாயிருக்கிறது, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று இந்த வேதம் போதிக்கிறது. நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருப்பாரேயானால்…“இருப்பாரானால்,” என்று நான் கூறின தேவதூஷணமான வார்த்தைக்காகத் தேவன் என்னை மன்னிப்பாராக, ஆனால் அவர் மாறாதவாய் இருக்கிறார். ஆனால் அவர் மாறாதவராயிருப்பாரானால், நான் அதை அந்த விதமாகவே கூறுவேன், அப்பொழுது அவர் எந்தவிதமான ஒரு நபராய் இருப்பார்? அவர் இருந்த விதமாகவே இருப்பார்.

176 இப்பொழுது, இந்தக் காலையில் இங்கே அவருக்கு ஒரு வித்தியாசம் மாத்திரமே உண்டு அன்று கலிலேயாவில் ஜனங்களிடையே அவர் தமது சொந்த மாம்ச சரீரத்தில் இருந்தார், அவருடைய மனித சரீரத்தில்; ஏனென்றால் அது உயிரோடெழுப்பப்பட்டது (நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?), உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து, நமது அறிக்கைக்காகப் பரிந்து பேசும்படி என்றென்றும் ஜீவிக்கிறவராய் இருக்கிறார். நாம் அவரை முதலில் ஏற்றுக் கொண்டு, அவர் அதைச் செய்திருக்கிறார் என்று விசுவாசித்து, அவர் அதைச் செய்தார் என்று அறிக்கை பண்ணாமல், அவரால் நமக்கு ஒன்றையும் செய்ய முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஏனென்றால் அவர் பிரதான ஆசாரியராயிருக்கிறார்…அவர் நம்முடைய அறிக்கையின் பேரில் பரிந்து பேசுகிற பிரதான ஆசாரியராயிருக்கிறார்.

177 இப்பொழுது வேதாகம வாசிப்பாளர்களாகிய உங்களில் அநேகர், “வெளிப்படையாகக் கூறுதலும்” என்று கூறுகிறீர்கள். *வெளிப்படையாகக் கூறுவதும்*, *அறிக்கை செய்தலும்* ஒரே வார்த்தை. பார்த்தீர்களா? எபிரெயர் புத்தகம், “பிரதான ஆசாரியராக்கப்பட்டார்”, 3-ம் அதிகாரத்தில், “நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியர்.” அப்படியானால் முதலில் அவர் அதைச் செய்துவிட்டார் என்று நாம் அறிக்கை செய்யும் வரை அவரால் ஒன்றும் செய்ய முடியாது. பாருங்கள், நீங்கள் இங்கே பீடத்தண்டை வந்து, இரவு முழுவதும் ஜெபித்தாலும், அவர் உங்களை மன்னிக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கும் வரை, அது உங்களுக்கு ஒரு துளி நன்மையையும் செய்யாது, அதன் பின்னர் நீங்கள் எழும்பி நில்லுங்கள். அப்படியானால் உங்களுக்கிருக்கும் விசுவாசத்தின் அளவின்படி, அங்குதான் நீங்கள்…நீங்கள் ஒரு காலத்தில் பாவத்தின் அசுத்தத்தில் *இங்குக்* கீழே வாழ்ந்தீர்கள். இப்பொழுது, வாலிப மனமாற்றமடைந்தவர்களே, இப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள், நீங்கள் விசுவாசிக்கவில்லையா? அப்படியானால் நீங்கள் *இங்கே* எழும்பி, சற்று உயரமாக

உயர்ந்தீர்கள். அது என்ன செய்கிறது? உங்களுடைய விசுவாசம், நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவராகிவிட்டீர்கள் என்று நீங்கள் விசுவாசிப்பதால், நீங்கள் இப்பொழுது அதற்கும் மேலாக வாழ்வீர்கள். பார்த்தீர்களா? இப்பொழுது நீங்கள் சற்று உயர வேண்டுமென்று விரும்பினால், அதிக விசுவாசமாயிருங்கள், ஏனென்றால் அது வரம்பற்றதாயுள்ளது, அப்படியே தொடர்ந்து இருங்கள்.

178 சரி, ஓ, கூடாத காரியம் உண்மையாக்கப்படலாம். விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும். அது உண்மை. "நீங்கள் இந்த மலையைப் பார்த்து: 'பெயர்ந்து போ' என்று சொல்லி, நீங்கள் சொன்ன படியே நடக்கும் என்று உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், நீங்கள் சொன்னபடியே ஆகும்."

இப்பொழுது இயேசு கிறிஸ்து ஜனங்களுக்குள் வாசம் செய்கிறார்.

179 ஒரு நாள் கிறிஸ்து ஒரு அக்கினி ஸ்தம்பத்தில் இருந்தார், அந்த ஒருவர் புகைப்படம் எடுக்கப்பட்டதில் நீங்கள் காண்கிறீர்கள், அவர் யேகோவா தேவனாயிருந்தார் என்று நாம் விசுவாசிக்கிறோம். அதைத்தான் தூதன் நம்மிடம் கொண்டுவர முயற்சித்துக் கொண்டிருந்தார். இப்பொழுது, அவர் அப்பொழுது பிதாத்துவத்தில் இருந்தார், அவர் இஸ்ரவேல் தேசத்தின் பிதாவாக இருந்தார்.

180 அதன்பின்னர் அவர் குமாரனாகிய கிறிஸ்துவாக, தம்முடைய ஜனங்களின் மத்தியில் வந்து வாசம் செய்தார். அது சரியா? கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந்தார்.

181 இப்பொழுது அவர் கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், அது அபிஷேகம். *கிறிஸ்து* என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்," என்று பொருள், அவர் ஜனங்களின் மேல் அபிஷேகமாகத் தங்கியிருக்கிறார், கிறிஸ்து பரிசுத்த ஆவியாக நம்மோடிருக்கிறார். அது கிறிஸ்து நம்மோடு, நமக்குள்ளே இருக்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அப்படியே ஒரு நிமிடம், அமைதியாக உண்மையான பயபக்தியாயிருங்கள். இப்பொழுது அவர் மாறாதவராயிருக்கிறாரா?

182 சற்று முன்னர் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது என்று நான் நினைக்கிறேன், ஜனங்கள் இங்கே இருக்கைகளிலும் மற்ற காரியங்களையும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னார்கள். நாம் அதைக் குறித்து பிறகு ஒரு சபை ஆராதனையில் பேசுவோம். அப்பொழுது நான் பில்லியிடம், அவர்கள் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப் போவதாயிருந்தால், அங்கே போதிய பேர் இருப்பார்களானால், அவர்களுக்கு ஜெப அட்டைகளைக் கொடுக்கக் கூறினேன். அவன் செய்வதாகக் கூறினான். அவன்அவ்வாறு செய்தான் என்று நான் நினைக்கிறேன்.

183 கடந்த இரண்டு அல்லது மூன்று மாதங்களாக, ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஏதோ ஒன்று சம்பவித்தது முதற்கொண்டு, ஊழியமானது என்னுடைய கரத்தை விட்டுச் சிறிது தூரம் செல்லுமளவிற்கு அப்படிப்பட்ட ஒரு இடத்திற்குள்ளாகிவிட்டது. அவர்கள் அந்தப் பகுத்தறிதல் போன்றவற்றைக் கண்டு, அது எப்படி பேசும் என்றும், நம்முடைய கர்த்தர் இங்கே பூமியில் இருந்தபோது செய்ததைப் போலவே. நீங்கள் எல்லோரும் அதைக் கண்டீர்கள் என்று நான் நினைக்கிறேன். இங்குள்ள எத்தனைபேர் அதை ஒருபோதும் காணவில்லை அல்லது அது கிரியை செய்வதை ஒருபோதும் காணவில்லை? உங்கள் கரங்களை நாங்கள் காணட்டும், அதை ஒருபோதும் காணாதவர்கள். ஓ! அது கிரியை செய்வதை ஒருபோதும் காணாதவர்கள். பாருங்கள், அதை ஒருபோதும் காணாத ஒரு குழு இங்கே உள்ளது, அந்நியர்கள் என்று நான் யூகிக்கிறேன். ஜனங்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பதை நாம் அறியோம்.

184 இது எல்லா ஸ்தாபனத்தவருக்கும் உரிய ஒரு கூடாரம். நாங்கள் ஸ்தாபனங்களுக்கு எதிரானவர்கள் அல்ல, ஆனால் நாங்கள்—நாங்கள் அவர்களுக்கு ஆதரவானவர்களும் அல்ல. நாங்கள் அவர்களை அவர்களுடைய வழியில் செல்ல அனுமதித்தோம். நாங்கள் மக்களை அழைத்துச் செல்வதில் நம்பிக்கை கொள்கிறோம்…அவர்கள் ஸ்தாபனத்திற்கு திரும்பிச் செல்ல விரும்பினால், சரி, அவர்கள் ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் வரைக்கும். நாம் இங்கே ஒரு ஆத்துமா இரட்சிக்கும் நிலையமாகவே இருக்கிறோம். அதுதான் அவர்களுக்கு என்னுடைய ஊழியம்.

185 இப்பொழுது, ஆனால் எபிரெயர் 13:8-ல் வேதம் போதிக்கிறது என்று நான் நினைக்கிறேன், இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? பாருங்கள், அவர் மாறாதவராயிருந்தால்…இப்பொழுது நீங்கள் யாவரும் ஒரு நிமிடம் மிகவும் அமைதியாக அமர்ந்திருக்கையில், என்னுடைய இருதயத்திலிருந்து நான் உங்களிடம் பேச விரும்புகிறேன், அதன்பின்னர் நாம் சுகமளிக்கும் ஆராதனையை நடத்துவோம். நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்றால், அப்பொழுது அவர் எப்படி…அப்பொழுது நாம் கூறக்கூடிய ஒரே வழி, அவர் ஒரு ஆவியானால், அவர் நேற்று செய்தவிதமாகவே அவர் செயல்படுவார். அது சரியா? அவர் நேற்று செய்தவிதமாகவே அவர் செயல்படுவார். அவர் நேற்று எப்படி செயல்பட்டார்?

186 அவர் மற்ற மனிதரிடமிருந்து வித்தியாசப்பட்டவராயிருந்தாரா? அவர் ஒரு மனிதன், ஒரு மனிதனைப் போன்று காணப்பட்டார். அவர் ஒரு மனிதனாயிருந்தார். அவர் பிறந்தார், அவர் ஒரு மனிதனாயிருந்தார். அவர் மாம்சமும் இரத்தமும்

உடையவராயிருந்தார். அவர் பாடுபட்டார், வலியால் முனகினார், அவர் சோதனைகளினூடாகச் சென்றார். அவர் ஒரு மனிதனாயிருந்தார். அது சரி, அப்படித்தானே?

187 ஆனால் அவரைத் தேவனாக்கியது எது? தேவனுடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருந்த காரணத்தினாலேயாம். அவர் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாயிருந்தார். அவர் அவ்வாறிருந்தார் என்று அவர்கள் எப்படி அறிந்துகொண்டனர்? மோசே, “உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார். அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்” என்றான். இப்பொழுது, அவர் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தார். அப்படியானால் இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு தீர்க்கதரிசியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒரு மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால், அவர்கள் அவ்வாறே இருக்க வேண்டியதாயிருந்தது. ஒரு மேசியா ஒரு தீர்க்கதரிசியாயிருப்பார்.

188 இப்பொழுது நாம் ஒரு சில வினாடிகள், அதை அப்படியே ஒரு விநாடியினூடாகச் செல்வோம், கூர்ந்து கவனிப்போம். இப்பொழுது, தேவன் மேல் உங்களுடைய சிந்தையை வையுங்கள், ஏனெனில் தேவனால் என்ன செய்ய முடியும் என்பதை நாம் அறியோம், அவர் என்னிடத்தில் என்ன செய்யும்படி கூறுவார் என்பதை நாம் அறியோம்.

189 சபையில் நமக்கு ஒரு தீர்க்கதரிசன வரம் உண்டு என்பதை நான் அறிவேன். நம்முடைய சகோதரன் நெவில், அவர் ஜனங்களுக்காகத் தீர்க்கதரிசனம் உரைக்கிறார், அது மிகச் சிறந்தது. நாம் அதைப் பாராட்டுகிறோம். நாம் அதைக் குறித்து நீண்ட காலமாகவே குறிப்பிட்டுக் கொண்டிருந்தோம். அந்நிய பாஷைகளில் பேசுகிற சிலர் இங்கே நமக்கு உண்டு. ஜனங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க அந்நிய பாஷைகளில் பேச வேண்டும் என்று நாம் நம்புகிறதில்லை. அதைப் போன்ற ஒரு காரியத்திற்கு அப்படிப்பட்ட வேதவாக்கியமே கிடையாது. ஆனால் அந்நிய பாஷைகளில் பேசுகிற பரிசுத்த ஆவியின் ஒரு வரம் உண்டு என்று நாங்கள் விசுவாசிக்கிறோம், அதை நாம் நம்முடைய சபையில் பெற்றுள்ளோம். ஆனால் நாம் அவர்களை…நாங்கள் தொடர்ந்து பேசிக் கொண்டே செல்வதில்லை. அது தேவனுடைய சத்தம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் பேசும்போது நாம் பேசுகிறோம், நாம் அதை மூன்று முறை மாத்திரமே பேச அனுமதிக்கிறோம். அது…நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் வரக் கூடாது அப்படி வருவது ஒழுங்கல்ல, ஏனென்றால் தீர்க்கதரிசிகளின் ஆவி தீர்க்கதரிசிக்கு அடங்கியிருக்கிறது. பார்த்தீர்களா? அது வேதப்பிரகாரமாகச் சரியாகக் கொண்டு செல்லப்பட வேண்டும். பரிசுத்த ஆவியின் வரம் மற்றும் அந்நிய

பாஷைகளில் பேசுதல் என்ற அப்படிப்பட்ட ஒரு காரியமே இல்லை என்று எவருமே கூற முடியாது. நாம் அதை அறிவோம். வேதம் அதைப் போதிக்கிறது, நாம் அதில் விசுவாசங்கொண்டிருக்கிறோம். இங்குள்ள நம்முடைய சபையில் நாம் அதைப் பெற்றுள்ளதற்கு தேவனுக்கு ஸ்தோத்திரம்! நமக்குத் தீர்க்கதரிசன வரங்கள் உள்ளன, அவைகள் முதலில் சோதிக்கப்பட்டு, அவை சரியா அல்லது இல்லையா என்று பார்க்க வேண்டும், அதன்பின்னர் தீர்க்கதரிசன வரம்.

190 பிறகு ஒரு தீர்க்கதரிசி இருக்கிறான். இப்பொழுது, அதாவது, இப்பொழுது நீங்கள் ஒரு உத்தியோகத்துக்கு வருகிறீர்கள்.

191 அந்த வரங்கள், அவைகள், அந்நிய பாஷைகளில் பேசுதல், அந்நிய பாஷைகளுக்கு அர்த்தம் உரைத்தல், அறிவு, ஞானம், பகுத்தறிதல் போன்றவை. அவை யாவும் வரங்கள்.

192 ஆனால் அப்பொழுது ஐந்து உத்தியோகங்கள் உள்ளன. முதலாவது அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள். அது தேவனால் நியமிக்கப்பட்ட உத்தியோகங்கள். மனுஷர் அவைகளை பற்றிக் கொண்டிருக்கிறார்கள், பாருங்கள். அவர்கள் இல்லை, முடியாது… அவைகளை நீங்கள் விரும்பிப் பெற முடியாது, உங்களால் அவைகளுக்காக ஜெபிக்க முடியாது; அவை இராஜாதிபத்தியமாக அளிக்கப்படுகின்றன, நீங்கள் அதைக் கொண்டவர்களாகவே பிறந்திருக்கிறீர்கள்.

193 ஒரு தீர்க்கதரிசியின் மீது யாராவது கைகளை வைத்து அவனை ஒரு தீர்க்கதரிசியாக ஆக்கினால், அவன் ஒரு தீர்க்கதரிசி அல்ல. ஒரு தீர்க்கதரிசி தன்னுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து பிறக்கிறான், அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருக்கிறான், பாருங்கள், எனவே அவன் எப்பொழுதுமே ஒரு தீர்க்கதரிசியாயிருக்கிறான். பார்த்தீர்களா?

194 தேவன் எரேமியாவிடம், “நீ உன்னுடைய தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே” என்றார், “நான் உன்னை அறிந்திருக்கிறேன், நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்” என்றார். அது உண்மை. பார்த்தீர்களா? மோசே, அவன் பிறப்பதற்கு முன்பே, அவன் ஒரு அழகுள்ள பிள்ளையாக இருந்தான். அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசியாயிருந்தான். மற்ற யாவரும் புறப்பட்டு வருகின்றனர். கிறிஸ்து ஏதேன் தோட்டத்திலிருந்தே தேவனுடைய குமாரனாயிருந்தார். அது உண்மை. பாருங்கள், வரங்களும், அழைப்புகளும் மனந்திரும்புதலின்றி அளிக்கப்படுகின்றன.

195 ஆனால் வரங்கள் சரீரத்திற்கு அளிக்கப்படுகின்றன. இப்பொழுது நாம் அதை அடையாளம் கண்டு கொள்கிறோம், நாம் இந்த எல்லா வரங்களையும் அடையாளங்கண்டு கொள்கிறோம்.

196 இப்பொழுது இயேசு நமக்கு மத்தியில் என்னவாயிருந்தார் என்றும், அவர் அங்கே முன்பு என்னவாயிருந்தார் என்றும் நாம் பார்ப்போம். அவர் தம்முடைய ஊழியத்தை முதலில் துவங்கினபோது…இப்பொழுது, அந்நியரே, கூர்ந்து கவனியுங்கள். அவர் தம்முடைய ஊழியத்தை முதலில் துவங்கினபோது, பரிசுத்த யோவான் 1-ம் அதிகாரத்தில், அவர் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பிறகு, அவர் வந்தபிறகு…அவர் பிறந்து முப்பது வயதுடையவரானபோது, அவர் யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல இறங்கி வந்து அவர்மேல் இறங்கினார் ஒரு சத்தம் உண்டாகி, “இவர் என்னுடைய நேசகுமாரன்…” என்று உரைத்தது. உண்மையான மூல கிரேக்க மொழியானது, “இவரில் வாசமாயிருக்க பிரியமாயிருக்கிறேன்” என்று கூறியுள்ளது. “இவரில் வாசமாயிருக்க பிரியமாயிருக்கிறேன், இவரில்—இவரில் வாசமாயிருக்க பிரியமாயிருக்கிறேன்” என்று கூறியுள்ளது. ஆனால், பாருங்கள், அது நம்மிடத்திலிருந்து சற்று பின்னோக்கி ஒலிக்கிறது, வினையுரிச்சொல்லுக்கு முன்னால் உள்ள வினைச்சொல், ஆனால் உண்மையில் அது, “நான் வாசம்பண்ண பிரியமாயிருக்கிறேன்” என்பதாய் உள்ளது. காரணம், கிறிஸ்து, தேவன் கிறிஸ்துவுக்குள் இருந்து, தமக்கு உலகத்தை ஒப்புரவாக்கிக் கொண்டார். நாம் அதை அறிவோம்.

197 இப்பொழுது, உடனடியாக அவர் பிசாசினால் சோதிக்கப்பட்டு, நாற்பது நாட்கள் வனாந்திரத்தில் பிரவேசித்தார். அதன்பின்னர் அவர் தம்முடைய ஊழியத்தோடு புறப்பட்டு வந்து, வியாதியஸ்தருக்காக ஜெபிக்கத் தொடங்கினார்.

198 சிறிது நேரம் கழித்து, சீமோன் பேதுரு என்னும் பெயர்கொண்ட ஒரு மனிதன் அங்கே வந்து, ஒரு வயோதிக மீனவர், படிக்காதவர், தன்னுடைய சொந்த பெயரைக் கூட எழுத முடியாது. அந்திரேயா மேசியா என்று அவன் விசுவாசித்த இந்த நபரைக் குறித்து அவன் கூறினான். “முட்டாள்தனம்!”

199 அவரண்டை வந்தான். அவன் இயேசுவின் பிரசன்னத்திற்குள்ளாக நடந்து சென்றவுடனே, இயேசு, “உன் பெயர் சீமோன், நீ யோனாவின் குமாரன்” என்றார். ஏதோ ஒன்று சம்பவித்தது என்பதை அவன் அறிந்திருந்தான். அது தேவனுடைய குமாரன் என்பதை அவன் அறிந்திருந்தான். அவனுக்கு இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை அளிக்க அவருக்குப் பிரியமாயிருந்து, அவனைச் சபையின் தலைவராக்கினார்.

200 அங்கே பிலிப்பு என்னும் பெயர்கொண்ட ஒரு நபர் நின்றுகொண்டிருந்தான். பிலிப்பு அதைக் கண்டான், அவன், “அற்புதம்! வேதாகம மேதையாகிய ஒரு மனிதனை நான் அறிவேன், மலையைச் சுற்றிலும் சுமார் பதினைந்து மைல் தூரத்தில் வசிக்கிறான்.

நான் அங்கு ஓடிப்போய் அவனிடம் கூறுவேன். அவனுடைய பெயர் நாத்தான்வேல்” என்று எண்ணினான்.

201 அவன் அந்நாளில் வேகமாக அங்கு ஓடினான். அடுத்த நாள் காலை, ஒரு வேளை விடியும் வேளையில் அவன் போய்ச் சேர்ந்தான். ஓடிப்போய்க் கதவைத் தட்டினான். திருமதி நாத்தான்வேல், “பிலிப்பு, அவர் அங்கே பழத்தோட்டத்தில் இருக்கிறார்,” என்றாள். அவனுடைய நண்பன், அவன் அங்குச் சென்றான், அவன் முழங்கால்படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தான். அவன் முழங்காலிருந்து எழுந்தவுடனே, பிலிப்பு, “நான் யாரைக் கண்டுபிடித்தேன் என்று வந்து பார்! நாசரேயனாகிய இயேசு, யோசேப்பின் குமாரன்” என்று கூறினான்.

202 இப்பொழுது இந்த மதசம்பந்தமான, மகத்தான பிரமுகர், “நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா?” என்று கேட்டான். அவன் அவனுக்கு ஒரு நல்ல மேற்கோளை, நல்ல காரியத்தை அளித்தான், அவன், “வீட்டிலேயே தரித்திருந்து அதைக் குறை கூறாதே, அதைக் குறித்து ஒன்றுமே பேசாதே. நீயே வந்து பார். வந்து பார்! நீயே வந்து பார், நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ என்று நீயே வந்து பார்” என்றான்.

203 “நீ மேசியாவைப் பொருட்படுத்திக் கூறுகிறாயா? ஏன், மேசியா வருவார், அவர் இறங்கி வந்து, அந்த...பரலோகத்தின் தாழ்வாரங்கள் கீழே விடப்படும், அவர் நேராக அரண்மனைக்கு வருவார். அவர் நம்முடைய பெரிய ஸ்தாபனத்திற்கு வருவார்” என்று கூறினான். இன்னமும் அதை நினைக்கிறார்கள், நீங்கள் பாருங்கள், அது அவர்களுடைய ஸ்தாபனத்திற்கு வர வேண்டும். “அவர் நேராக எங்கள் ஸ்தாபனத்திற்கு வந்து, அங்கே அரண்மனையின் விதானங்களின் மேல் நடந்து செல்வார். அவர் வெளிப்பிரகாரங்களுக்குச் சென்று, சிங்காசனத்தின் மேல் வந்து, மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு வந்து, ‘நானே மேசியா’” என்பார். மேசியா அந்தவிதமாக ஒருபோதும் வருவதில்லை. அவர் விரும்புகிற இடத்திற்கு மேசியா வருகிறார். அவர் இராஜாதிபத்தியமுள்ளவராயிருக்கிறார், அவர் விருப்பப்படி அவர் செய்கிறார்.

அவன், “சரி,” என்று கூறி, அவன், “வந்து பார்! நீயே வந்து பார்” என்றான்.

204 அங்கே நின்றுகொண்டு, “எனக்கு அந்தப் பரிசுத்த உருளையின் காரியத்தில் நம்பிக்கையில்லை” என்று கூறாதீர்கள். அதைக் குறித்து ஏதாகிலும் இருக்கிறதா என்று வந்து கண்டுகொள்ளுங்கள்.

205 எனவே அவன், சாலையில் சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் பேசுவதைக் என்னால் கேட்க முடிகிறது. அவர்கள் எதைக் குறித்து பேசிக்கொண்டிருந்தனர் என்பதை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா? அவர்கள் என்ன கூறினார்கள் என்பதை நாம்

கவனிப்போமாக. பிலிப்பு, சாலையின் ஓரத்தில் செல்லும்போது, “நாத்தான்வேல், நீ ஒரு வேதாகம மாணாக்கன் என்பதை நான் அறிவேன், எனவே நான் உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். நாம் ஒரு மேசியாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம், இல்லையா?” என்று கேட்டான்.

206 “ஓ, ஆம், நாம் கடைசி நாட்களில் இந்தச் சந்ததியினருக்கும், இந்தச் சந்ததியார் மேசியாவைக் காண்பார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன்” என்றான். இப்பொழுது கவனியுங்கள். “ஓ, ஆனால் இங்கே நாம் இருக்கிறோம், நாம் ஒரு தேசமாகக் கூட இல்லை, நாம் யாவரும் ஜனங்களுக்கு மத்தியில் சிதறடிக்கப்பட்டிருக்கிறோம். நம்மால் எப்படி முடியும்? இதெல்லாம்!” என்றான். நீங்கள் நினைக்காத நேரத்தில் தேவன் வருகிறார். அப்பொழுதுதான் அவர் அங்கே இருக்கிறார்.

207 அவன், “ஆனால், ஒரு நிமிடம் பொறு, இந்த மேசியா எப்படிப்பட்ட ஒரு நபராய் இருப்பார்?” என்று கேட்டான்.

“ஓ, நம்முடைய போதகனாகிய மோசே, அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார் என்று எங்களிடம் கூறினார்” என்றான்.

208 “நாசரேயனாகிய இயேசுவைக் குறித்து நான் உனக்குச் சொல்லப்போகிறேன். நீ அந்த வயோதிக படிப்பறிவில்லாத மீனவனை அந்த நேரத்தில் மீன் வாங்கினீர், கொண்டு வந்து, அவனிடமிருந்து வாங்கி, அப்பொழுது அவனால் ரசீதில் கையெழுத்திட முடியவில்லை, அவனுக்குப் போதுமான கல்வியும் இல்லை என்பது உனக்கு நினைவு இருக்கிறதா?” என்று கேட்டான்

209 “ஆம்! ஓ, ஓ, ஆம், ஹூ-ஹூ. ஜோனாஸ் மற்றும் ஜோனாஸின் பையன். ஆம், நானும் கூட ஜோனாஸிடமிருந்து வாங்கினேன்” என்றான்.

210 “சரி, இப்பொழுது, என்னவென்று உனக்குத் தெரியுமா? பேதுரு அங்கே வந்து…” இல்லை சீமோன், சரியாகக் கூறினால், அப்பொழுது அவனுடைய பெயர் சீமோன் என்பதாகும். அவன், “சீமோன் அவருடைய கூட்டத்திற்கு வந்திருந்தான். அவன் நடந்து சென்றவுடனே, அவன்…அவனுடைய தகப்பனார் அவனிடம் கூறினதை சீமோன் எப்படி வழக்கமாக நம்மிடத்தில் கூறுவது உனக்கு நினைவிருக்கும் ‘வஞ்சிக்கப்பட வேண்டாம், ஏனென்றால் உண்மையான மேசியாவுக்கு முன்பாக அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் இருப்பார்கள்’ என்று கூறினான். அது உண்மையே. ‘அநேக கள்ள செய்திகள் புறப்பட்டுச் செல்லும்.’ ஆனால் ‘உண்மையான செய்தி வரும்போது, அதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள், ஏனெனில், யூதர்களாகிய நாம், மேசியா ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார் என்று விசுவாசிக்கிறோம்.’ நாம் நம்முடைய தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறோம்” என்றான்.

211 இப்பொழுது ஒரு யூதனிடத்தில் கேளுங்கள். இஸ்ரவேல் ஜனங்கள், ஈரானிலிருந்தும், மற்றக் காரியங்களிலிருந்தும் இப்பொழுது அங்கே அந்த வேதாகமத்தை எடுத்து, அவர்கள் அதை வாசிக்கிறார்கள். அவர்கள், "அந்த இயேசு மேசியாவாயிருந்தால், அவர் தீர்க்கதரிசியின் அடையாளத்தைச் செய்வதை நாங்கள் காணட்டும், நாங்கள் அவரை விசுவாசிப்போம்" என்று கூறுகின்றனர். ஆம், ஐயா. தீர்க்கதரிசிகள் உண்மையுள்ளவர்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

212 எனவே நாத்தான்வேல், "ஓ, மேசியா ஒரு தீர்க்கதரிசியாயிருப்பார் என்று நான் விசுவாசிக்கிறேன், ஏனென்றால் 'நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவார்,' என்று மோசே கூறினான்" என்று கூறியிருக்க வேண்டும்.

213 "பாருங்கள், நீ பேசிக்கொண்டிருக்கிற அந்தச் சீமோனை அவர் கண்டபோது, அதற்கு அவர், 'உன் பெயர் சீமோன், நீ யோனாவின் குமாரன்' என்றார். அவர் அவனை அறிந்திருந்தது மாத்திரமல்ல, ஆனால் தேவபக்தியுள்ள அந்த வயோதிக பரிசேயரான அவனுடைய தகப்பனையும் அவர் அறிந்திருந்தார்."

"ஆ! என்னால் அதை நம்ப முடியவில்லை. நீர் ஆழமான எல்லைக்குச் சென்றுவிட்டீர்" என்றான்.

214 அதற்கு அவன், "ஓ, இல்லை, நான் அவ்வாறு இல்லையே! நீ வந்து தெரிந்துகொள். வந்து பார்! வா!" என்றான். வீதியினூடாகச் சென்றான்.

215 கடைசியாக அவன் இயேசு இருந்த பிரசன்னத்திற்குள்ளாக நடந்து சென்றான், ஒருக்கால் கூட்டத்தின் மத்தியில் எங்காவது நின்று கொண்டிருக்கலாம். இயேசு அங்கே நின்று சுற்றி பார்த்தார். சிறிது நேரம் கழித்து அவர் நோக்கிப் பார்த்தார், அவர் நாத்தான்வேல் அங்கே வெளியே நின்று கொண்டிருப்பதைக் கண்டு, அவர், "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்!" என்றார். அது அவனிடத்திலிருந்து துணிச்சலை எடுத்துப் போட்டது. அது அவனது உற்சாகத்தை வற்றிப்போகச் செய்தது. "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்!"

216 அவன், "அது தேவன்" என்றான். "ரபீ" என்றால் *போதகர்* என்று பொருள். "ரபி, நீர் எப்பொழுது என்னை அறிந்தீர்? நான் இதற்கு முன்பு உம்மைச் சந்தித்ததேயில்லை, நான் இந்தச் சபையில் ஒரு அந்நியன், நான் இதற்கு முன்பு இங்கு வந்ததேயில்லை. நீர் என்னை எப்படி அறிவீர்?" என்று கேட்டான்.

217 அவர், "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ மரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்" என்றார்.

218 அது நேற்றைய இயேசுவாயிருந்தது. அது சரியா? அவர் மாறாதவராயிருக்கிறார் என்றால், அவர் இன்றைக்கும்

மாறாதவராயிருக்கிறார். வேறொரு ஜாதியினரை நாம் எடுத்துக் கொள்வோம். ஒரு ஜாதியினர் இருந்தனர்…

219 மூன்று ஜாதியினர் மாத்திரமே இருந்தனர், அவர்கள் காம், சேம், யாப்பேத் ஆகியோரின் சந்ததியினர். புரிகிறதா? அது முற்றிலும் உண்மை. அங்கேதான் பெந்தெகொஸ்தேயன்று, சுவிசேஷம் யூதர்களிடம் சென்றது, அதன்பின்னர் சமாரியர்களுக்கும், அதன்பின்னர் புறஜாதிகளுக்கும் சென்றது. பாருங்கள், காம், சேம், யாப்பேத்தின் ஜனங்கள், மூன்று ஜாதிகள். இப்பொழுது, இரண்டு தேசங்கள் ஒரு மேசியாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன; புறஜாதிகளாகிய நாம் அல்ல. நாம் முதுகில் ஒரு தடியை வைத்திருந்தோம், நாம் அஞ்ஞானிகளாயிருந்து, விக்கிரகங்களைத் தொழுது கொண்டிருந்தோம்; ஆனால் காம் மற்றும் சேம் அல்ல—அல்ல.

220 இப்பொழுது, வேறு ஒன்று உள்ளது, அந்த—அந்த மற்ற தேசம் சமாரியராயிருந்தது, அது பாதி யூதரும், பாதி புறஜாதியுமாயிருந்தது, அங்கே கோராகின் பாவத்தின் விளைந்த விவாகம் காரணமாக ஏற்பட்டது, அவர்கள் பிரிந்து சென்றனர். அவர்கள் தேவனை விசுவாசித்தனர், அவர்கள் ஒரு மேசியாவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். எனவே இயேசு அவர்களுக்கு முன்பாகத் தம்மை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு சென்றார். அவர் தமக்குச் சொந்தமான யூதர்களிடம் வந்தார், ஆனால் அவர் சமாரியாவின் வழியாகப் போகவேண்டியதாயிருந்தது. பரிசுத்த யோவான் 4-ம் அதிகாரத்தை நீங்கள் எப்போதாவது வாசித்திருக்கிறீர்களா? அவர் சமாரியாவின் வழியாகப் போகவேண்டியதாயிருந்தது. எனவே அவர் சீகார் பட்டணத்திற்கு வந்தார், எனவே அவர் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி தம்முடைய சீஷர்களை அனுப்பினார். அவர்கள் சென்றிருந்தபோது…

221 நீங்கள் எப்பொழுதாவது அங்கிருந்திருந்தால், அது ஒரு பரந்து விரிந்து காணக்கூடிய ஒரு கிணறு, அங்கே ஒரு நகர குழாய் போன்று இருந்தது, அவர்கள் தண்ணீரை கீழே விடுவார்கள். உங்களுக்குத் தெரியும், ஸ்திரீகள் வந்து இராட்டினத்தை எடுத்து, வாளியை கீழே இறக்கி, தண்ணீரை எடுத்து, அதைத் தங்களுடைய தலையில் சுமந்து கொண்டு போவார்கள். இப்பொழுது துர்கீர்த்தியான ஸ்திரீகள், மோசமான ஸ்திரீகள், அவர்கள் நல்ல பெண்களோடு வரக் கூடாது. அந்நாட்களில் அவர்கள் ஒன்றாகச் சேருவதில்லை. ஒரு ஸ்திரீ மோசமாக இருந்தாள், அவள் தன்னுடைய சொந்த கூட்டத்திலேயே தரித்திருந்தாள். இன்றைக்கு அவ்வாறு இல்லை; அவைகள் யாவும் ஒன்று சேர்ந்துள்ளன, ஆனால் அவர்கள்…ஆனால், அது ஒரு முட்டையின் நடுப்பகுதியை எடுத்து, நீங்கள் அதை ஒரு சிவப்பு விளக்காக ஆக்குகிறீர்கள், பாருங்கள். ஆகையால் அதன்பின்னர், அவர்கள், எனவே இந்த நிரப்புதல்…

222 துர்கீர்த்திக் கொண்ட ஸ்திரி, சுமார் இந்த நாளின் இந்த

நேரத்தில், சுமார் பதினொன்று முப்பது அல்லது பதினொன்றே முக்கால் மணிக்கு அங்கே வருவாள், அவள் ஒரு வாளி தண்ணீர் எடுக்க அங்கு நடந்து வந்தாள். அவள் அதை...பொருத்த... அவள் பழைய சுழலையும் இராட்டினத்தையும் மாட்டிவிட்டு, ஒரு வாளி தண்ணீர் எடுக்க அதைக் கிணற்றுக்குள் விடுவதை என்னால் காண முடிகிறது. சரியாக அவள் அதை மேலே கொண்டு வரத் துவங்கினபோது. அப்பொழுது யாரோ ஒருவர், "ஸ்திரீயே, தாகத்துக்குத் தா" என்று கூறுவதை அவள் கேட்டாள். அப்பொழுது அவள் நோக்கிப் பார்த்தபோது, அங்கே ஒரு யூதர் இருந்தார். இப்பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் எந்தத் தொடர்பும் உடையவர்களாயிருக்கவில்லை.

223 நடுத்தர வயது மனிதர், அவருக்கு ஏறக்குறைய முப்பது வயது. ஆனால் வேதாகமம் அவர் ஐம்பது வயதுள்ளவர் போல் தோற்றத்தில் காணப்பட்டார் என்று கூறியுள்ளது, நீங்கள் அதை அறிவீர்கள். அவன், "நீர் ஒரு மனிதன், உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டதாகக் கூறுகின்றாயே" என்றான். அவருக்கு முப்பது வயது தான் ஆகியிருந்தது. பார்த்தீர்களா? அவர் கூறியது...அவருடைய ஊழியம் அவரை மிகவும் களைப்படையச் செய்துவிட்டது என்று நான் யூகிக்கிறேன். எனவே அவன், "நீர் ஆபிரகாமைக் கண்டதாகக் கூறுகிறீர், இப்பொழுது உமக்குப் பிசாசு பிடித்திருக்கிறது என்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்றான்.

224 அவர், "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே **நான் இருக்கிறேன்**" என்றார். பாருங்கள், அவர் ஆபிரகாமின் தேவன். நிச்சயமாக, அவர் அவ்வாறிருந்தார். அவர், "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே **நான் இருக்கிறேன்**" என்றார். நிச்சயமாக.

225 இப்பொழுது, அவர் கிணற்றண்டையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார், அவர், "ஸ்திரீயே, தாகத்துக்குத் தா" என்றார்.

226 அவள், "அது வழக்கம் அல்ல. எங்களுக்கு இங்கே ஒரு பிரிவினை உண்டு" என்றாள். அவர்கள் தெற்கில் கறுப்பு, வெள்ளை நிறத்தவரோடும் வழக்கமாக இருந்து வந்ததுபோல, பாருங்கள். அவள், "எங்களுக்கு இங்கே பிரிவினை உண்டு. நீர் (ஒரு யூதன்) எனக்கு (ஒரு சமாரியா ஸ்திரீக்கு) எந்த ஒரு தயவையும், எந்தக் காரியத்தையும் கொண்டு வரும்படிக் என்னிடத்தில் கேட்பது வழக்கமற்றது. எங்களுக்கு ஒருவரோடொருவர் எந்தத் தொடர்பும் கிடையாது" என்றாள். அவள் ஒரு சிறு விபச்சாரி என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, அநேகமாக ஒரு அழகான சிறிய பெண்மணியாக இருக்கலாம். அவள் அங்கே நின்றுகொண்டிருந்தாள், ஒருவேளை அவளுடைய சுருள் முடி முகத்தில் எல்லாம் விழுந்திருக்க, அவள் இரவு முழுவதும் வெளியே இருந்திருப்பாள் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும்—மேலும்

அவள் கூறினாள், மேலும் அவள், “ஒரு சமாரிய ஸ்திரீயாகிய என்னிடத்தில் நீர் இப்படிக் கேட்பது வழக்கமல்ல” என்றாள்.

227 அவர், “ஸ்திரீயே, உன்னிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறவர் இன்னார் என்றும் நீ யாரிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறாய் என்றும் நீ அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய்” என்றார். அதுதான் நேற்றைய மேசியா, பாருங்கள். “நீ என்னிடத்தில் கேட்டிருப்பாய், நீ இங்கே மொண்டு கொள்ள வராமலிருக்க, நான் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பேன்” என்று கூறினார்.

228 “ஏன்,” அவள், “மொண்டு கொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து எனக்குத் தண்ணீர் கொடுக்க முடியும்?” என்று கேட்டாள். “எங்கள் பிதாவாகிய யாக்கோபு!” என்றாள். பாருங்கள், அவள் ஒரு சமாரியப் பெண்ணாயிருந்தாள், ஆனால் அவள் யாக்கோபை தன் பிதாவென்று கூட அழைத்தாள். “எங்கள் பிதாவாகிய யாக்கோபும் அவருடைய குடும்பம் முழுவதும் அவருடைய மிருக ஜீவன்களும் இந்தக் கிணற்றின் தண்ணீரைக் குடித்ததுண்டே. இதைக் காட்டிலும் சிறந்த தண்ணீர் உம்விடத்தில் உள்ளதாகக் கூறுகின்றீரே?” என்றாள். “யூதர்களாகிய நீங்கள் ‘எருசலேமில்’ தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்கள். நாங்கள் இந்த மலையிலே ‘தொழுதுகொண்டு’ வருகிறோம்” என்றாள்.

229 ஸ்திரீயே, உண்மையாகத் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. ஏனெனில் தேவன் ஆவியாயிருக்கிறார்” என்றார். பார்த்தீர்களா? “இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்” என்றார்.

அவர் என்ன செய்துகொண்டிருந்தார்? அவர் அவளுடைய ஆவியோடு தொடர்பு கொள்ளும்படி அவளிடத்தில் பேசிக்கொண்டிருந்தார். பார்த்தீர்களா? இப்பொழுது, சமாரியர்களுக்கு முன்பாக, அவர் மேசியாவாக வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் நேரடியாக அவளுடைய தொல்லையைக் கண்டறிந்தார். அது என்னவாயிருந்தது என்பதை எத்தனை பேர் அறிவீர்கள்? நிச்சயமாக. அவள் தன்னுடைய ஆறாவது கணவனோடு வாழ்ந்துகொண்டிருந்தாள்.

எனவே, நீங்கள் பாருங்கள், நீங்கள் ஒரு ஜீவனுள்ள கணவனை உடையவர்களாயிருப்பதும், உள்ளேயும், மற்றுமுள்ள—மற்றுமுள்ள காரியங்களையும், வெளியேயும் செல்லும்போதும் அது தவறாகும். எந்தக் காரணத்திற்காகவும், ஒரு பெண்ணைத் தள்ளிவிட்டு, அவளை விவாகம் செய்து, மற்றொருவனை விவாகம் செய்து, மற்றொருவனை விவாகம் செய்து, மற்றொருவனை விவாகம்

செய்து கொண்டால், நீங்கள் அதைச் செய்யக் கூடாது. எனவே அவர் கூறினார், அவள்...

அப்பொழுது அவள், அவள் விவாகம் செய்யாமலேயே அவர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்று நான் யூகிக்கிறேன். அவள் ஒருபோதும் அவர்களை மணந்து கொள்ளாமலிருக்கலாம். அவள் ஒருக்கால் விவாகம் செய்து கொள்ளாமலிருந்திருக்கலாம். எனவே அவள் இந்த எல்லா பொல்லாத காரியங்களையும் கூறினாள், உங்களுக்குத் தெரியுமா, இந்த எல்லா பொல்லாத காரியங்களையும் செய்தாள்.

ஆகையால் அதன்பின்னர் அவர் அங்கே நின்றுகொண்டு, *அந்தவிதமாக* அவளை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவர், “தாகத்துக்குத் தா” என்றார். மேலும் அவள் கூறினாள்...“நீ பேசிக் கொண்டிருப்பது இன்னார் என்பதை அறிந்திருந்தாயானால், நீயே என்னிடத்தில் கேட்டிருப்பாய். நான் உனக்குத் தண்ணீர் கொண்டு வருவேன் நீ வர வேண்டாம்...நான் உனக்குத் தண்ணீர் தருவேன், குடிப்பதற்கு இங்கே வர வேண்டாம்” என்றார். அப்பொழுது அவர், “போய், உன்னுடைய புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா” என்றார்.

அவள், “ஐயா, எனக்கு புருஷன் இல்லை” என்றாள்.

“ஓ,” அவர், “நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல. இதை உள்ளபடி சொன்னாய்” என்றார். அவள், கவனியுங்கள், அந்த ஸ்திரீ...இப்பொழுது...

அவர் அதைச் செய்வதைக் கண்ட யூதர்கள் அவரை என்னவென்று அழைத்தனர்? அவரை மேசியா என்று அவர்கள் அடையாளங் கண்டு கொண்டார்களா? இல்லை. அவர் என்னவாக இருந்தார் என்று அவர்கள் கூறினர்? “பெயல்செபூல், ஒரு குறிசொல்பவர்,” மேலும் “அந்த வல்லமை பெயல்செபூல்” என்றார். பகுத்தறிந்து கொண்டிருந்த தேவனுடைய ஆவியை அவர்கள் “அசுத்தமான காரியம்” என்று அழைத்தனர்.

அவர், “நீங்கள் எனக்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசினால், நான் உங்களை மன்னிப்பேன். ஆனால் ஒரு நாள் பரிசுத்த ஆவியானவர் அதேக் காரியத்தைச் செய்ய வருகிறார்; அதற்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசினாலும், உங்களுக்கு மன்னிப்பு கிடையாது” என்றார்.

230 ஆகவே, இன்றைக்கு அப்படி நடந்திருந்தால், நாம் எங்கே இருக்கிறோம் என்று நீங்கள் பாருங்கள். “அதற்கு விரோதமான ஒரு வார்த்தையும், இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படாது.” எனவே இந்தச் சந்ததி என்ன செய்துள்ளது என்பதை நீங்கள் பாருங்கள். இப்பொழுது அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

திடமாகச் சிந்தியுங்கள். இந்தப் பயபக்திக்குரிய வார்த்தைகளை ஆராய்ந்து பாருங்கள்.

231 இப்பொழுது யூதர்கள், “இந்த மனிதன் பெயல்செபூலினால் பிசாசுகளைத் துரத்துகிறான். இவன் பிசாசு, குறி சொல்பவன்” என்றனர் குறிசொல்பவன் பிசாசு என்பதை நாம் அறிவோம். எனவே அவன், “இந்த மனிதன் ஒரு குறிசொல்பவன்” என்றான்.

232 எனவே அவர் அவரைக் குறிசொல்பவர் என்று அழைத்ததற்காக அவர்களை மன்னிக்கிறார். ஆனால் அவர் மரித்து, பரிசுத்த ஆவியானவர் திரும்பி வந்தபிறகு, அப்பொழுது அது வித்தியாசமாக இருந்தது. பார்த்தீர்களா? அது, அது புறஜாதி தலைமுறைக்கானது. இப்பொழுது கவனியுங்கள்.

இப்பொழுது, யூதர்கள் அதை ஏற்கனவே கண்டிருந்தனர், அதைக் கண்டனம் செய்தனர்.

233 சமாரியர் அதை ஏற்றுக்கொண்டனர், அவள், “ஐயா, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்” என்றாள். சமாரியர்களே, நீங்கள் அதைக் குறித்து என்ன செய்யப் போகின்றீர்கள்? “நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். மேசியா வரும்போது அவர் எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்” என்றாள். பாருங்கள், மேசியா யாராயிருப்பார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். “கிறிஸ்து என்னப்பட்ட மேசியா வரும்போது, இந்தக் காரியங்களை எங்களுக்குச் சொல்லுவார் என்று நாங்கள் அறிவோம். ஆனால் நீர் யார்? நீர் அவருடைய தீர்க்கதரிசியா?” என்று கேட்டாள்.

அவர், “நானே அவர். நானே அவர்” என்றார்.

234 மேலும் இதன் பேரில்! இப்பொழுது கவனியுங்கள். இதன் பேரில், அவள் தன்னுடைய தண்ணீர் குடத்தை விட்டுவிட்டு, நகரத்திற்குள் ஓடி, மற்றும் வந்து…ஊருக்குள்ளே ஓடி, தெருக்களில் இருந்த மனிதர்களிடத்தில் சென்று, “நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்! இது மேசியா அல்லவா?” என்றாள். அந்த ஸ்திரீ அதைக் கூறியிருந்தபடியால், ஊரார் யாவரும் அவர்மேல் விசுவாசம் கொண்டனர் என்று வேதம் கூறியுள்ளது. அவர் அவளிடத்தில் கூறினார்…ஏனென்றால் அவர் மேசியாவாயிருந்தார்.

235 இப்பொழுது, அதுவே நேற்றைய மேசியாவின் அடையாளமாயிருந்தால், அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார், அது இன்றும் அதே அடையாளமாக இருக்கும். அது சரியா? எத்தனை பேர் அதை ஒத்துக்கொள்வீர்கள்? நிச்சயமாக, ஆம், அது அதேவிதமாகவே உள்ளது. சரி.

236 இப்பொழுது, அது ஏதேனும் வித்தியாசமான மனிதனாயிருக்குமா? இல்லை. அவர் நேசித்தார், அவர் அழுதார், அவர் கண்ணீர் விட்டார், அவர் உறங்கினார், அவர் வனாந்தரத்திற்குச் சென்றார், மீன்பிடிக்கச் சென்றார், மற்றவர்களைப் போலவே

செய்தார். அவர் ஒரு சாதாரண மனிதனாயிருந்தார், பாருங்கள், ஆனால் அதே சமயத்தில் அவர் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாயிருந்தார்.

237 இப்பொழுது, இப்பொழுது நாம் வேதாகமத்தை நினைவு கூருவோம், அது நமக்கு முன்பிருந்த வழியைக் கூறுகிறது, அங்கே நாம் அநேக வேதவாக்கியங்களுக்குச் செல்கிறோம், “ஒரு நாள் உண்டு. அது பகலுமல்ல இரவுமல்ல,” என்று வேதம் கூறுகிறதை நிரூபிக்கிறது, ஒரு மந்தாரமான நாள், ஸ்தாபனங்கள் மற்றும் சபை, இரட்சிக்கப்படுவதற்கு போதுமானது, “ஆனால் சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும்.” எத்தனை பேர் அதை வேதத்தில் வாசித்திருக்கிறீர்கள்? நிச்சயமாக. பார்த்தீர்களா?

238 இப்பொழுது வேறு வார்த்தைகளில் கூறினால், சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறது. அதே சூரியன் கிழக்கில் உதயமாகி, மேற்கில் மறைகிறது. சரி, தேவனுடைய குமாரன் கு-மா-ரன் கிழக்கில், கிழக்கத்திய ஜனங்களின் மேல் எழும்பினார். நாகரிகப் பயணம், சூரியனுடன் பயணிக்கிறது, நாம் இப்பொழுது மேற்குக் கடற்கரையில் இருக்கிறோம். நீங்கள் அக்கரைக்குச் சென்றால், நீங்கள் சீனாவிற்குச் செல்கிறீர்கள், மீண்டும் கிழக்கிற்கு திரும்பிச் செல்வீர்கள். ஆகையால் கிழக்கில் பிரகாசித்த அதே குமாரன் இப்பொழுது மேற்கில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார், அதே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடும், அதே அடையாளங்களோடும், அதே அற்புதங்களோடும், அதே மேசியா. அது சரியா? “சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும், மகிமைக்கு செல்லும் பாதையை நீ நிச்சயம் கண்டடைவாய்.” அது உண்மை.

239 நாம் சாயங்காலத்தில், சாயங்கால வெளிச்சத்தில் இருக்கிறோம். சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கிறது. மேசியா நமக்கு மத்தியில் இருக்கிறார். தேவனுடைய குமாரன் பரிசுத்த ஆவியின் ரூபத்தில் நமது மத்தியில் இருக்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] நீங்கள் என்னை அவருடைய ஊழியக்காரன் என்று விசுவாசிக்கிறீர்களா? [“ஆமென்.”] நான் உங்களுக்குக் கூறிக்கொண்டிருப்பது சத்தியம் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? [“ஆமென்.”] நேற்று முந்தின காலையில், நேற்று முந்தின காலையில் அந்தத் தூதனின் கதையை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? [“ஆமென்.”] நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? [“ஆமென்.”] அப்படியானால் பரலோகத்தின் தேவன், வானவில் ரூபத்தில் எனக்குத் தோன்றின தேவன், அவர் பேசட்டும். என்னுடைய சரீரத்தை அவருக்கென்று பிரதிஷ்டை செய்து, என்னுடைய ஆத்துமா, ஆவி, சிந்தை அவருடைய மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்படட்டும். நான் அந்தக் கடைசி அணிலை தேடிக்கொண்டிருந்தபோது, அதுவே கடைசி அணிலாயிருக்கும் என்று அறிந்திருந்தபோது, அப்பொழுது மணி

பத்து அடிக்க மூன்று நிமிடங்கள் இருந்தது, அது பத்து மணிக்குள் நிகழுமென்று நான் கூறியிருந்தேன்.

உங்களுக்குத் தெரியும், அவர், “நீ என்ன வேண்டுமானாலும் கூறு. அது அந்தவிதமாகவே இருக்கும்” என்றார். அவர் இன்னும் அதைத் தவறினதில்லை, எதுவாக இருந்தாலும் சரி. “நீ என்ன வேண்டுமானாலும் கூறு.”

ஆனால் எட்டாவது முறை ஒரு சிறு ஸ்திரீயின் பேரில் நடந்தது. அவள் இப்பொழுது அங்கே பின்னால் அமர்ந்திருக்கிறாள் என்று நான் நினைக்கிறேன். சகோதரன் ரைட் இங்கே அமர்ந்திருப்பதை நான் காண்கிறேன். ஹாட்டி ரைட், அவள் தன்னுடைய இரண்டு பிள்-...அங்கே அவள் இருக்கிறாள், இப்பொழுது அங்கே இருக்கிறாள். அவளுடைய இரண்டு பிள்ளைகளின் இரட்சிப்பு, (அது அப்படித்தானே?) அதற்கு எதிராக இருந்தார்கள். நான், “இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நான் உன்னுடைய பிள்ளைகளை உனக்கு அளிக்கிறேன்” என்றேன். அவர்கள் அப்படியே அவள் மடியில் விழுந்தனர்.

240 எட் டால்டன், பாப்டிஸ்டு, இங்கே அமர்ந்திருக்கிறார், கென்டக்கியிலிருந்து வந்தவர், இங்கே அமர்ந்திருக்கிறார். எட், உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர்? பன்னிரண்டு பிள்ளைகள். இங்கே நின்றுகொண்டு, அவர் தன்னுடைய பிள்ளைகளுக்காகக் கேட்டார். நான் கட்டிடத்தை விட்டு வெளியே நடந்து வந்தேன். எட் மீண்டும் என்னிடத்தில் வந்தார்; நான், “எட்” என்றேன்.

பரிசுத்த ஆவியானவர் என்மேல் இருந்து, “அதை அவருக்குக் கொடு, அதை அவருக்குக் கொடு” என்றார்.

241 அதற்கு நான், “உன்னுடைய பிள்ளைகளை நான் உனக்கு அளிக்கிறேன்” என்றேன். அவர்கள் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர். அவருடைய வாலிபப் பையன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு, அழுதுகொண்டிருந்தான், அவர் இங்கே வந்திருந்தபோது அவன் இரட்சிக்கப்பட்டிருந்தான். இந்தப் பாப்டிஸ்டு சகோதரன் கீழே இருந்து...ஓ, ஓ, அவர் பேசும்போது அவர் எவ்வளவு அற்புதமாயிருக்கிறார்!

242 இப்பொழுது, அவர் கிறிஸ்துவென்று தம்மை காண்பிக்கும்படியாகவும், நான் கூறுவது சத்தியம் என்று வெளிப் படுத்தும்படியாகவும் அவருடைய மகிமைக்காக நான் அவரிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

243 இப்பொழுது, அந்த அவிசுவாசி தப்பிக்க முடியாது. இங்கே இருக்கிற, நான் அறியாத, சுகவீனமாயும், தேவையுடையவர்களாகவும், தேவனின் தேவையையுடைய ஜனங்களும், எங்கள் வாசல்களில் உள்ள அந்நியர்களும், எனக்குத்

தெரியாத ஜனங்களும், இங்குள்ளோரும், தேவனைக் குறித்த ஒரு தேவை உங்களுக்கு இருந்தால், உங்கள் கரங்களை உயர்த்தும்படி விரும்புகிறேன். எல்லாவிடங்களிலுமுள்ள ஜனங்கள். அது சரி, கிட்டத்தட்ட எல்லாவிடங்களிலும் பொதுவானது என்று நான் நினைக்கிறேன். எனக்குத் தெரியாத ஜனங்கள். தெரிந்த ஒருவரை நான் அழைத்தால், அவரும் எனக்குத் தெரிந்தவராக இருந்து, நீங்களும் என்னை அறிந்திருந்து, மேலும்—மேலும் நாங்கள் ஒருவருக்கொருவர் பழக்கமிருந்தால், நீங்கள் ஒன்றுமே கூற வேண்டாம், நீங்கள் அமைதியாயிருங்கள். அவர் தேவனுடைய குமாரனாயிருப்பாரானால், அவர் தேவனுடைய குமாரனே, என்னுடைய செய்தி சரியானதாயிருந்தால், அந்தத் தூதன்…

244 பத்து மணிக்கு மூன்று நிமிடங்கள் இருந்தபோது, நான், "ஓ தேவனே, அந்த வானவில்லில் சற்று முன்பு எனக்குக் காட்சியளித்து, அதற்கு மூன்று நிமிடங்கள்தான் உள்ளது. நான் எந்த அணிலையும் காணவில்லை. அதற்கு மூன்று நிமிடங்கள் மாத்திரமே உள்ளது, நீர் எனக்கு ஒன்றைக் கொண்டு வர வேண்டும்" என்றேன். தேவன் என்னுடைய நியாயாதிபதியாயிருக்கிறபடியால், நான் என்னுடைய கரத்தை வேதாகமத்தின் மேல் வைத்து அதைப் பயபக்தியுடன் கூறுகிறேன். சத்தியம் செய்வதில் நம்பிக்கையில்லை, வேதம் அதைக் கூறவில்லை; அதைச் செய்யக் கூடாது என்று அது கூறுகிறது. ஆனால் தேவன் என்னுடைய நியாயாதிபதியாயிருக்கிறார், ஒரு அணில் மரத்தின் கீழே ஓடிச் சரியாக அப்படியே அமர்ந்தது. அவர் அதில் ஒருபோதும் தவறியதேயில்லை; அவர் அதை ஒருபோதும் செய்ததேயில்லை. அந்தக் காரியங்களை அறிந்துள்ள அநேகர் இங்குள்ளனர். அவர், அதே தேவன் இங்கே இருக்கிறார் என்பதை நான் அறிவேன்.

245 அங்கே ஜெப அட்டைகள் கொடுக்கப்படுகின்றன. எனக்கு அவைகள் வேண்டாம். நாம் இன்னும் ஒரு சில நிமிடங்களில் அவர்களுக்காக ஜெபிக்கப்பட அனுமதிப்போம், அவர்கள் வரிசையில் வருவார்கள். இங்குள்ள ஜனங்களோ, அல்லது என்னவாயினும் எனக்கு வேண்டாம்.

246 எனக்கு அந்நியர்கள் வேண்டும். என்னை அறியாத ஜனங்கள் எனக்கு வேண்டும். நீங்கள் உங்களுடைய சிந்தையில் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன், அதாவது நீங்கள், "தேவனே, அந்த மனிதன் என்னை அறிந்திருக்கவில்லை" என்று சிந்தித்து, கூறி, ஜெபிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

247 ஒரு நாள் ஒரு சிறிய ஸ்திரீ கூட்டத்தினூடாக நெருக்கி வந்தாள். அவளுக்கு உதிரப்போக்கு இருந்தது. அவள் கூறினாள்…

248 அவர்கள் எல்லோரும், "இதோ அவர் இருக்கிறார்! அவரை நோக்கிப் பாருங்கள்! இதோ அந்தக் கலிலேயன்" என்று கூறிக்கொண்டிருந்தனர். எல்லா ரபீக்களும் அங்கே நின்று

கொண்டு, "ரபீ, நாங்கள் உம்மிடத்திலிருந்து ஒரு அடையாளத்தைத் தேடுகிறோம்" என்று, அதைப் போன்றே கூறிக் கொண்டிருந்தார்கள்.

249 இந்தச் சிறிய ஸ்திரீ, "நான் அவரைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன். அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டால் நான் சொஸ்தமாவேன் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றாள். எத்தனை பேர் அதை அறிவீர்கள்? அவள் அவரைத் தொட்டாள்.

250 அவரால் உணர முடிந்தது என்றல்ல; ஆனால் அவர் நின்று திரும்பி, "என்னைத் தொட்டது யார்? யாரோ என்னைத் தொட்டார்" என்றார். எல்லோரும் மிகவும் அமைதியாக இருந்தார்கள். அதற்கு அவர், "யாரோ ஒருவர் என்னைத் தொட்டார்" என்றார். "என்னைத் தொட்டது யார்?" என்று கேட்டார்.

251 அவர் அந்தச் சிறிய ஸ்திரீயைக் கண்டுபிடிக்கும் வரை சுற்றும் முற்றும் பார்த்தார். அவளால் தன்னை மறைத்துக்கொள்ள முடியவில்லை. அதைக் கண்டறிய முடியவில்லை. அவளைக் கண்டுபிடித்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார். அவர், அவளுடைய உதிரப்போக்கு நின்று போனதென்றும், அவளிடம் கூறினார்...ஏனென்றால் அவள் விசுவாசித்திருந்தாள், அவளுடைய விசுவாசம் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? சரி.

252 இப்பொழுது, அவர் இன்றைக்கு தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து, நம்முடைய அறிக்கையின் பேரில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிற ஒரு பிரதான ஆசாரியரா? நம்முடைய பலவீனங்களைக் குறித்து தொடப்படக்கூடிய பிரதான ஆசாரியராய் அவர் இருக்கிறார் என்று வேதம் கூறுகின்றதா? அது சரியா? சரி, நீங்கள் சுகவீனமாயிருந்தால், நீங்கள் ஜெபிக்க தொடங்குங்கள், "தேவனாகிய கர்த்தரே, நான் ஒரு செய்தியைக் கேட்டிருக்கிறேன். இந்த மனிதனை எனக்குத்—எனக்குத் தெரியாது. நான்—நான் இங்கே கூடாரத்தில் இருக்கிறேன். நான் இங்கு வருவதில்லை, இது என்னுடைய வீட்டு சபையல்ல. நான் வேறொரு இடத்திலிருந்து வந்திருக்கிறேன். நான் ஊருக்கு வெளியிலிருந்து வந்திருக்கிறேன், நான் வேறு எங்கிருந்தோ வந்திருக்கிறேன். எனக்கு அந்த மனிதனைத் தெரியாது. ஆனால் அவர், அது நீரே என்று அது மிகவும் உறுதியாகக் கூறுவது போன்று தென்படுகிறது, அவருக்கு நீர் பிரசன்னமாகி, அவருடைய செய்தி சரியென்றும், நீர் இந்தக் காரியங்களை எப்படிச் செய்கிறீர் என்றும் கூறினீர். இப்பொழுது, எனக்கு அந்த மனிதனைத் தெரியாது, ஆனால் நான் உம்மை அறிந்திருக்கிறேன். ஆகையால் அவர் உமக்குத் தன்னை பிரதிஷ்டை செய்திருந்தால், நீர் அவருடைய சரீரத்தை உபயோகித்து உம்முடைய சொந்த வார்த்தைகளினூடாகப் பேசிக்கொண்டிருந்தால், அவர் என்னிடத்தில் பேசட்டும். கர்த்தாவே, நான் உம்முடைய வஸ்திரத்தைத் தொடட்டும்" என்று கூறுங்கள்.

அவர் செய்கிறாரா இல்லையா என்று பாருங்கள்! அவர் தேவனா என்று பாருங்கள்.

253 அவர் இன்னமும் தேவனாயிருப்பாரானால், அவர் பேச விரும்பும் அதே வார்த்தைகளைப் பேச என்னுடைய உதடுகளை அவரால் உபயோகிக்க முடியும், ஏனென்றால் அவருக்கு என்னுடைய உதடுகளும் உங்களுடைய கண்களும் தவிர வேறு உதடுகளும் கிடையாது. நமது கண்களைத் தவிர அவருக்குக் கண்கள் கிடையாது. எனவே அவர் இறங்கி வந்து, நம்முடைய சரீரத்தினூடாகத் தம்முடைய சபைக்குக் கிரியை செய்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? கிரியை செய்கிறார், தாமே! அதைத்தான் அவர் கூறினார். “நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்.” அது சரியா? “அதே கிரியைகளை நீங்கள் செய்வீர்கள்.” அவர் மேசியா என்பதை நிரூபிக்க அவர் செய்த கிரியைகளாயிருந்தன. இப்பொழுது, அவர் மேசியாவாயிருந்தால், அவர் மேசியாவாயிருக்கிறார், அப்பொழுது, அது உண்மையாயிருக்கிறது, அப்பொழுது அவர் செய்த அதே கிரியைகளை இப்பொழுது, தம்முடைய சபையினூடாகச் செய்து கொண்டிருக்கிறார். உங்களுடைய எல்லா ஸ்தாபனங்களையும் பொருட்படுத்தாமல், அது சரியென்று அது நிரூபிக்கிறது. ஓ, அல்லேலூயா!

254 எளிய வயோதிக சகோதரன் கிட் மற்றும் சகோதரி கிட் இங்கே அமர்ந்திருக்கிறாள், இருவருக்குமே எண்பது வயதாகிவிட்டது. நான் பிறப்பதற்கு முன்பே அவர்கள் பிரசங்கம் செய்து வருகின்றனர். இங்கே அன்றொரு காலை அவர் ஒரு புற்று நோயினால் மரிக்கும் தருவாயில், சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தார், அவருடைய சுக்கிலவினால் வெட்டப்பட்டிருக்கும்; ஓஹையோவில் இருந்தார். என்னுடைய மிக அருமையான நண்பர்களாயிருந்து வருகிறார்கள். சகோதரி கிட் என்னைத் தொலைபேசியில் அழைத்து, “பில்லி, நீங்கள் துரிதமாக வாருங்கள். அவர் இப்பொழுது மரித்துக் கொண்டிருக்கிறார்” என்றாள். பில்லியும் நானும் என்னுடைய பழைய பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனத்தை அங்கேயே எரித்துவிட விரும்பினோம்.

255 நான் அங்கு அறைக்குச் சென்றபோது, நான் அங்குச் சென்றடைந்தவுடனே, பரிசுத்த ஆவியானவர், “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்று பேசினார்.

256 அங்கே அவர் தேவனுடைய மகிமைக்கு ஒரு சாட்சியாக நிற்கிறார், அவருடைய மருத்துவரையும் கூடக் கலக்கமடைய செய்தது. அது அப்படியே, அவர் தேவன்! என்னால் அதைச் செய்ய முடியுமா? இல்லை, ஐயா! என்னுடைய வார்த்தைகள் எந்த மனுஷனுடைய வார்த்தைகளுக்கும் மேலானவைகளல்ல. ஆனால் அது **கர்த்தர் உரைக்கிறதாவது**! ஆமென்.

257 அநேக ஆண்டுகளுக்கு முன்பு, கென்டக்கியில் உள்ள மலைகளில், ஒரு சிறிய தேவனுடைய சபை அல்லது அவர்களில் சிலரைக் குறித்து, மலைச் சரிவுகளில் மேலும் கீழும் கொண்டு சென்று, தாய் கிட் ஒரு கட்டையால் சோளத்தை அடித்துப் பிரித்து, ஒரு கூட்ட பிள்ளைகளைப் போஷித்து; ஒரு தொட்டியின் மேல் கழுவி, சுவிசேஷ வேலை செய்து கொண்டிருந்த தன்னுடைய கணவருக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தள்.

258 அவர்கள் இங்கே எண்பது வயது நிரம்பியவர்களாய், இன்றைக்கு இங்கே உட்கார்ந்து கொண்டு, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், நான் பிரசங்கம் செய்யும் ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் நூறு மைல்களுக்கு கூடுதலாகக் காரில் பயணம் செய்து இங்கு அடைகின்றனர் அவர்களால் அதைக் குறித்து கேட்க முடிந்தால் நலமாயிருக்கும். நிச்சயமாகவே, நாங்கள் அவர்களுக்கு அழைப்புகளை அனுப்புகிறோம், அவர்கள் வர விரும்புகிறார்கள். அவர்களுடைய சிறிய இருதயங்களை ஆசீர்வதியும். அது உண்மை. கூடுமானால், இந்தக் காலையில் இங்குள்ள ஒவ்வொருவரும் அவர்களுடன் கரங்களைக் குலுக்கி, அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இப்பொழுது ஜெபியுங்கள்.

259 ஓ, அவர் தேவன் என்பதை அறிந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என்னே ஒரு உணர்வு! நீங்களோ, “சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் எதற்காகத் தாமத்திதுக் கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்கலாம். நான் அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். அது ஒரு...நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். இது மற்றொரு அபிஷேகம்.

260 அவர் வந்து அதைச் செய்வாரேயானால், அப்பொழுது இங்குள்ள சுகவீனமாயிருக்கிற எத்தனைபேர் அவரைத் தங்களுடைய சுகமளிப்பவராக ஏற்றுக்கொள்வார்கள்? சுகவீனமான எல்லா ஜனங்களே, அவருக்குச் சித்தமானால்—அவர் அதைச் செய்தால், அப்படியே உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். சுகவீனமாயிருக்கிற ஒவ்வொருவரும், மேசியாவாகிய கிறிஸ்து ஜனங்களுக்கு மத்தியில் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதைக் காணும்படியாக, உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள்.

261 ஜெபியுங்கள். விசுவாசியுங்கள். வீட்டின் இந்தப் பக்கத்தில் நான் அர்ப்பணிப்பேன். அநேகர் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அபிஷேகத்தைக் காண்கிறேன்.

262 பாருங்கள். அங்குள்ள அந்த அக்கினி ஸ்தம்பத்தையும், வாஷிங்டன் டிசி-யில் விஞ்ஞானத்தால் தொங்கவைக்கப்பட்டதை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? நீங்கள் அதை அறிவீர்கள். மோசேயை வழி நடத்தின அதே அக்கினி ஸ்தம்பம்,

சரியாக இங்கே அதன் புகைப்படம் இங்கே உள்ளது. விஞ்ஞானம் கூட, “என்றோ ஒரு நாள் அது பத்து சென்டுகள் கொண்ட கடை அலமாரிகளில் இருக்கும். இயற்கைக்கு மேம்பட்ட உருவம் மாத்திரமே எப்பொழுதும் புகைப்படம் எடுக்கப்பட்டது” என்றது.

263 அதே தூதன் இப்பொழுது இங்கே பிரசங்க பீடத்தில் இருக்கிறார். அதைத் தேடுங்கள். நீங்கள் அதை விசுவாசிக்கும்படி நான் உங்களுக்குச் சவாலிடுகிறேன். வெளியாட்களாகிய நீங்கள் விசுவாசியுங்கள்.

264 இப்பொழுது அது எங்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் கவனிக்க வேண்டும். ஒவ்வொருவரும் பயபக்தியாயிருங்கள். அவருடைய பிரசன்னத்தில், அந்தப் பிரமிப்பு!

265 நான் ஒரு மனிதனைக் காண்கிறேன். இதோ அது உள்ளது. அவர் என்னுடைய இடப்பக்கமாக, இங்கே பின்னால் மூலையில் அமர்ந்திருக்கிறார். அவர் சைனஸ் என்ற எலும்பு உட்புழைத் தொல்லையினாலும், மற்றும் வயிற்றுக் கோளாறினால் அவதியுற்றுக் கொண்டிருக்கிறார். நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள் எனக்கு அந்நியராயிருக்கிறீர்கள். அவர்தான் திரு. வெல்ஸ். திரு. வெல்ஸ், அதுதான் உங்களுடைய பெயர். நீங்கள் இங்கிருந்து வரவில்லை. நீங்கள் இல்லினாய்ஸில் உள்ள அரோரா என்று அழைக்கப்படுகின்ற ஒரு இடத்தில் இருக்கிறீர்கள். அது உண்மை. அது உண்மையா? நான் உங்களுக்கு ஒரு அந்நியன். அது உண்மையானால், உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். எழும்பி நில்லுங்கள். இயேசு கிறிஸ்து உங்களைச் சுகப்படுத்துகிறார்.

இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? “நீ விசுவாசிக்கக் கூடுமானால்.”

266 இப்பொழுது, அங்கே, அந்த நபர், நான் என் ஜீவியத்தில் ஒருபோதும் கண்டதேயில்லை, அவர் நம்மிடையே பரிபூரண அந்நியராக இருந்தார். அவர் வேறொரு மாநிலத்திலிருந்து வந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர், இப்பொழுது, அது அவருக்கு என்ன உரைத்துள்ளது என்பதை, நான் அந்த ஒலிநாடாவை கேட்கும் வரை, நான் அதை அறியமாட்டேன். அது உங்கள்மேல் வருகிற அபிஷேகமாயுள்ளது. ஆனால் அந்த மனிதன் அறிந்திருக்கிறான்.

267 உங்களுக்குக் கூறப்பட்டது உண்மையாயுள்ளது. ஐயா, அது சரியா? ஆம். நாங்கள் அந்நியர்கள். அவர் தன்னைக் குறித்து சாட்சியாக இருக்கட்டும்.

அதைச் செய்தது யார்? மேசியா, கிறிஸ்து.

268 இதோ ஒரு பெண்மணி பின்னால் இங்கே ஜனங்களுக்கு மத்தியில் அமர்ந்திருக்கிறாள். அவள்மேல் உள்ள ஒளியைப் பார்த்தீர்களா? அவள் ஒரு தோல் கோளாறினால் அவதியுற்றுக் கொண்டிருக்கிறாள். திருமதி பிட்மேன், நீங்கள்

ஓவன்ஸ்பரோவிலிருந்து வருகிறீர்கள். நீங்கள் ஒரு அந்நியராக இருந்தால், உங்களுடைய கரத்தை அசைத்துக் காட்டுங்கள். அந்தக் காரியங்கள் உண்மையா? உங்களுடைய கரத்தை அசைத்துக் காட்டுங்கள். தேவன் உங்களைச் சுகப்படுத்தினார். நான் அந்தப் பெண்ணை ஒருபோதும் பார்த்ததில்லை, ஒரு தரிசனத்தில் மட்டுமே பார்த்தேன்.

269 உங்களிடத்திலிருந்து நேர் எதிரே எல்லிஸ், திருமதி எல்லிஸ் என்ற பெயருடைய ஒரு ஸ்திரீ, ஒரு வாலிபப் பெண் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். அவளுக்குப் ஸ்திரிகளுக்கான கோளாறு உள்ளது. அவளும் ஒரு அந்நியர். அது உண்மையானால், உங்களுடைய கரத்தை அசைத்துக் காட்டுங்கள். அங்கே உங்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பது உங்களுடைய தாயாரா? அங்கே ஒரு பெண்மணி ஒரு பயத்தினால் அவதியுற்றுக் கொண்டிருக்கிறாள், அவள்மேல் ஒரு பயத்தின் மனப்பான்மையானது உள்ளது. அது உண்மையானால், பெண்மணியே, உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். சரி. பயம் போய்விட்டது. நீங்கள் வீட்டிற்கு செல்லலாம், சுகமாயிருங்கள். நீங்கள் விசுவாசிக்கும்படி நான் உங்களுக்குச் சவாலிடுகிறேன்.

270 பின்னால், மூலையில், மிகவும் பின்னால், மின்னசோட்டாவிலிருந்து வந்த ஒரு மனிதன், முதுகுத் தொல்லையோடு இருந்தார். உங்களுடைய பெயர் திரு. கார்ஸன் என்பதாகும். எழுந்து நில்லுங்கள். உங்களுடைய முதுகுத் தொல்லை நீங்கிவிட்டது. இயேசு கிறிஸ்து உங்களைச் சுகப்படுத்துகிறார்.

271 இங்கே பின்னால் ஒரு பெண்மணி அவதியுறுகிறாள். அவள் வெளியூரிலிருந்து வந்திருக்கிறாள். அவள் ப்ளூ தீவு என்றழைக்கப்படும் ஒரு இடத்திலிருந்து வருகிறாள். அவளுக்கு இருதயக் கோளாறு உள்ளது. அது சிக்காகோவிற்கு அருகில் உள்ளது. திருமதி பிரைடன் எழும்பி, உங்களுடைய சுகமளித்தலை ஏற்றுக்கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வீட்டிற்குச் சென்று சுகமாயிருங்கள்.

272 நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இந்தப் பகுதியைக் குறித்து என்ன? அது மேசியா என்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு மனிதன் எப்படி அறிவான்?

273 இதுவரை அழைக்கப்பட்ட இந்த ஜனங்கள் யாவரும், உங்களைக் குறித்து எனக்கு ஒன்றுமே தெரியாது என்பதை அறிந்திருக்கிறவர்கள், அழைக்கப்பட்டிருக்கிற ஜனங்களாகிய நீங்கள் எல்லோரும் உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். அங்கே பார்த்தீர்களா?

274 எனக்குப் பின்னால் உள்ள ஒரு அறையில் யாரோ ஒருவர் ஜெபித்துக் கொண்டிருக்கிறார். அது ஒரு வாலிப நபர், லேசான தலைமுடி கொண்ட, கான்சாஸில் உள்ள ஒரு உறவினருக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறான், அவனுக்குப் புற்றுநோய்

உள்ளது. வாசலுக்கு முன்பாக வாருங்கள். தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

275 எல்மர், அது உங்களுடன் ஏதோ ஒரு தொடர்பு கொண்டிருந்தது. அங்கே உங்களுடைய தந்தையும், அவருடைய மனைவியும் உட்கார்ந்து கொண்டிருப்பதை நான் காண்கிறேன். உயர் இரத்த அழுத்தம். நீங்கள் விசுவாசித்தால், தேவன் உங்களைக் குணமாக்குவார். எனக்குத் தெரியாது. அது உண்மை. இல்லையா? நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள்.

276 நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இயேசு கிறிஸ்து மேசியா என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவருடைய பிரசன்னம் இங்கே இருப்பதாக நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஒரு ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டபோது, அவர் பலவீனமடைந்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வல்லமை, பெலன், அவரிடத்திலிருந்து சென்றது. நான் இப்பொழுது மிகவும் சோர்வாயுள்ளேன். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

அப்படியானால் நாம் சற்று நேரம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

277 ஓ இயேசுவே, தேவனுடைய மேசியாவே, நீர் எப்பொழுதும் அருகாமையிலே இருக்கிறீர். நீர் தேவனுடைய குமாரன் என்பதையும், இப்பொழுது நீர் இங்கே இருக்கிறீர் என்பதையும் ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். உம்முடைய மகத்தான அடையாளங்களும் அற்புதங்களும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிதாவே, இவர்களை ஆசீர்வதியும். அவர்களை ஆசீர்வதியும் என்று நான் ஜெபிக்கிறேன். மேசியாவாகிய நீர் இங்கே நின்று கொண்டிருக்கிறீர் என்று அவர்கள் தங்களுடைய முழு இருதயத்தோடு இப்பொழுதே விசுவாசிப்பார்களாக. அதை எவராலும் செய்ய முடியாது. கர்த்தாவே, அது மனிதனால் கூடாத காரியம். மேசியாவின் வல்லமை இந்தவிதமான ஒரு சிறிய, தாழ்மையான இடத்திற்குள் வருவதைக் காண்பது அற்புதம், ஏனென்றால் கர்த்தாவே நீர் அதை வாக்குத்தத்தம் செய்தீர். காரணம், உம்முடைய கிருபை இங்கே எங்களுக்குக் கிருபையாக இருக்கிறது. ஏனென்றால் அது அதைச் செய்வதாக உம்முடைய வாக்குத்தத்தம் இருக்கிறது, நீர் அதைச் செய்திருக்கிறீர். நீர் உம்முடைய ஜனங்களை விட்டுச் செல்லவில்லை என்பதை நாங்கள் காண்கிறோம்.

278 இப்பொழுது, பிதாவாகிய தேவனே, ஜெப அட்டைகளை வைத்துள்ளவர்கள், ஜெப வரிசையில் வரும்போது, அவர்கள் விசுவாசிக்கும்படியான விசுவாசத்தை உடையவர்களாயிருப்பார்களாக. ஓ சர்வ வல்லமையுள்ள தேவனே, கரங்கள் அவர்கள்மேல் வைக்கப்படும்போது, அவர்கள் இங்கிருந்து வெளியே சென்று, களிகூர்ந்து, சத்தமிட்டு, தாங்கள் சுகமாக்கப்பட்டிருக்கிறோம் என்று தேவனைத் துதிப்பார்களாக. கர்த்தாவே, அதை அருளும்.

279 இரட்சிக்கப்பட்டிருக்கிற இவர்கள் தேவனுக்கு இரகசியம் ஏதும் இல்லை என்பதை அறிந்து கொள்ளக்கடவர்கள். தேவன் இருதயத்தின் இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்; அவர் நம்முடைய சிந்தையில் உள்ள ஒவ்வொரு சிந்தனையையும் அறிந்திருக்கிறார். பிதாவே, இதை அருளும். நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

280 இப்பொழுது, கூட்டத்தில் ஜெப அட்டைகளை வைத்திருக்கும் நீங்கள், கூடாரத்தைச் சுற்றிலும் உள்ள ஜனங்களாகிய நீங்கள், ஜெப அட்டைகள் வைத்திருப்பவர்கள், நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். ஒரு மனிதனால் அதைச் செய்ய முடியாது என்று விசுவாசியுங்கள். அது தேவனிடத்திலிருந்து வர வேண்டும். தேவன் அதைச் செய்வதாகக் கூறினது தேவனுடைய வாக்குத்தத்தம் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] சரி. அப்படியானால் யாரோ ஒருவர் மனிதனைத் தவிர இங்கே இருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

281 நான் தேவனுக்கு முன்பாக இந்த வார்த்தையைப் பயபக்தியுடன் ஏற்றுக்கொள்கிறேன். பேசப்பட்ட ஜனங்கள் யாராயிருந்தாலும், நான் அவர்களை அறியேன், அவர்களுக்கு என்னையும் தெரியாது. அவர்கள் எங்கிருந்தாலும், இங்குள்ள கூடாரத்திற்குள் வந்த அந்நியர்களாயிருக்கிறார்கள்.

282 இங்கே கூடாரத்தில் உள்ள ஜனங்களைக் குறித்து சில தரிசனங்களை நான் காண்கிறேன், ஆனால் அவர்களை விட்டுவிடுகிறேன், ஆம், அவர்களை அப்படியே விட்டுவிடுகிறேன்.

283 அழைக்கப்பட்ட அந்த ஜனங்கள், நீங்கள் யாராயிருந்தாலும், நீங்கள் அந்நியர் என்பதை மற்றவர்கள் காணும்படியாக, உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். பார்த்தீர்களா? ஒவ்வொன்றும், எல்லோரும் அந்நியர்கள்.

284 ஏதோ ஒன்று என்னை அசைத்துக் கொண்டேயிருக்கிறது. எனக்கு முன்பாக எல்லா நேரத்திலும் ஒரு கறுப்பு நிற பெண்மணி தோன்றுவதை நான் காண்கிறேன், அவளுக்கு மூட்டு வீக்கமும், உயர் இரத்த அழுத்தமும் உள்ளது. ஆம். நீர் எங்கள் மத்தியில் ஒரு அந்நியராயிருக்கிறீர். நீங்கள் மெம்பிஸிலிருந்து வந்திருக்கிறீர்கள், திருமதி சல்ஸ். அதுதான் உங்களுடைய பெயர். நீங்கள் இங்கு முதன் முறையாக வந்துள்ளீர்கள். நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு கர்த்தரை விசுவாசிக்கிறீர்களா? அதன்பின்னர் நீங்கள் வீட்டிற்குச் சென்று இரட்சிக்கப்பட முடியும், சுகமடைய முடியும். தேவன் அதை அவளுக்காக எடுத்துக்கொள்கிறார்.

285 ஒவ்வொருவரும் உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள். இப்பொழுது ஒவ்வொருவரும் உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். உங்களுடைய முழு இருதயத்தோடும்

விசுவாசியுங்கள். உங்களுடைய கரங்களை ஒருவர் மீது ஒருவர் வையுங்கள்.

சகோதரன் நெவில், இங்கே வாருங்கள். இங்கே வந்து ஜெபத்தை ஏறெடுங்கள்.

286 நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், சகோதரன் நெவில் ஜெபிக்கப் போகிறார்.

61-0827 கிருபையின் செய்தி
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:



VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org